அத்தியாயம் 1

# பேரண்டபொருளாதார அபிவிருத்திகள்

## சுருக்கம்

பல்வேறு துறைகளிடையே ஏற்பட்ட பரந்தளவிலான மீட்சியுடன் இலங்கை 2024ஆம் ஆண்டில் முன்னேற்றமடைந்தது. இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட நாட்டின் சுதந்திரத்திற்கு பிந்தைய வரலாற்றில் பதிவாகிய மிகக் கடுமையான நெருக்கடியைத் தொடர்ந்து இச்சாதகமான நடவடிக்கை நிகழ்கின்றது. 2022ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிறன்மிக்க சரிப்படுத்தும் இறை மற்றும் நாணய கொள்கை வழிமுறைகளின் ஒன்றிணைவானது மிக உறுதியான பொருளாதாரச் சூழலைத் தோற்றுவித்து நிலைபெறத்தக்க வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது. தற்போதைய பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம், அண்மையில் நிறைவடையும் நிலையிலுள்ள வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு மற்றும் மீளப்புதுப்பிக்கப்படும் முதலீட்டாளரின் நம்பிக்கை என்பனவற்றின் மூலம் பொருளாதார முன்னேற்றம் ஆதரவளிக்கப்பட்டது. இதுபோன்ற சரிப்படுத்தும் வழிமுறைகளின் சாதகமான தாக்கமானது தற்போது பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளிலும் தெளிவாகப் புலப்படுகின்றது. மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோளான உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை பேணுதலை அடைவதற்கான முயற்சிகளின் விளைவுகள் தெளிவாக புலப்பட்டது. பொருளாதார நெருக்கடி காலத்தில் முன்னெப்பொழுதுமில்லாத அளவில் காணப்பட்ட விலை அதிகரிப்புக்கள் மக்களுக்கும், தொழில்களுக்கும் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் சுமையை ஏற்படுத்தியிருந்தன. எனினும், இறுக்கமான இறைக்கொள்கையுடனும் சாதகமான உலகளாவிய விலை அபிவிருத்திகளுடனும் இணைந்து, சரியான நாணயக் கொள்கை வழிமுறைகளைக் கொண்டு, பணவீக்கமானது 2023இலிருந்து குறிப்பிடத்தக்க பணவீக்க வீழ்ச்சிப் போக்கினைக் காண்பித்துள்ளது. நிர்வாகரீதியாக நிர்ணயிக்கப்பட்டதும் செலவுப் பிரதிபலிப்புமிக்கதுமான வலு விலைகள் குறிப்பிடத்தக்களவில் குறைந்தமையானது 2024 செத்தெம்பலிருந்து பணவீக்கத்தை எதிர்மறையாக திரும்புவதற்கு வழிவகுத்தது. பணச்சுருக்கத்தின் தற்போதுள்ள தற்காலிக காலப்பகுதியானது வாழ்க்கைச் செலவையும் அதேபோன்று உற்பத்திச் செலவையும் ஓரளவிற்குத் தளர்த்துவதற்கு உதவும். தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையானது வியாபாரங்கள் மற்றும் வீட்டுத்துறைகளின் நுகர்விற்கும் முதலீட்டிற்குமான கொடுகடனை ஊக்குவிக்கும் வகையில், பரந்தளவில் சந்தை வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு தூண்டியது. இதன்விளைவாக, குறிப்பாக 2024ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் நிதியியல் நிறுவனங்களினால் தனியார் துறைக்கான கடன்வழங்கல் அதிகரிக்கப்பட்டது. சவால்மிக்க உலகளாவிய சூழலுக்கு மத்தியில் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை பாரியளவிலான உறுதிப்பாட்டை காண்பித்தது. அதேவேளை, அண்மையில் நிறைவடையும் நிலையிலுள்ள வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் வெற்றிகரமானத் தொடர்ச்சியும் வெளிநாட்டுத் துறையை மேலும் வலுவடைவதற்கு உதவியது. வணிகப்பொருள் இறக்குமதிகளின் மீட்சியுடன் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்திருந்தபோதிலும், 2024ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்து ஈட்டப்பட்ட வருவாய்களின் குறிப்பிடத்தக்க மேம்பாடு, தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மிகையொன்றை பதிவுசெய்வதற்கு நாட்டை இயலச்செய்திருந்தது. நாட்டிற்கான குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் திரவத்தன்மையை அதிகரிக்கச்செய்வதற்கு உதவியது. 2024ஆம் ஆண்டில் மத்திய வங்கி வரலாற்றிலேயே உயர்ந்தளவான வெளிநாட்டுச் செலாவணியை கொள்வனவுசெய்வதற்கு இவ்

1

**அவிருத்திகள் வழிவகுத்தன. இதன்விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறிப்பிட்டத்தக்களவிற்கு அதிகரித்த அதேவேளை செலாவணி வீதம் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் உயர்வடைந்தது. அதேவேளை, 2024இல் இறைச் செயலாற்றமானது இலங்கையின் பொருளாதார உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியது. அரசிறைச் சேகரிப்பு மேம்படுத்தப்பட்டு, 2024இல் சாதகமான முதலாந்தர நிலுவையும் பதிவுசெய்யப்பட்டது. படுகடன் மறுசீரமைப்பில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் பரந்தளவிலான பேரண்டபொருளாதார உறுதிப்பாடு மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார முன்னேற்றம், நாட்டின் தரமிடலை மேம்படுத்துவதற்கு பன்னாட்டு தரமிடல் முகவராண்மைகளை ஊக்குவித்து முதலீட்டாளர்கள் மற்றும் பன்னாட்டு கடன்கொடுநர்களுக்கு மத்தியில் நாட்டின் மீதான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்ப உதவியது.**

## 1.1. பணவீக்கம் மற்றும் விலை அபிவிருத்திகள்

### 1.1.1. பணவீக்கம்[1]

**பணவீக்கமானது ஆரம்பத்தில் ஒரு சிறு அதிகரிப்புக்கு பின்னர் 2024 காலப்பகுதியில் ஒட்டுமொத்த குறைவடைந்து செல்கின்ற போக்கொன்றினைப் பின்தொடர்ந்து செத்தெம்பரில் பணச்சுருக்க மட்டங்களை எட்டியது.** பெறுமதி கூட்டப்பட்ட வரியில் ஏற்பட்ட அதிகரிப்பு, நுகர்வோர் கூடைக்குள் காணப்பட்ட பல்வேறு செலவின வகைகளிலிருந்தான பெறுமதி கூட்டப்பட்ட வரி விலக்களிப்புக்களின் நீக்கம் மற்றும் குறிப்பிடத்தக்க உணவுப் பணவீக்கம் எனபன 2024இன் முற்பகுதியில் பணவீக்கத்தில் அதிகரிப்பொன்று ஏற்பட வழிவகுத்தன. எனினும், நிர்வகிக்கப்பட்ட விலைகளில் ஏற்பட்ட அடுத்தடுத்த மாற்றங்கள் இதனை எதிரீடு செய்தன. எனினும், மார்ச் 2024 இல் மின்சாரக் தீர்வைக் குறைப்பு மற்றும் புள்ளிவிபர தளத் தாக்கம் காரணமாக பணவீக்க அதிகரிப்பு நீடிக்கவில்லை. மேலும் நிலவிய தாழ்ந்த கேள்வி நிலைமைகளுக்கு மத்தியில் பெறுமதி கூட்டப்பட்ட வரியில் ஏற்பட்ட அதிகரிப்புக்களை வியாபாரங்கள் பகுதியளவில் உள்வாங்கியிருக்க கூடும். இதற்கமைய, முதன்மைப் பணவீக்கமானது தாழ்ந்தளவிலான நேர்மறையான ஒற்றை இலக்க மட்டங்களிலும் 2024 மாச்சு தொடக்கம் 5 சதவீத இலக்கிற்குக் கீழாகவும் தொடர்ந்தும் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2024 யூலையில் மின்சாரத் தீர்வைகளில் மேற்கொள்ளப்பட்ட குறைப்புக்கள் விலை மட்டங்களில் வீழ்ச்சிக்கு பங்களித்ததுடன் இந்நிர்வகிக்கப்பட்ட விலை மாற்றங்களின் தாக்கங்கள் 2024 மாச்சு மற்றும் ஓகத்து ஆகிய மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட பாரியளவிலான எதிர்மறையான மாதாந்தப் பணவீக்கத்தில் பிரதிபலித்தன. மேலும், உலகளாவிய பண்ட விலைகளின் மிதமடைதல் மற்றும் இலங்கை ரூபாவின் வலுவடைதல் என்பனவும் வீழ்ச்சியடைந்து செல்கின்ற பணவீக்கப் போக்கிற்குப் பங்களித்தன. விலை அழுத்தங்களின் இப்படிப்படியான மறைவடைதலானது நெருக்கடிக் காலப்பகுதியில் குடியிருப்பாளர்கள் எதிர்கொண்ட உயர்ந்தளவிலான வாழ்க்கைச் செலவினை இலகுவாக்குவதற்கு ஓரளவு உதவியது. இதன்விளைவாக, ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2024 செத்தெம்பரில் பணச்சுருக்க மட்டமொன்றினை எட்டி, 0.5 சதவீத பணச்சுருக்கமொன்றினைப் பதிவுசெய்ததுடன், இது பின்னர் தொடர்ந்தும் ஆழமடைந்தது[2]. 2024இல் உணவு, வலு மற்றும் போக்குவரத்துத் துறைகளின் விலை அதிகரிப்புக்கள் சாதகமாயிருந்தன. குறிப்பாக, வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருள் வகை மற்றும் போக்குவரத்து வகை என்பன உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் இயல்புநிலைக்குத்திரும்பல் மற்றும் செலாவணி வீதத்தின் பெறுமதியுயர்வு என்பவற்றிற்கு மத்தியில் மேற்கூறப்பட்ட பாரியளவிலான மின்சாரத் தீர்வைக் குறைவுகள் மற்றும் செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய கீழ்நோக்கிய எரிபொருள் விலைச் சீராக்கங்கள் என்பவற்றினால் முதன்மையாக உந்தப்பட்டு 2024இன் பல மாதங்களில் பணச்சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. இதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (கொ.நு.வி.சு., 2021=100)[3] அளவிடப்பட்டவாறு ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2023 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்ட 4.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியளவில் -1.7 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்ட வேளையில் 2024இல் ஆண்டுச் சராசரி கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது

1 பணவீக்கத்தின் அன்மைய நடத்தை குறித்த கூடுதல் விபரங்கள், மத்திய வங்கியால் ஆண்டுதோறும் இருமுறை வெளியிடப்படும் நாணயக் கொள்கை அறிக்கையில் ஆலோசிக்கப்பட்டது.


2 பணவீக்க இலக்கிலிருந்து பணவீக்க விலகல் குறித்த மேலதிக கலந்துரையாடலுக்கு இந்த அறிக்கையின் அத்தியாயம் 3 ஐப் பார்க்கவும்.


3 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மாதாந்திர அடிப்படையில் தொகுக்கப்படுகிறது. கொழும்பு மாவட்டத்தில் நகர்ப்புற குடியிருப்பாளர்களின் நுகர்வோர் பொருட்களின் கூடையின் விலை நகர்வுகளை கொ.நு.வி. சுட்டெண் எடுத்துக்காட்டுகிறது.


1


# இலங்கைப் பொருளாதாரத்தின் மீட்சி

இலங்கை மத்திய வங்கி













*2020ஆம் ஆண்டிற்கு பின்னரான தரவுகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் அடிப்படையிலமைந்தன


நெருக்கடியின் உச்ச நிலையில் எதிர் 2024


| | நெருக்கடியின் உச்ச நிலையில் | 2024 |
|---|---|---|
| பணவீக்கம் (கொ.நு.வி.சு, ஆண்டிற்காண்டு, %) | 69.8 (செத் 2022) | -1.7 (ஆண்டு இறுதி) |
| மொ.உ.உற்பத்தி வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %) | -7.3 (2022) | 5.0 |
| தலைக்குரிய மொ.உ.உற்பத்தி (ஐ.அ.டொலர்) | 3,464 (2022) | 4,516 |
| வட்டி வீதம் (சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம், %) | 29.7 (வாரம் 4, நவெ 2022) | 8.9 (ஆண்டு இறுதி) |
| தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %) | -9.7 (மே 2023) | 10.7 (ஆண்டு இறுதி) |
| செலாவணி வீதம் (ரூ/ ஐ.அ.டொலர்) | 365 (வாரம் 2, மே 2022) | 293 (ஆண்டு இறுதி) |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (சீன மக்கள் வங்கியின் நாணய பரஸ்பர பரிமாற்றலுடன், ஐ.அ.டொலர் பில்) | 1.7 (ஒகத் 2022) | 6.1 (ஆண்டு இறுதி) |
| செயற்படா கடன்கள்/கட்டம் 3 கடன்கள் விகிதம் (%) | 13.6 (செத் 2023) | 12.3 (ஆண்டு இறுதி) |
| மத்திய அரசின் படுகடன்** (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 114.2 (2022) | 96.1 (ஆண்டு இறுதி) |
| அரசிறை மற்றும் கொடைகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 8.3 (2021) | 13.7 |
| திரண்ட இறை மீதி (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | -11.7 (2021) | -6.8 |












**2024 ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வின் அட்டவணை 1.21இல் உள்ள அடிக்குறிப்புகளை தயவுசெய்து பார்க்க




1


## வரைபடம் 1.1: இலங்கையில் பணவீக்க இயக்கவாற்றல்கள்

**முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி. சுட்டெண், ஆண்டிற்காண்டு) (அ)**





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (தே.நு.வி. சுட்டெண், ஆண்டிற்காண்டு) (அ)**





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி. சுட்டெண், ஆண்டிற்காண்டு) (அ)**





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கத்தின் அசைவுகள் (தே.நு.வி. சுட்டெண், ஆண்டிற்காண்டு) (அ)**





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**கொ.நு.வி. சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (ஆண்டிற்கு ஆண்டு) (அ)**




**தே.நு.வி. சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (ஆண்டிற்கு ஆண்டு) (அ)**




- உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகை
- போக்குவரத்து
- கல்வி
- தளபாடம், வீட்டுப் பொருட்கள் மற்றும் கிரமமான வீட்டு பராமரிப்பு
- புடவையும் காலணிகளும்
- வெறியக் குடிவகை, புகையிலை மற்றும் போதைப்பொருட்கள்
- வீடமைப்பு, நீர், மின்சாரம் வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்
- உணவகங்கள் மற்றும் விடுதிகள்
- சுகாதாரம்
- தொடர்பூட்டல்
- பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம்
- பல்வகைப் பொருட்களும் பணிகளும்
- ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கம்

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் கணிப்புக்கள்

(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது முறையே 2023 சனவரி மற்றும் 2023 பெப்புருவரி மாத தரவு வெளியீடுகளிலிருந்து 2021 = 100 எனும் புதிய தள ஆண்டுடனான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பவற்றை வெளியிடத் தொடங்கியதுடன் 2013 = 100 எனும் பழைய தள ஆண்டுடனான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பவற்றின் வெளியீட்டினை இடைநிறுத்தியது. இதற்கமைய வரைபடங்களில் 2023 சனவரியிலிருந்து ஆரம்பிக்கின்ற தரவுகள் 2021 = 100 எனும் புதிய தள ஆண்டுத் தொடர்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

1

**அட்டவணை 1.1 : பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டிற்கு ஆண்டு)**

சதவீதம்

| | | 2013=100 | | | 2021=100 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திசெ-2020 | திசெ-2021 | திசெ-2022 | திசெ-2023 | திசெ-2024 | சன-2025 | பெப்-2025 | மாச்-2025 |
| முதன்மைப் | கொ.நு.வி.சு | 4.2 | 12.1 | 57.2 | 4.0 | **-1.7** | -4.0 | -4.2 | **-2.6** |
| பணவீக்கம் | தே.நு.வி.சு | 4.6 | 14.0 | 59.2 | 4.2 | **-2.0** | -4.0 | -3.9 | |
| மையப் | கொ.நு.வி.சு | 3.5 | 8.3 | 47.7 | 0.6 | **2.7** | 1.2 | 0.7 | **0.7** |
| பணவீக்கம் | தே.நு.வி.சு | 4.7 | 10.8 | 57.5 | 0.9 | **1.3** | -0.2 | -0.6 | |
| உணவுப் | கொ.நு.வி.சு | 9.2 | 22.1 | 64.4 | 0.3 | **0.8** | -2.6 | -0.2 | **0.6** |
| பணவீக்கம் | தே.நு.வி.சு | 7.5 | 21.5 | 59.3 | 1.6 | **-1.0** | -2.5 | -1.1 | |
| உணவல்லாப் | கொ.நு.வி.சு | 2.0 | 7.5 | 53.4 | 5.8 | **-3.0** | -4.7 | -6.1 | **-4.1** |
| பணவீக்கம் | தே.நு.வி.சு | 2.2 | 7.6 | 59.0 | 6.3 | **-2.9** | -5.2 | -6.0 | |

குறிப்பு: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது முறையே 2023 சனவரியிலும் 2023 பெப்புருவரியிலும் வெளியிடப்பட்ட தரவுகளிலிருந்து 2021=100 எனும் புதிய தள ஆண்டைக் கொண்டு, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் வெளியீடு செய்ய ஆரம்பித்ததுடன், 2013=100 எனும் பழைய தள ஆண்டைக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினதும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினதும் வெளியீட்டை நிறுத்தியது.

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2023இல் பதிவுசெய்யப்பட்ட 17.4 சதவீதத்திலிருந்து 1.2 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தே.நு.வி.சு., 2021=100)[4] அடிப்படையிலமைந்த ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமும் இதனையொத்த பாதையொன்றினைப் பின்தொடர்ந்து, 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியளவில் -2.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், 2024இல் ஆண்டுச் சராசரி தே.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட 16.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1.6 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. அதேவேளை, 2025 சனவரியில் நிர்வகிக்கப்பட்ட மின்சாரத் தீர்வைகளிற்கான கீழ்நோக்கிய சீராக்கமானது 2025 இந்த முதற் காலாண்டில் பணச்சுருக்கம் மேலும் தொடர்வதற்கு வழிவகுத்தது. 2024இன் முற்பகுதியில் ஏற்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரிச் சீராக்கங்களினால் உந்தப்பட்ட விலை அதிகரிப்புக்கள் மற்றும் குறிப்பிடத்தக்க உணவுப் பணவீக்கம் என்பன காரணமாக ஏற்பட்ட புள்ளிவிபரத் தளத் தாக்கமும் 2025இன் முற்பகுதியில் ஒட்டுமொத்த ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் இத்தாழ்வடைதலிற்குப் பங்களித்தது. இதற்கமைய, கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கமானது 2025 மாச்சில் -2.6 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்ட வேளையில் தே.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கமானது 2025 பெப்புருவரியளவில் -3.9ஆக விளங்கியது.

4 தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மாதாந்திர அடிப்படையில் தொகுக்கப்படுகிறது. தேசிய ரீதியில் குடியிருப்பாளர்களின் நுகர்வோர் பொருட்களின் கூடையின் விலை நகர்வுகளை தே.நு.வி. சுட்டெண் எடுத்துக்காட்டுகிறது.

**மையப் பணவீக்கமானது 2024இன் முதலாம் அரையாண்டில் படிப்படியாக அதிகரித்து, அதன்பின்னர் தளர்வடைவதற்கு முன்னர், முதன்மைப் பணவீக்கத்திற்கான இலக்குடன் ஒத்திசைந்து காணப்பட்டது.** மேற்கூறப்பட்ட இயக்கவாற்றல்களிற்கு மத்தியில், மையப் பணவீக்கமானது ஆண்டு முழுவதும் முதன்மைப் பணவீக்கத்திற்கான இலக்கிற்குக் கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டது. 2024இன் முற்பகுதியில், பெறுமதி கூட்டப்பட்ட வரிச் சீராக்கங்களினால் உந்தப்பட்டு உணவல்லா வகைகளின் விலைகளில் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும், மையக் கூடைக்குள் உள்ளடக்கப்பட்ட உணவு விலைகள் பாரியளவிலான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்யாமையின் காரணமாக மையப் பணவீக்கத்தின் அதிகரிப்பானது சொற்பளவிலானதாகக் காணப்பட்டது. மேலும், முதன்மைப் பணவீக்கத்தில் காணப்பட்ட சடுதியான குறைப்புக்கள் வலுவுடன் தொடர்புடைய விலைக் குறைப்புக்களினால் பாரியளவில் உந்தப்பட்டதுடன் அவை மையப் பணவீக்கக் கூடையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதன் காரணமாக அத்தகைய நடத்தை மையப் பணவீக்கத்தில் புலப்படவில்லை. ஆண்டின் பிற்பகுதியில், மையப் பணவீக்கக் கூடையின் உணவு வகையில் ஏற்பட்ட பணச்சுருக்கம் மற்றும் நீர் தீர்வைகளின் கீழ்நோக்கிய திருத்தம் ஆகியவற்றினால் முக்கியமாக உந்தப்பட்டு மையப் பணவீக்கமானது படிப்படியான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, மையப் பணவீக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இலங்கை ரூபாவின் பெறுமதியுயர்வுக் காரணமாயமைந்த வேளையில் வலுவுடன் தொடர்புடைய விலைக் குறைப்புக்களிலிருந்தான சில கசிவுத்தாக்கங்களையும்

1

இது பிரதிபலித்தது. இதற்கமைய, கொ.நு.வி. சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த ஆண்டிற்காண்டு மையப் பணவீக்கமானது 2023 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்ட 0.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியளவில் 2.7 சதவீதமாகத் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில் கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கமானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட 14.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024இல் 3.3 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, தே.நு.வி. சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கமானது 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியளவில் 1.3 சதவீதமாக விளங்கியது. மாறாக, ஆண்டுச் சராசரி தே.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட 15.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024இல் 2.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2025 முற்பகுதியில் காணப்பட்ட புள்ளிவிபரத் தளத் தாக்கமானது மையப் பணவீக்கத்திலும் புலப்பட்டது.

### 1.1.2. விலைகள்

**கொ.நு.வி. சுட்டெண் மற்றும் தே.நு.வி.சுட்டெண் ஆகிய இரு நுகர்வோர் விலைச் சுட்டெண்களினாலும் அளவிடப்பட்டவாறு பொது விலை மட்டமானது ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைத் தொடர்ந்த உணவு மற்றும் உணவல்லாத ஆகிய இரு பொருட்களினதும் விலைகளுடனும் 2024இல் ஒட்டுமொத்த வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினை வெளிப்படுத்தியது.** குறைந்த செலவிடத்தக்க வருமானம் காரணமாக மெதுவடைந்த கேள்வி உள்ளடங்கலாக, வலு மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விலைகளின் கணிசமானளவிலான கீழ்நோக்கிய திருத்தங்கள் மற்றும் இலங்கை ரூபாவின் பெறுமதியுயர்வு என்பன போன்ற பல காரணிகளினால் பொது விலை மட்டத்தில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி உந்தப்பட்டது.

**பருவமல்லாத காலங்கள் மற்றும் கடுமையான வானிலை நிலைமைகள் நிலவிய காலப்பகுதிகளில் காணப்பட்ட இடைக்கிடையேயான அதிகரிப்புக்களுக்கு மத்தியில் உணவுப் பொருட்களின் விலைகள் ஆண்டு காலப்பகுதியில் ஒட்டுமொத்த வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைக் வெளிப்படுத்தின.** கடுமையான வானிலை நிலைமைகள் காரணமாக ஏற்பட்ட வரையறுக்கப்பட்ட நிரம்பலுடன் இணைந்து பண்டிகைக் கேள்வி காரணமாக தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட வரித் திருத்தங்களின் காரணமாக தளம்பலற்ற உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட கணிசமானளவிலான அதிகரிப்பொன்றுடன் உணவு வகையின் விலைகள் 2024 சனவரியில் அதிகரித்ததுடன் பெரும்போக அறுவடையின் பெறுகையுடன் தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் அதன்பின்னர் 2024 மே வரை வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைத் தொடர்ந்தது. பருவமல்லாத காலம் மற்றும் பாதகமான வானிலை நிலைமைகள் என்பன காரணமாக 2024 யூன் மற்றும் யூலை மாதங்களில் உணவுப் பொருட்களின் விலைகள் அதன்பின்னர் அதிகரித்தன. இருப்பினும், சிறுபோக அறுவடையின் பெறுகையுடன் காய்கறிகளின் விலையில் ஏற்பட்ட குறைவின் காரணமாக 2024 ஓகத்து தொடக்கம் நவெம்பர் வரையான காலப்பகுதியில் உணவு விலைகள் மீண்டும் வீழ்ச்சியடைந்தன. 2024 திசெம்பரில், பருவகால பண்டிகைக் கேள்வி மற்றும் பரந்தளவில் காணப்பட்ட வானிலைசார் இடையூறுகள் என்பன காரணமாக உணவுப் பொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரித்தன. உணவு வகையின் விலைகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சியானது இலங்கை ரூபாவின் கணிசமானளவிலான பெறுமதியுயர்வினால் உந்தப்பட்டு இறக்குமதிசெய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட குறைவினால் மேலும் ஆதரவளிக்கப்பட்டது. மேலும், மின்சாரத் தீர்வைகள் மற்றும் எரிபொருள் விலைகள் என்பவற்றின் குறைவுகளிலிருந்தான மறைமுகத் தாக்கங்கள் உணவுப் பொருட்களின் விலை வீழ்ச்சிகளிற்குப் பங்களித்தன.

**நிருவகிக்கப்பட்ட ரீதியிலான விலைத் திருத்தங்களினால் முதன்மையாக உந்தப்பட்டு உணவல்லாப் பொருட்களின் விலைகள் ஒட்டுமொத்த வீழ்ச்சிப் போக்கொன்றினைக் காட்டின.** பெறுமதி கூட்டப்பட்ட வரி வீதத்தில் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கான அதிகரிப்பு மற்றும் 2024இன் தொடக்கத்தில் பல்வேறு பெறுமதி கூட்டப்பட்ட வரி விலக்களிப்புக்களின் நீக்கம் என்பன காரணமாக 2024 சனவரி மற்றும் பெப்புருவரி ஆகிய மாதங்களில் உணவல்லாத வகையில் உள்ள பொருட்களின் விலைகள் அதிகரித்த போதிலும்,

செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய நிருவகிக்கப்பட்ட விலைகளின் கணிசமானளவிலான கீழ்நோக்கிய திருத்தங்களினால் முதன்மையாக உந்தப்பட்டு ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் அவை அதனைத்தொடர்ந்து வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, 90 அலகுகளின்[5] பாவனைக்கான பட்டியல்களிற்கு 2024 மாச்சு 05 மற்றும் 2024 யூலை 15 நடைமுறைக்கு வரும் விதத்தில் முறையே 29.8 சதவீதத்தினாலும் 34.3 சதவீதத்தினாலும் குறைக்கப்பட்டதன் மூலம் மின்சாரத் தீர்வையானது ஆண்டிற்கு இரண்டு தடவைகள் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டது. மின்சாரத் தீர்வைகளிற்கான கீழ்நோக்கிய திருத்தங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில், 2024 ஓகத்து 21இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 22 அலகுகளின்[6] பாவனைக்கான பட்டியல்களிற்கு 8.8 சதவீதத்தினாலும் தீர்வைச் சூத்திரத்திற்கமைய நீர்த் தீர்வையும் கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. அதேவேளை, பெறுமதி கூட்டப்பட்ட வரி விலக்களிப்புக்களின் நீக்கத்துடன் 2024 சனவரியில் ஆரம்ப அதிகரிப்பொன்றினைத் தொடர்ந்து, பெற்றோல் (92 ஒக்ரேன்) மற்றும் ஓட்டோ டீசல் என்பவற்றின் விலைகள் ஆண்டு காலப்பகுதியில் பல கீழ்நோக்கிய திருத்தங்களிற்கு உட்பட்டன. மேலும், மண்ணெண்ணெயின் விலையும் ஆண்டு காலப்பகுதியில் பல மாதங்களில் கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. மேலும், பெறுமதி கூட்டப்பட்ட வரி விலக்களிப்புக்களின் நீக்கத்தின் காரணமாக 2024 சனவரியில் கணிசமானளவினால் அதிகரிக்கப்பட்ட திரவப் பெற்றோலிய எரிவாயுவின் விலையானது 2024 ஏப்பிறல் தொடக்கம் யூலை வரை கீழ்நோக்கித் திருத்தப்பட்டதுடன் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் மாற்றமின்றித் தொடர்ந்து காணப்பட்டது. ஓட்டோ டீசலின் விலைக் குறைப்புக்களுடன் ஒத்திசைவாக்கும் விதத்தில் பேருந்துக் கட்டணங்கள் 2024 யூலை 2 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் 5.07 சதவீதத்தினாலும் 2024 ஒத்தோபர் 2 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் 4.24 சதவீதத்தினாலும் குறைக்கப்பட்டன. இருப்பினும், 2024இல் புகையிரதக் கட்டணங்களில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

5 கொ.நு.வி.சுட்டெண் (2021=100) மற்றும் தே.நு.வி.சுட்டெண் (2021=100) என்பவற்றின் தொகுத்தலுக்கு உள்நாட்டு பாவனையாளர்கள் வகையில் மின்சாரத் தீர்வையின் 90 அலகுகள் கருதப்படுகின்றன. மின்சாரத் தீர்வையானது 2024 மாச்சு 05 மற்றும் 2024 யூலை 15 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் முறையே 21.9 சதவீதத்தினாலும் 22.5 சதவீதத்தினாலும் சராசரியாக குறைக்கப்பட்டன.

6 கொ.நு.வி.சுட்டெண் (2021=100) மற்றும தே.நு.வி.சுட்டெண் (2021=100) என்பவற்றின் தொகுத்தலுக்கு உள்நாட்டு பாவனையாளர்கள் வகையில் நீர்த் தீர்வையின் 22 அலகுகள் கருதப்படுகின்றன. உள்நாட்டு பாவனையாளர்கள் வகையில் நீர்த் தீர்வையும் 2024 ஓகத்து 21இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில 7.0 சதவீத சராசரியொன்றினாலும் கீழ்நோக்கித் திருத்தப்பட்டது.

## 1.1.3. நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் மற்றும் வாழ்க்கைச் செலவு

**அலுவல்சார் நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் இரண்டும் 2024 ஆண்டு முழுவதும் ஒட்டுமொத்த வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினை எடுத்துக்காட்டின.** இதற்கமைய, கொ.நு.வி. சுட்டெண்ணானது 2023 திசெம்பரின் 195.1 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2024 சனவரியில் பெறுமதி கூட்டப்பட்ட வரித் திருத்தங்களின் காரணமாக 200.7 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்த பின்னர் 2024 திசெம்பரில் 191.7 சுட்டெண் புள்ளிகளிற்கு வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சி, நிருவகிக்கப்பட்ட விலைகளின் விலை குறைப்பு மற்றும் உணவு விலைகளில் மிதமான தன்மை ஆகியவற்றால் உந்தப்பட்டது. தே.நு.வி.சுட்டெண்ணும் 2023 திசெம்பரின் 208.8 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2024 சனவரியில் பெறுமதி கூட்டப்பட்ட வரித் திருத்தங்களின் காரணமாக 215.0 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்த பின்னர் 2024 திசெம்பரில் 204.6 சுட்டெண் புள்ளிகளிற்கு வீழ்ச்சியடைந்தது.

**நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் ஆண்டுச் சராசரியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, 2023உடன் ஒப்பிடுகையில் 2024இல் வாழ்க்கைச் செலவானது[7] சிறியளவிலான அதிகரிப்பொன்றினை எடுத்துக்காட்டியது.** கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையில் குடியிருப்பொன்றிற்கான[8] மதிப்பிடப்பட்ட சராசரி

7 நுகர்வோர் விலைச் சுட்டெண்கள், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின அளவீட்டின் (2019) இலிருந்து பெறப்பட்ட நிலையான நுகர்வு கூடைகளை அடிப்படையாகக் கொண்டவை. எனவே, அவை காலப்பகுதியில் குடியிருப்பாளர் நுகர்வு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிக்கவில்லை.

8 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட குடியிருப்பாளர்

வரைபடம் 1.2: கொ.நு.வி. சுட்டெண் எதிர் முதன்மைப் பணவீக்கம்





(அ) 2022இற்கான ஆண்டிற்காண்டு பணவீக்கம் கொ.நு.வி. சுட்டெண் (2013=100)இன் அடிப்படையிலமைந்தது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

1

வரைபடம் 1.3: வாழ்க்கைச் செலவு




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

மாதாந்த நுகர்வுச் செலவினமானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 176,253இலிருந்து 2024இல் ரூ. 178,438இற்கு 1.2 சதவீதத்தினால் சிறியளவு அதிகரித்தது. 2021உடன் ஒப்பிடுகையில் 2022இல் பதிவுசெய்யப்பட்ட 63.5 சதவீத அதிகரிப்புடனும் 2022உடன் ஒப்பிடுகையில் 2023இல் பதிவுசெய்யப்பட்ட 17.4 சதவீத அதிகரிப்புடனும் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க மெதுவடைதலொன்றினை இது பிரதிபலிக்கின்றது. அதேபோன்று, தே.நு.வி. சுட்டெண்ணின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட சராசரி மாதாந்த குடியிருப்பாளர்[9] நுகர்வுச் செலவினமானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 103,383இலிருந்து 2024இல் ரூ. 105,063இற்கு 1.6 சதவீதத்தினால் அதிகரித்தமையானது 2021உடன் ஒப்பிடுகையில் 2022இல் பதிவுசெய்யப்பட்ட 74.9 சதவீத அதிகரிப்பிலிருந்தும் 2022உடன் ஒப்பிடுகையில் 2023இல் பதிவுசெய்யப்பட்ட 16.5 சதவீத அதிகரிப்பிலிருந்துமான குறிப்பிடத்தக்க தளர்வொன்றினை எடுத்துக்காட்டியது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய இரு கூடைகளிலும் குடியிருப்பொன்றிற்கான சராசரி மாதாந்த நுகர்வுச் செலவினத்தின் பங்கீட்டினைக் கருத்திற்கொண்டு, உணவுப் பொருட்கள் மீது செலவிடப்படும் விகிதாசாரமானது பொருளாதார நெருக்கடியின் பின் தொடர்ந்தும் அதிகரித்த மட்டங்களில் காணப்பட்ட வேளையில் உணவல்லா வகை பெரும் பங்கிற்குத் தொடர்ந்தும் வகைகூறியது.

## 1.1.4. பணவீக்க எதிர்பார்ப்புக்கள்

**கம்பனித் துறை மற்றும் குடியிருப்புத் துறை ஆகிய இரண்டு துறைகளது பணவீக்க எதிர்பார்ப்புக்களும் 2024 காலப்பகுதியில் ஒட்டுமொத்த வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைப் பின்தொடர்ந்து, உண்மைப் பணவீக்கத்துடன் ஒத்திசைந்து காணப்பட்டது.** மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் அளவீட்டின் பிரகாரம், ஆண்டின் தொடக்கத்தில் இரு துறைகளினதும் குறுங்கால பணவீக்க எதிர்பார்க்கைகள் அதாவது, 3 மாதங்களுக்கு அப்பால், 6 மாதங்களுக்கு அப்பால் மற்றும் 1 வருடத்திற்கு அப்பாலான காலப்பகுதிகள், 5 சதவீத இலக்கு மட்டத்தினை விஞ்சிக் காணப்பட்டது. இதற்கு விலைகளில் தற்காலிகமான உயர்வொன்றினை ஏற்படுத்திய கணிசமானளவிலான பெறுமதி கூட்டப்பட்ட வரித் திருத்தங்களின் காரணமாக இருந்தது. இருப்பினும், பயன்பாட்டு விலைகள் அதன்பின்னர் கீழ்நோக்கித் திருத்தப்பட்டமையினால், குறுங்கால பணவீக்க எதிர்பார்ப்புக்கள் வலுவாக வீழ்ச்சியடையத் தொடங்கின. பணச்சுருக்கத்திற்கு மத்தியில், 2024 ஒத்தோபர் தொடக்கம் குறுங்கால எதிர்பார்க்கைகள் 5 சதவீதம் கொண்ட தாழ்ந்தளவிலான இலக்கு மட்டத்திற்கும் கீழாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. 2024 முழுவதும், குறுங்கால பணவீக்க எதிர்பார்க்கைகளில் ஏற்பட்ட அசைவுகளினால் உந்தப்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றுடன் கம்பனித் துறையின் நடுத்தர கால பணவீக்க எதிர்பார்ப்புக்கள் இலக்கு எல்லையான 5 சதவீதத்திலிருந்து ±2 சதவீதத்துக்குள் தொடர்ந்தும் காணப்பட்டமைக்கு குறுங்கால பணவீக்க எதிர்பார்ப்புக்கள் காரணமாக இருந்தன. பணவீக்க எதிர்பார்ப்புக்கள் 2024இல் ஒட்டுமொத்த வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைப் பின்தொடர்ந்த போதிலும், ஆண்டின் பிற்பகுதியில், தவணைகளிலான எதிர்பார்ப்புக்களில் படிப்படியான அதிகரிப்பொன்று இரு துறைகளினாலும் எதிர்பார்க்கப்பட்டது.

வருமானம் மற்றும் செலவின அளவீட்டின் (2019) அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் சராசரி குடியிருப்பொன்று 3.8 ஆட்களை உள்ளடக்கின்றது.

9 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின அளவீட்டின் (2019) அடிப்படையில் இலங்கையில் சராசரி குடியிருப்பொன்று 3.7 ஆட்களை உள்ளடக்கின்றது.

1


## 1.1.5. கூலிகள்

**தனியார் மற்றும் அரச ஆகிய இரு துறைகளிலுமுள்ள ஊழியர்களின் பெயரளவு கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் அதிகரிப்பொன்றினைக் கொண்டிருந்ததென அண்மைய தரவுகள் வெளிப்படுத்துகின்றன[10].** முறைசாரா தனியார் துறையில், பெயரளவு கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது தொழிலாளர் பற்றாக்குறைகள் மற்றும் தொழிலாளர்களுக்கான உயர்ந்தளவிலான கேள்வி என்பவற்றினால் முக்கியமாக உந்தப்பட்டுக் காணப்பட்ட வேளையில், அரச துறையில் அரச துறை ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியின் அதிகரிப்பொன்று இதற்கு காரணமாயமைந்தது. 2024 காலப்பகுதியில், அரச துறை மற்றும் முறைசாரா தனியார் துறை என்பவற்றில் உண்மைக் கூலிகள் ஆண்டுச் சராசரி அடிப்படையில் அதிகரித்த வேளையில், முறைசார்ந்த தனியார் துறையின் உண்மைக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியொன்றினைக் காட்டியது. எனினும், முறைசார்ந்த தனியார் துறை மற்றும் முறைசாரா தனியார் துறை இரண்டிலும் உள்ள ஊழியர்களின் பெயரளவு ஊதியம் 2023 இல் அதிகரித்த அதே வேளை அரச துறை ஊழியர்களின் பெயரளவு ஊதியம் மாறாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தனியார் துறைக் கூலிகள்


**முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணில் (2018=100) பிரதிபலிக்கப்பட்டவாறு முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2024 முழுவதும் மேல்நோக்கிய போக்கொன்றினைக் காட்டியது.** குறிப்பாக, இச்சுட்டெண்ணானது 2023இன் 11.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2024இல் ஆண்டுச் சராசரியொன்றின் அடிப்படையில் பெயரளவு நியதிகளில் 6.0 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. பணிகள் நடவடிக்கைகளில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்தளவிலான கூலி வளர்ச்சியுடன் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய சகல மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளிலும் வளர்ச்சி தெளிவாகக் காணப்பட்டது. துணை நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், வருடாந்த சராசரி அடிப்படையொன்றில் அளவிடப்பட்ட முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணானது 2023உடன் ஒப்பிடுகையில் 2024இல் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் என்பவற்றில் முறையே 6.3 சதவீதத்தினாலும் 5.5 சதவீதத்தினாலும் 7.2 சதவீதத்தினாலும் பெயரளவு நியதிகளில் அதிகரித்தது. உயர்ந்தளவிலான கேள்வி மற்றும் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம் என்பன இதற்குக் காரணமாயமைந்த வேளையில், இது அனுபவம்வாய்ந்த தொழிலாளர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் அவர்களது வியாபாரத் தொழிற்பாடுகளின் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்துவதற்கும் நாளாந்த கூலியினை தொழில்தருநர்கள் அதிகரிப்பதனை நிர்ப்பந்தப்படுத்தியது. இருப்பினும், 2024 காலப்பகுதியில், பெயரளவு முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு

வரைபடம் 1.4: முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் (2018=100)இன் அசைவுகள் (ஆண்டிற்காண்டு)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.5: முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100)இன் அசைவுகள் (பெயரளவு)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

10 இப்பகுதியிலுள்ள தகவல்கள் முதன்மையாக இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட அரச துறை கூலி வீதச் சுட்டெண் (2016=100) மற்றும் முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் (2018=100) மற்றும் தொழில் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட முறைசார்ந்த தனியார் துறை குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் (1978 திசெம்பர் = 100) ஆகியவற்றின் அடிப்படையிலமைந்துள்ளன. இருப்பினும், கிடைக்கக்கூடிய கூலிச் சுட்டெண்கள் பொருளாதாரம் முழுவதும் ஒட்டுமொத்த கூலிப் போக்குகளை முழுமையாகப் பெற்றுக்கொள்வதில் சில வரையறைகளைக் கொண்டுள்ளன.

1


வளர்ச்சியானது 2023உடன் ஒப்பிடுகையில் பணவீக்க அழுத்தத்தின் தளர்வடைதலுடன் இசைந்து செல்லும் விதத்தில் மெதுவடைந்தது. மேலும், பணவீக்கத்தின் தொடர்ச்சியான வீழ்ச்சியுடன் உண்மை முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில் 2024 காலப்பகுதியில் தொடர்ந்து துரிதமடைந்தது.

**கூலி நிர்ணய சபையினால் ஆளுகைக்கு உட்படுத்தப்படுகின்ற கூலிகளைக் கொண்ட ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் தொடர்பில் தொழில் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணினால் (1978 திசெம்பர் = 100) அளவிடப்பட்டவாறான முறைசார்ந்த தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2024இல் சிறியளவிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.** இதற்கமைய, பெயரளவு குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 0.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2024இல் ஆண்டுச் சராசரி அடிப்படையொன்றில் 0.1 சதவீதத்தினால் சிறியளவு அதிகரித்தது. இருப்பினும், பெயரளவு கூலி வீதச் சுட்டெண்களில் சதவீத அதிகரிப்பானது காலப்பகுதியில் சொற்பளவிலானதாகத் தொடர்ந்தும் காணப்பட்டமையினால் ஆண்டுச் சராசரி அடிப்படையொன்றில் அளவிடப்பட்ட குறைந்தபட்ச உண்மைக் கூலி வீதச் சுட்டெண்ணானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் 1.1 சதவீதத்தினால் குறைவடைந்தது. 2025 வரவு செலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச கூலியினை 2025 ஏப்பிறலில் ரூ. 21,000 இலிருந்து ரூ. 27,000 வரை உயர்த்துவதற்கும் 2026 சனவரியில் ரூ. 30,000 இற்கு உயர்த்துவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மேலும், 2025 வரவு செலவுத்திட்டத்தின் பகுதியொன்றாக, பெருந்தோட்டத் துறைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் தற்போதுள்ள கூலிசார் கரிசனைகளை நிவர்த்திசெய்வதற்கும் அவர்களின் நாளாந்த கூலியினை ரூ. 1,700 இற்கு உயர்த்துவதற்கான தலையீடொன்றினை அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

## அரச துறைக் கூலிகள்


**அரச துறைக் கூலி வீதச் சுட்டெண்ணினால் (2016=100) அளவிடப்பட்டவாறான அரச துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் இரண்டு ஆண்டு கால ஸ்தம்பித நிலைக்குப் பின்னர் 2024இல் உயர்வடைந்தன.** 2024 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, அரச துறை ஊழியர்களுக்கான வாழ்கைச் செலவுக் கொடுப்பனவானது 2024 சனவரியிலிருந்து ரூ. 10,000 தொகையினால் அதிகரித்தது. இறை மட்டுப்பாடுகள் காரணமாக, அரச துறை ஊழியர்கள் 2024 சனவரி தொடக்கம் மாச்சு வரையான காலப்பகுதியில் ரூ. 5,000 தொகையிலான பகுதியளவிலான கொடுப்பனவொன்றினைப் பெற்றுக்கொண்டதுடன் 2024 ஏப்பிறல் தொடக்கம் ரூ. 10,000 தொகையிலான முழுமையான கொடுப்பனவு செலுத்தப்பட்டு வருகின்றது. அதேவேளை, 2024இன் முதலாவது மூன்று மாதங்களிற்கான நிலுவைத் தொகையானது 2025 சனவரியிலிருந்து ஆரம்பிக்கின்ற விதத்தில் மூன்று சம தவணைகளில் பகிர்ந்தளிக்கப்பட்டுவரத் தொடங்கியது. இதற்கமைய, அரச துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் 18.5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை, 2023இல் பதிவுசெய்யப்பட்ட உண்மைக் கூலித் தேய்வானது பணவீக்கத்தில் ஏற்பட்ட மெதுவடைதலின் காரணமாக 2024இல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2025 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம், குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தினை அதிகரிப்பதன் மூலமும் பல்வேறு படிகளை நெறிப்படுத்துவதன் மூலமும் அரச துறைச் சம்பளக் கட்டமைப்பின் திருத்தமொன்றினை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்கமைய, 2025 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் அரச துறையில் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் ரூ. 24,250இலிருந்து ரூ. 40,000இற்கு ரூ. 15,750இனால் அதிகரிக்கப்படும். இச்சீராக்கமானது குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தில் ரூ. 8,250 தொகையிலான தேறிய அதிகரிப்பொன்றுடன் இணைந்து, ரூ. 2,500 தொகையிலான தற்போதுள்ள தற்காலிக இடைக்காலப் படி மற்றும் ரூ. 5,000 தொகையிலான சிறப்புப் படி என்பவற்றினை அடிப்படைச் சம்பளத்தில் ஒருங்கிணைப்பதனை உள்ளடக்கும். ரூ. 5,000 தொகையிலான தேறிய சம்பள அதிகரிப்பொன்றுடன் தொடங்கி, 2025 ஏப்பிறலில் 30 சதவீத சீராக்கம் என்றவாறு இச்சம்பள அதிகரிப்பானது கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மீதமுள்ள 70 சதவீதமானது 2026 சனவரியில் மற்றும் 2027 சனவரியிலும் சம தவணைகளில் பகிர்ந்தளிக்கப்படும். மேலும், 2025 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் 80 சதவீதத்தினால் வருடாந்த சம்பள உயர்வினை அதிகரிப்பதற்கு 2025 வரவுசெலவுத்

வரைபடம் 1.6: அரச துறை கூலி வீதச் சுட்டெண் (2016=100)இன் அசைவுகள் (ஆண்டிற்காண்டு)




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

வரைபடம் 1.7: அரச துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100)இன் அசைவுகள் (பெயரளவு)




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்விளைவாக, தற்போது ரூ. 250ஆகக் காணப்படுகின்ற குறைந்தபட்ச வருடாந்த சம்பள உயர்வானது ரூ. 450ஆக அதிகரிக்கப்படும்.

## 1.2. உண்மைத் துறை அபிவிருத்திகள்


### 1.2.1. பொருளாதார வளர்ச்சி

**இரண்டு ஆண்டு கால வருடார்ந்த பொருளாதாரச் சுருக்கத்திற்குப் பின்னர் இலங்கைப் பொருளாதாரமானது 2024இல் மீளெழுச்சியடைந்து, வலுவான 5.0 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி[11] வளர்ச்சியொன்றினை அடைந்தது.** 2017இலிருந்து முதலாவது தடவையாக நேர்மறையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்களை எடுத்துக்காட்டுகின்ற சகல நான்கு காலாண்டுகளுடன் இம்மீட்சியானது ஆண்டு முழுவதும் வலுவாகக் காணப்பட்டது. ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தயாரிப்பு மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகளின் புத்துயிரளிப்பினால் உந்தப்பட்ட கைத்தொழில்சார் நடவடிக்கைகள் முக்கிய காரணமாயமைந்த வேளையில் தங்குமிடம் மற்றும் போக்குவரத்துப் பணிகளின் நீடித்து நிலைபெறத்தக்க வளர்ச்சியினால் முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டு பணிகள் நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்களவு பங்களித்தன. அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகளும் வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களிப்புச்செய்தன.

**உண்மைப் பொருளாதார வளர்ச்சி மற்றும் 3.8 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியொன்றின் கலவையினால் உந்தப்பட்டு நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2024இல் ரூ. 29,898.6 பில்லியனை எட்டியது.** மேலும், உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து தேறிய முதலாந்தர வருமானத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியை சீராக்குவதன் மூலம் மதிப்பிடப்பட்ட மொத்தத் தேசிய வருமானமானது 2024இல் நடைமுறை விலைகளில் ரூ. 29,153.9 பில்லியனிற்கு அதிகரித்தது. ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில், மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட 83.8 பில்லியனிலிருந்து 2024இல் 99.0 பில்லியனிற்கு அதிகரித்தது.

**பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வளர்ச்சி மற்றும் நடுவாண்டுக் குடித்தொகையில் வீழ்ச்சி என்பன காரணமாக தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 1,244,262 உடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ. 1,364,235 இற்கு அதிகரித்தது.** அதேவேளை, தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானமும் 2023இல்

வரைபடம் 1.8: வருடார்ந்த உண்மை மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதங்கள் (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாகக் கொண்டது

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

11 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் உற்பத்தி, செலவினம் மற்றும் வருமான அணுகுமுறைகளில் மொ.உ.உற்பத்தியினை மதிப்பிடுகின்றது

1

பதிவுசெய்யப்பட்ட ரூ. 1,206,441 உடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ. 1,330,255 இற்கு அதிகரித்தது. ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில், தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட 3,801 உடன் ஒப்பிடுகையில் 2024இல் 4,516 இற்கு அதிகரித்த வேளையில் தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானமானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட 3,685 உடன் ஒப்பிடுகையில் 4,404 இற்கு அதிகரித்தமைக்கு பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் நடுவாண்டுக் குடித்தொகையில் வீழ்ச்சியுடன் 2024இல் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் கணிசமானளவிலான பெறுமதியுயர்வும் காரணமாக இருந்தது.

## 1.2.2. உற்பத்தி

### வேளாண்மை

**வேளாண்மை நடவடிக்கைகள் 2023இல் பதிவுசெய்யப்பட்ட 1.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024இல் 1.2 சதவீதத்தினால் மிதமாக வளர்ச்சியடைந்தன.** இவ்வளர்ச்சியானது விலங்கு உற்பத்தி மற்றும் பழங்களின் வளர்ச்சி என்பவற்றினால் உந்தப்பட்ட வேளையில் தெங்கு வளர்ப்பில் காணப்பட்ட நீடித்த சுருக்கமானது ஒட்டுமொத்த விரிவாக்கத்தினை மட்டுப்படுத்தியது. மேலும், எதிர்பாராத கடுமையான வானிலை நிலைமைகள் குறிப்பாக, ஆண்டின் நான்காம் காலாண்டில், அரிசி மற்றும் ஏனைய தானிய வளர்ப்பு உள்ளடங்கலாக இடையூறிற்குட்பட்ட முக்கிய வேளாண்மை நடவடிக்கைகள் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் என்பன ஒட்டுமொத்த வளர்ச்சியினைக் குறைவடையச்செய்தன.

### கைத்தொழில்

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கேள்வி நிலைமைகளின் நிலையான மீளெழுச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு, கைத்தொழில் நடவடிக்கைகள் 2024இல் 11.0 சதவீத வலுவான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்ததுடன், இது 2023இல் பதிவுசெய்யப்பட்ட 9.2 சதவீத சுருக்கத்திலிருந்தான சடுதியான மீட்சியொன்றாகக் காணப்பட்டது.** புடவைகள், ஆடை, தோல் மற்றும் தொடர்புடைய உற்பத்திகளின் தயாரிப்பில் மீட்சியொன்றுடன் இணைந்து உணவு,


அட்டவணை 1.2 : நிலையான (2015) விலைகளில் கைத்தொழில் மூலத்தின்படி மொத்த தேசிய வருமானம் (அ)(ஆ)

| பொருளாதார நடவடிக்கை | மாற்றத்திற்கான வீதம் (%) | | வளர்ச்சிக்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ. இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2023 (இ) | 2024 | 2023 (இ) | 2024 | 2023 (இ) | 2024 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி** | 1.6 | **1.2** | 0.1 | **0.1** | 7.8 | **7.5** |
| **கைத்தொழில்** | - 9.2 | **11.0** | - 2.5 | **2.8** | 25.3 | **26.7** |
| தயாரிப்பு, சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் மற்றும் ஏனைய கைத்தொழில் | - 4.7 | **8.3** | - 0.9 | **1.6** | 19.1 | **19.7** |
| இதில் : தயாரிப்பு நடவடிக்கைகள் | - 3.2 | **7.6** | - 0.5 | **1.2** | 16.0 | **16.4** |
| கட்டடவாக்கம் | - 20.8 | **19.4** | - 1.6 | **1.2** | 6.2 | **7.0** |
| **பணிகள்** | - 0.2 | **2.4** | - 0.1 | **1.5** | 60.7 | **59.2** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணிகள் நடவடிக்கைகள் | 3.2 | **3.9** | 0.9 | **1.1** | 28.0 | **27.7** |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | - 13.2 | **5.0** | - 0.5 | **0.2** | 3.0 | **3.0** |
| நிதியியல் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | - 4.8 | **- 1.2** | - 0.2 | **- 0.1** | 4.9 | **4.6** |
| உண்மைச் சொத்து நடவடிக்கைகள் (வதிவிட உரிமை உள்ளடங்கலாக) | - 6.0 | **4.2** | - 0.3 | **0.2** | 4.4 | **4.4** |
| தொழிற்தகைமை, விஞ்ஞான, தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஆதரவளிக்கின்ற சேவை நடவடிக்கைகள் | 2.4 | **3.5** | 0.0 | **0.1** | 2.1 | **2.1** |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | - 0.6 | **- 1.1** | - 0.1 | **- 0.1** | 9.8 | **9.2** |
| ஏனைய சேவைகள் (சொந்த சேவைகள் நீங்கலாக) | 0.3 | **1.5** | 0.0 | **0.1** | 8.4 | **8.1** |
| **அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டலிற்குச் சமனான** | **- 2.6** | **4.6** | - 2.5 | **4.3** | 93.8 | **93.4** |
| மானியங்கள் நீங்கலாக உற்பத்திகள் மீதான வரி | 2.6 | **10.6** | 0.2 | **0.7** | 6.2 | **6.6** |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனான** | **- 2.3** | **5.0** | - 2.3 | **5.0** | 100.0 | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் | - 15.9 | **12.1** | | | | |
| **சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்** | **- 2.8** | **5.5** | | | | |

அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாகக்கொண்டது
ஆ) தற்காலிகமானது
இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**வரைபடம் 1.9: 2024இல் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி (அ)**




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாகக் கொண்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

குடிபானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்களின் தயாரிப்பில் ஏற்பட்ட நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியினால் உந்தப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகள் இவ்வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. அதேவேளை, சாதகமான சூழலினால் தூண்டப்பட்ட புதிய கட்டடவாக்க திட்டங்களின் படிப்படியான அறிமுகத்தினால் உந்தப்பட்டு கட்டடவாக்க நடவடிக்கைகள் 2023இன் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024இல் முன்னேற்றமடைந்தன.

## பணிகள்

**பொருளாதார நிலைமைகள் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பியமையினால், 2023இல் பதிவுசெய்யப்பட்ட 0.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2.4 சதவீத வளர்ச்சியொன்றுடன் பணிகள் நடவடிக்கைகள் 2024இல் ஆரோக்கியமான மீட்சியொன்றினைக் காட்டின.** சுற்றுலாத்துறையின் எழுச்சியானது தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணிகள், போக்குவரத்து மற்றும் வர்த்தகம் என்பன உள்ளடங்கலாக பல்வேறு துறைகளில் சாதகமான அடுத்தடுத்த தாக்கங்களைக் கொண்டிருந்தமையானது இவ்வளர்ச்சிக்குப் பங்களித்தது. அதேவேளை, நிதியியல் மற்றும் உண்மைச் சொத்துப் பணிகள் 2024இல் மீட்சியடைந்து, ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான வட்டி வீதச் சூழலொன்றினாலும் மற்றும் அதிகரித்த கடன்வழங்கும் தன்மையினாலும் ஆதரவளிக்கப்பட்டு மேம்பட்ட வியாபார நிலைமைகளிலிருந்து பயனடைந்தன. மேலும், கணனி நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகளின் மீட்சியும் பணிகள் வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களித்தது.

## 1.2.3. செலவினம்

**உள்நாட்டுக் கேள்வியானது முதலீட்டுச் செலவினத்தின் 19.6 சதவீத வளர்ச்சியாலும் நுகர்வுச் செலவினத்தின் 6.4 சதவீத வளர்ச்சியாலும் உந்தப்பட்டு 2024இல் நடைமுறை விலைகளில் 9.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** முதலீட்டுச் செலவினத்தின் முக்கிய கூறான மொத்த நிலையான மூலதன உருவாக்கமானது கட்டடவாக்கச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக இக்காலப்பகுதியில் மீளெழுச்சியடைந்தது. அதேவேளை, தனியார் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியின் காரணமாக நுகர்வுச் செலவினமானது முன்னைய ஆண்டிலும் பார்க்க மெதுவான வேகமொன்றில் தொடர்ந்து வளர்ச்சியடைந்தமையானது

1

நுகர்வுச் செலவினத்தின் மீதான குறைந்தளவிலான விலைத் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. அதேவேளை, இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது 2024இன் தேறிய வெளிநாட்டுக் கேள்வியில் சுருக்கமொன்றிற்கு வழிவகுத்தது.

**நிலையான விலைகளில், கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியினால் அநேகமாக உந்தப்பட்டு முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட 21.1 சதவீத வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு, 2024இல் உள்நாட்டுக் கேள்வியானது மீளெழுச்சியடைந்தது.** மேலும், தனியார் நுகர்வுச் செலவினத்தினால் உந்தப்பட்டு, ஆண்டில் நுகர்வுச் செலவினமானது 3.2 சதவீதத்தனால் வளர்ச்சியடைந்தது. இருப்பினும், இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி வீழ்ச்சியடைந்தது.

**நாட்டின் தேசிய சேமிப்புக்கள் 2024இல் நடைமுறை விலைகளில் 17.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டுச் சேமிப்புக்களில் ஏற்பட்ட 18.3 சதவீத வளர்ச்சி முக்கிய காரணமாயமைந்தது.** மேலும், உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் மற்றும் தேறிய இரண்டாந்தர வருமானம் ஆகிய இரண்டும் 2024இல் சாதகமான போக்கொன்றில் அபிவிருத்தியடைந்தமையானது தேசிய சேமிப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு நேர்மறையாகப் பங்களித்தது. தேசிய சேமிப்பில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்துடன், தேசிய சேமிப்பு-முதலீட்டு இடைவெளி 2024 இல் நேர்மறையாகவே விளங்கியது.

## 1.2.4. வருமானம்

**2024இன் வருமான மதிப்பீடுகளைப் பரிசீலனையில் கொள்கையில், பொருளாதாரத்தின் மிகப்பெரும் வருமானக் கூறான மொத்த தொழிற்பாட்டு மிகை, மொத்த கூட்டப்பட்ட பெறுமதியில் 37.4 சதவீதத்திற்கு வகைகூறி இவ்வாண்டுப்பகுதியில் நடைமுறை விலைகளில் 6.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இரண்டாவது மிகப்பெரிய வருமானக்கூறான மொத்தக் கலப்பு வருமானம் 2024இல் 6.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

**அட்டவணை 1.3 : நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வி மற்றும் சேமிப்புக்கள் (அ)(ஆ)**

| பொருளாதார நடவடிக்கை | ரூ. பில்லியன் | | % மாற்றம் | | மொ.உ.உ இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2023 (இ) | 2024 | 2023 (இ) | 2024 | 2023 (இ) | 2024 |
| **1. உள்நாட்டு கேள்வி** | **28,011.5** | **30,683.4** | 12.4 | 9.5 | 102.2 | 102.6 |
| 1.1 நுகர்வு | 21,270.3 | **22,623.0** | 15.9 | **6.4** | 77.6 | **75.7** |
| தனியார் | 19,412.0 | **20,542.2** | 16.8 | **5.8** | 70.8 | **68.7** |
| அரசு | 1,858.4 | **2,080.8** | 6.8 | **12.0** | 6.8 | **7.0** |
| 1.2 முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) | 6,741.2 | **8,060.3** | 2.7 | **19.6** | 24.6 | **27.0** |
| மொத்த நிலையான மூலதன உருவாக்கம் | 4,891.8 | **5,618.8** | -15.0 | **14.9** | 17.8 | **18.8** |
| இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் கையகப்படுத்தல்களிலிருந்து கழித்தொதுக்கப்பட்ட பெறுமதிகள் | 1,849.3 | **2,441.5** | 128.9 | **32.0** | 6.7 | **8.2** |
| **2. தேறிய வெளிநாட்டு கேள்வி** | **-591.7** | **-784.8** | **31.0** | **-32.6** | **-2.2** | **-2.6** |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி | 5,672.9 | **5,945.7** | 9.3 | **4.8** | 20.7 | **19.9** |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதி | 6,264.6 | **6,730.5** | 3.6 | **7.4** | 22.8 | **22.5** |
| **3. மொத்த கேள்வி (மொ.உ.உ.) (1 + 2)** | **27,419.8** | **29,898.6** | **13.9** | **9.0** | **100.0** | **100.0** |
| **4. உள்நாட்டு சேமிப்புக்கள் (3 - 1.1)** | **6,149.5** | **7,275.5** | **7.8** | **18.3** | **22.4** | **24.3** |
| தனியார் | **7,800.3** | **8,584.7** | **7.7** | **10.1** | **28.4** | **28.7** |
| அரசாங்கம் (ஈ) | **-1650.9** | **-1,309.1** | **-7.2** | **20.7** | **-6.0** | **-4.4** |
| **5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் (உ)** | **-833.5** | **-744.7** | **-35.1** | **10.6** | **-3.0** | **-2.5** |
| **6. வெளிநாட்டிலிருந்தான தேறிய இரண்டாந்தர வருமானம் (உ)** | **1,906.8** | **1,942.7** | **64.5** | **1.9** | **7.0** | **6.5** |
| **7. தேசிய சேமிப்புக்கள் (4 + 5 + 6)** | **7,222.8** | **8,473.5** | **15.6** | **17.3** | **26.3** | **28.3** |
| **8. சேமிப்புக்கள் முதலீட்டு இடைவெளி** | | | | | | |
| உள்நாட்டு சேமிப்புக்கள் - முதலீடு (4 - 1.2) | -591.7 | **-784.8** | | | -2.2 | **-2.6** |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7 - 1.2) | 481.7 | **413.2** | | | 1.8 | **1.4** |
| **9. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை (2 + 5 + 6) (உ)** | **481.7** | **413.2** | | | **1.8** | **1.4** |

(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) மத்திய அரசாங்கத்தின் நடைமுறைக் கணக்கு நிலுவையாகும்.
(உ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான ஏதேனும் வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்.

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1.4 : நடைமுறைச் சந்தை விலைகளில் பொருளாதாரத் துறையில் வருமானக் கூறுகள் (அ)(ஆ)**

சதவீதப் பங்கு (%)

| விடயம் | 2023 (இ) | | | | | 2024 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் | நிதிக் கூட்டுத்தாபனங்கள் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்தப் பொருளாதாரம் | நிதியல்லா கூட்டுத்தாபனகள | நிதிக் கூட்டுத்தாபனங்கள் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்தப் பொருளாதாரம் |
| ஊழியர்களின் நட்டஈடு | 53.3 | 9.3 | 20.1 | 17.3 | 100.0 | 53.8 | 7.7 | 20.9 | 17.7 | 100.0 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 82.2 | 15.5 | 2.3 | - | 100.0 | 81.8 | 16.0 | 2.2 | - | 100.0 |
| மொத்த கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | 100.0 | - | - | - | 100.0 | 100.0 |
| உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள் | 64.6 | 14.6 | - | 20.8 | 100.0 | 66.2 | 13.9 | - | 19.9 | 100.0 |
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டப்பட்டவை | 43.1 | 7.9 | 6.4 | 42.5 | 100.0 | 43.2 | 7.7 | 6.6 | 42.5 | 100.0 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

அதேவேளை, ஊழியர்களின் இழப்பீடு மற்றும் உற்பத்தி மீதான உதவுதொகைகளையும் கழித்த ஏனைய வரிகள் என்பன முறையே 5.2 மற்றும் 30.4 சதவீத அதிகரிப்புக்களை பதிவு செய்தது. மொத்தப் பெறுமதி கூட்டப்பட்டவற்றின் நிறுவன ரீதியான துறைப் பகுப்பாய்வினைப் பரிசீலனையில் கொள்கையில் நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் பாரிய வருமான உருவாக்கிகளாகக் காணப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து முறையே வீட்டுத்துறையும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்களும், நிதிக் கூட்டுத்தாபனங்களும் மற்றும் பொது அரசாங்கமும் காணப்பட்டன.

## 1.2.5. குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

**பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டவாறு, இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகையானது 2024இல் 21.916 மில்லியனிற்கு 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** ஒரு வருடத்தில் பிறப்பு மற்றும் இறப்புகளுக்கு இடையிலான வித்தியாசத்தால் அளவிடப்படும், மக்கள்தொகையின் இயற்கையான அதிகரிப்பு குறைவடைந்தமை மற்றும் நிகர இடம்பெயர்வு இதற்கு காரணமாகும். மொத்த பரப்பளவிற்கான[12] குடித்தொகையின் விகிதமான நாட்டின் குடித்தொகை அடர்த்தியானது 2024இல் சதுர கிலோ மீற்றரொன்றிற்கு 352 மக்களாக பதிவு செய்தது.

12 இலங்கை நில அளவைத் துறை 2024 ஆம் ஆண்டில் நாட்டின் நிலப்பரப்பை 67,240 சதுர கி.மீ (நிலப்பரப்பு: 62,302 சதுர கி.மீ) ஆக மீண்டும் கணக்கிட்டது, இது முன்னர் 65,610 சதுர கி.மீ (நிலப்பரப்பு: 62,705 சதுர கி.மீ) ஆக அறிவிக்கப்பட்டது. (மூலம்: https://www.survey.gov.lk/sdweb/pdf/latestpost/Recalculation%20of%20Country%20Extent.pdf)

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கைத் தொழிற்படை அளவீட்டினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, பொருளாதார ரீதியில் செயற்படுகின்ற[13] குடித்தொகையினர் (தொழிற்படை) 2023இல் பதிவுசெய்யப்பட்ட 8.408 மில்லியனிலிருந்து 2024இல் 8.316 மில்லியனிற்குக் குறைவடைந்தது.** வீட்டுத்துறைக் குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதமாக

13 இது தற்போதைய பொருளாதார ரீதியாக செயற்படுகின்ற குடித்தொகையாகும். அதாவது தொடர்புடைய ஒரு வார காலப்பகுதியில் தொழிலுள்ள அல்லது தொழிலில்லாத ஆட்களின் எண்ணிக்கையாகும் (15 வயதும் அதற்கு மேலும்).

**அட்டவணை 1.5: குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)**

| விடயம் | 2023 | 2024 (ஆ) |
|---|---|---|
| குடும்ப அலகுகளின் எண்ணிக்கை '000 ஆட்கள் | 17,306 | 17,551 (இ) |
| தொழிற்படை '000 ஆட்கள் | 8,408 | 8,316 |
| தொழிலுள்ளோர் | 8,010 | 7,949 (இ) |
| தொழிலற்றோர் | 398 | 367 (இ) |
| தொழிலின்மை வீதம் | 4.7 | 4.4 |
| ஆண் | 3.6 | வி.கி. |
| பெண் | 7.0 | வி.கி. |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ) | 48.6 | 47.4 |
| ஆண் | 68.6 | வி.கி. |
| பெண் | 31.3 | வி.கி. |

*மூலம்:* தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை
(ஆ) ஆண்டின் போதான சராசரி காலாண்டுகளின் சராசரி
(இ) இப்பெறுமதிகள், 2025.03.08இல் உள்ளவாறு கிடைக்கப்பெறும் தகவல்களிலிருந்து பெறுவிக்கப்பட்டதுடன் பின்னரான திகதியில் வெளியிடப்படும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தினாலான புள்ளிவிபர வெளியீட்டினது பெறுமதிகளுடன் வேறுபடலாம்.
(ஈ) குடும்ப அலகுகளின் குடித்தொகையின் சதவீதமாக தொழிற்படைப் பங்கேற்பு
வி.கி. - விபரம் கிடைக்கப்பெறவில்லை

1

விளங்குகின்ற தொழிற்படைப் பங்கேற்பு வீதமும் 2023இல் பதிவுசெய்யப்பட்ட 48.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024இல் 47.4 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

தொழிலின்மை வீதமானது 2023இன் 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024இல் 4.4 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. 2024இல் தொழிலற்ற குடித்தொகை[14] மற்றும் தொழிலிலுள்ளவர்களின் குடித்தொகையும்[15] 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் குறைவடைந்தது.

**வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான புறப்படுகைகள் 2023இல் பதிவுசெய்யப்பட்ட 297,656 உடன் ஒப்பிடுகையில் 2024இல் 314,828இற்கு 5.8 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.** ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகளில் தொழில்வாய்ப்பிற்கான ஆண்கள் மற்றும் பெண்களின் புறப்படுகைகள் முறையே 59.3 சதவீதமாகவும் 40.7 சதவீதமாகவும் விளங்கின.

## 1.2.6. பொருளாதார உட்கட்டமைப்பு

### வலு மற்றும் சக்தி

### பெற்றோலியம்

**ஆண்டின் பிற்பகுதியில் படிப்படியான மிதமடைதலைத் தொடர்ந்து அதிகரிக்கும் விலைகளின் ஆரம்பப் போக்குடன், 2024ஆம் ஆண்டு முழுவதும் உலக மசகெண்ணெய் விலைகள் உயர்ந்தளவான தளம்பலுடன் காணப்பட்டன.** புவிசார் அரசியல் பதற்றங்களிலிருந்து தோன்றிய நிச்சயமற்றதன்மைகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவிலும் சீனாவிலும் மெதுவடைந்த பொருளாதார வளர்ச்சியின் கரிசனைகள் என்பனவற்றின் மூலம் இத்தளம்பல் பெருமளவில் தூண்டப்பட்டிருந்தது. இதன்விளைவாக, சராசரி பிறென்ட் மசகெண்ணெய் விலை 2023இன் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 82.22 இலிருந்து 2024இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 79.79 இற்கு 3.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கிடையில் பதிவுசெய்யப்பட்ட 17.0 சதவீத வீழ்ச்சியை விடவும் இவ்வீழ்ச்சி குறிப்பிடத்தக்களவு குறைவாக காணப்பட்டது.

**மிதமடைந்த உலகளாவிய விலைகள் மற்றும் இலங்கை ரூபாவின் உயர்வடைதலையும் பிரதிபலித்து, 2024 தொடக்கத்திலிருந்து பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன.** இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மசகெண்ணெயின் ஆண்டு சராசரி இறக்குமதி விலை 2023இன் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 89.60 இலிருந்து 2024இல் பீப்பாய் ஒன்றுக்கு 84.69 இற்கு 5.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் சீராக்கங்கள் ஆண்டுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு, ஆண்டிறுதியில் உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகளில் ஒட்டுமொத்த குறைப்புக்களை தோற்றுவித்தன. இதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வர்த்தகப்படுத்தப்பட்ட பெற்றோல் 92, தன்னியக்க டீசல், மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் 2023இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 10.7 சதவீதம், 13.1 சதவீதம் மற்றும் 23.9 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த குறைப்புக்களைப் பதிவுசெய்தன. பெற்றோல் 92, தன்னியக்க டீசல், மற்றும் மண்ணெண்ணெய் என்பன 2022இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2023இல் முறையே 16.5 சதவீதத்தினாலும், 31.9 சதவீதத்தினாலும் மற்றும் 48.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்ததுடன், 2022இலிருந்து 2023ஆம் ஆண்டுவரை இம்மூன்று பெற்றோலிய உற்பத்தி வகைகளின் தொடர்ச்சியான சில்லறை விலைக் குறைப்புக்களின் போக்காக இது விளங்குகின்றது.

**2024ஆம் ஆண்டில், பெற்றோலியத் துறை விற்பனைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எடுத்துக்காட்டி, பொருளாதார நடவடிக்கையின் படிப்படியான மீளெழுச்சியைப் பதிவுசெய்தது.** பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனைகளின் அளவு, 2024இல் 11.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. பொருளாதாரத்தின் தோற்றம்பெற்றுவரும் தேவைகளைப் பூர்த்திசெய்து, வினைத்திறனையும் போட்டித்தன்மையையும் மேம்படுத்துவதற்கு இலங்கையின் உள்நாட்டு


---

14 தொழிலுக்குக் கிடைக்கத்தக்க அத்துடன் அல்லது தொழிலை எதிர்பார்த்திருக்கும் ஆட்கள் மற்றும் தொழில்புரியாத மற்றும் கடந்த நான்கு வாரங்களில் தொழிலொன்றினைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அத்துடன் அடுத்த இரண்டு வார காலப்பகுதியில் தொழில்வாய்ப்பொன்றினை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ள ஆட்கள் தொழிலற்றவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.


15 ஆய்விற்குரிய காலப்பகுதியில் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது கொடுப்பனவு பெறும் ஊழியர்களாக, தொழில்தருநர்களாக, சொந்தத் தொழில்புரிபவர்களாக அல்லது பங்களிக்கின்ற குடும்ப உறுப்பினராக பணியாற்றும் ஆட்கள் தொழில்புரிபவர் எனக் குறிப்பிடப்படுவர். இது தொழிலிலுள்ள ஆட்களை உள்ளடக்குகின்ற போதிலும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் தொழில்புரியாத ஆட்களை உள்ளடக்காது.

**சிறப்பு வரைபடங்கள் 1.1**
**உள்நாட்டு எரிபொருள் விற்பனைகளிலும் விலைகளிலுமுள்ள போக்குகள்**

பெற்றோல் 90/92




தன்னியக்க டீசல்




*மூலங்கள்:* இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மத்திய வங்கி

2022 தொடக்கம் 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றோல் 90/92 மற்றும் தன்னியக்க டீசல் போன்றவற்றுக்கான விற்பனைகளின் அளவு மற்றும் உள்நாட்டு சில்லறை விலை என்பவற்றிற்கிடையிலான தொடர்பை வரைபடம் எடுத்துக்காட்டுகின்றது. பெற்றோலிய உற்பத்திகளின் உலகளாவிய விலை உயர்வு மற்றும் சூத்திரத்தின் அடிப்படையிலமைந்த விலையிடலை நடைமுறைப்படுத்தல் என்பவற்றுடன் 2022இன் நடுப்பகுதியில் எரிபொருளின் இரு வகைகளும் சடுதியான விலை அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. நெருக்கடிக் காலப்பகுதியில் அதிகரித்தளவிலான உள்நாட்டு விலைகள், எரிபொருள் பங்கீடு மற்றும் மிதமடைந்த பொருளாதார நடவடிக்கை என்பன மூலம் விற்பனைகளின் அளவு பாதிக்கப்பட்டது. இவ் அபிவிருத்திகளின் இணைந்த தாக்கத்திற்குப் பதிலிறுத்தும் விதத்தில், உள்நாட்டு சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் ஒட்டுமொத்த விற்பனை அளவு அதேகாலப்பகுதியில் சடுதியான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

நெருக்கடிக்குப் பின்னர் உலகளாவிய மற்றும் உள்நாட்டு விலைகள் இரண்டும் பின்னர் உறுதிநிலையடைந்து, உள்நாட்டு எரிபொருள் கிடைப்பனவு மீட்டெடுக்கப்பட்டபோதிலும், ஒட்டுமொத்த போக்குகள் உயர்ந்தளவான எரிபொருள் விலைகள் விற்பனைகளைக் குறைப்பதற்கு வழிவகுத்து, விலை தளம்பல்களுக்கான சந்தை உணர்திறனையும் நுகர்வோர் கேள்வியிலுள்ள சாத்தியமான மாற்றங்களையும் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு, உலகளாவிய பண்ட விலை அதிர்வுகளின் போது, நாட்டிற்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களைச் செலவின் அடிப்படையிலமைந்த விலையிடல் தணிக்கின்றது.

பெற்றோலிய சந்தையை தாராளமயமாக்குவதற்கான முயற்சிகள் ஆண்டுபகுதியில் நடைபெற்றுவந்தன. இம்மாற்றத்திற்கான பாகமாக, 2024இறுதியில், மூன்று புதிய தனியார் நிறுவனங்கள் தொழிற்பட்டுவந்ததுடன், ஒன்று 2023இல் தொடங்கப்பட்டதுடன் இரு நிறுவனங்கள் ஆண்டுபகுதியில் தொடங்கப்பட்டன.

**செலவு அடிப்படையிலான விலையிடலைப் பின்பற்றியதைத் தொடர்ந்து, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த காலங்களின் கணிசமான இழப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக வலுவான நிதியியல் செயலாற்றத்தைப் பதிவுசெய்தது.** இப்பின்னணியில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2022இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.617.6 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க இழப்பைத் தொடர்ந்து, 2023இல் ரூ.120.3 பில்லியன் கொண்ட இலாபத்தையும் 2024இல் ரூ.33.3 பில்லியன் கொண்ட இலாபத்தையும் பதிவுசெய்தது. 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2024இல் இலாபங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு தனியார் துறை நிறுவனங்களின் நுழைவைத் தொடர்ந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கு சுருங்கியதே முக்கிய காரணமாகும். 2022இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கான வழிமுறையாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரசாங்க உத்தரவாதப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் இருப்பான ஐ.அ.டொலர் 2.5 பில்லியனை அரச ஐந்தொகையினுள் பொறுப்பேற்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் இறக்குமதி கட்டணங்கள் 2024இன் இறுதியில் ஐ.அ.டொலர்

1


0.3 பில்லியனாக காணப்பட்டது. அதேவேளை, அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெறத்தக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வெளிநின்ற வர்த்தகம் 2024இன் இறுதியில் ரூ. 10.0 பில்லியனாக காணப்பட்டது.

## மின்வலு

**பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட திருப்பத்தினாலும் தொடர்ச்சியான இரு கீழ்நோக்கிய தீர்வை சீராக்கங்களுக்கும் அமைவாக, 2024இல் மின்வலு கேள்வி தொடர்ந்தும் மீட்சியடைந்தது.**

2024ஆம் ஆண்டில் அனைத்து நுகர்வோர் வகைகளும் விற்பனைகளில் வளர்ச்சியயைப் பதிவுசெய்து, 7.3 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. குறிப்பாக, மின்வலு கட்டணங்கள் குறைக்கப்பட்டதன் மூலம், உள்நாட்டு மற்றும் சமயத் துறை சார்ந்த விற்பனைகள் 2024ஆம் ஆண்டில் முதற்காலாண்டில் சிறிதளவு வீழ்ச்சியடைந்ததற்கு பின்னர் அதிகரித்தன. அதிகரித்த கேள்வியை நிறைவேற்றுவதற்கு ஆண்டுகாலப்பகுதியில் மின்வலு உருவாக்கமும் 7.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

வரைபடம் 1.10: வலு மற்றும் சக்தித் துறை அபிவிருத்திகள்



**வானிலையுடன் தொடர்புடைய இடையூறுகளின் காரணமாக மின்வலு உற்பத்திக் கலவை சில தளம்பல்களைக் காண்பித்தது.** ஆண்டின் முதல் காலாண்டில் பருகால வறட்சியும் 2024ஆம் ஆண்டின் மாச்சு, ஏப்பிறல், மற்றும் ஒத்தோபர் போன்ற மாத காலப்பகுதிகளில் குறைந்தளவான பருவக்காற்றுக்கு இடைப்பட்ட மழைப்பொழிவும் வலுத் துறையில் சில அழுத்தங்களை ஏற்படுத்தி, எரிபொருள் சார்ந்த அனல்மின் வலு உருவாக்கத்தில் அதிகளவில் தங்கியிருப்பதற்கு வழிவகுத்தது. எனினும், மே மாதத்தின் நடுப்பகுதியில், காணப்பட்ட சாதகமான மழைப்பொழிவும் நவெம்பரின் இறுதியளவில் அவதானிக்கப்பட்ட சராசரிக்கும் அதிகமான மழைவீழ்ச்சியும் உயர்ந்தளவான நீர்மின் வலு உற்பத்தியின் மூலம் மின்வலு உருவாக்கத்தின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டிற்கு பங்களித்தன. ஆண்டுகாலப்பகுதியில், நீர்மின், எரிபொருள், நிலக்கரி, மற்றும் மரபுசாரா மீள்புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு ஒட்டுமொத்த மின்வலு உருவாக்கத்திற்கு முறையே, 32.3 சதவீதமாகவும் 13.9 சதவீதமாகவும், 32.6 சதவீதமாகவும் மற்றும் 21.2 சதவீதமாகவும் விளங்கின.


**தொடர்ச்சியான மின்சாரக் கட்டண குறைப்புக்களுக்கு மத்தியில், 2024ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபை இலாபகரமாக காணப்பட்டது.** 2024ஆம் ஆண்டில் ஆண்டுக்குரிய மொத்த இலாபம் ரூ.148.6 பில்லியனைப் பதிவுசெய்தது. இவ் இலாபத்தினால் துணையளிக்கப்பட்டு, இலங்கை மின்சார சபையின் குறுகிய கால கடன்பெறுகைகளும் பொறுப்புக்களும் 2023இன் இறுதியில் ரூ.292.8 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ரூ.123.6 பில்லியனிற்கு

## சிறப்பு வரைபடங்கள் 1.2
## பயன்பாடுகளுக்கான செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடலின் முக்கியத்துவம்

நுகர்வோரின் வருமான அளவைப் பொருட்படுத்தாமல், அவர்களுக்கு 'பொதுப்படையான' தன்மையிலான நிவாரணத்தை வழங்குவதற்கு மின்சாரம் மற்றும் எரிபொருள் போன்ற பயன்பாடுகளுக்கான குறைந்தளவிலான செலவிலான விலையிடலை மேற்கொள்ளும் நீண்ட பாரம்பரியத்தை இலங்கை கொண்டிருந்தது. இச்சலுகைகள் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்றவற்றின் நிதியியல் செயலாற்றம் மீது குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தின. இத்தகைய அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் திரவத்தன்மைப் பற்றாக்குறைகள் வங்கித்தொழல் துறையினால் நிதியளிக்கப்பட்டதுடன், அதன்மூலம் ஏனைய உற்பத்தித்திறன் வாய்ந்த முதலீடுகள் குறைவடைந்து காணப்பட்டன.

இவ் அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மையைப் பாதுகாப்பதற்கு, 2022இல் இம்மரபுசார்ந்த படுகடன்களின் பகுதியொன்றினை ஏற்பதற்கும் செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறைகளுக்கமைய, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் எரிபொருள் விலைகள் மற்றும் மின்சாரக் கட்டணங்களின் கணிசமானச் சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் நிர்பந்திக்கப்பட்டது. அன்றிலிருந்து, இலங்கை மின்சார சபையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஆண்டுதோறும் இலாபமீட்டி வருகின்றன. இலக்கிடப்படாத மின்வலு உதவித்தொகைகள் பொதுமக்களுக்கும் வியாபாரங்களுக்கும் குறுகிய கால நிவாரணங்களை வழங்கினாலும் இறுதியில் மின்வலுவிற்கான உயர் விலைகள், வரிகள் மற்றும் ஒட்டுமொத்த பணவீக்கம் போன்ற வடிவங்களில் திரட்டப்பட்ட செலவை அவர்கள் சுமக்க வேண்டியிருந்ததென்பதனை இவ்வனுபவம் வெளிப்படுத்தியுள்ளது. பேரண்டபொருளாதாரத்திற்கான நீண்ட கால இழப்புகளுக்கு வழிவகுக்கின்ற குறுகிய கால வருமானங்களுக்கு குறைந்தளவு செலவு விலையிடல் என்ற கடுமையான சுழற்சியைத் தடுப்பதற்கு செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடலை தொடர்வது அவசியமாகும். ஆதலால், பயன்பாடுகளின் தவறான விலை நிர்ணயங்களின் ஊடாக அனைவருக்கும் 'பொதுப்படையான' தன்மையிலான நிவாரணமொன்றினை வழங்குவதற்குப் பதிலாக, பொருளாதாரத்தின் தேவையான பிரிவினர்களுக்கு இலக்கிடப்பட்ட நன்மைத் திட்டங்களின் ஊடாக மேலதிக ஆதரவு வழங்கப்பட முடியும். எனவே, பயன்பாடுகளுக்கான செலவு பிரதிபலிப்பு விலையிடல் பொறிமுறையிலிருந்து விலகுவது அரசாங்கத்திற்கோ அல்லது வியாபாரங்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ நீண்ட காலத்திற்கு பயனளிக்காது. மேலும், தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் வேளையில் நுகர்வோருக்கு நன்மைகளை வழங்குவதற்காக உற்பத்திச் செலவைக் குறைக்கின்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படக்கூடும்.

**இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் (ஆண்டிற்கான இலாபம்/ இழப்பு)**




*மூலங்கள்:* இலங்கை மின்சார சபை
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

1

வீழ்ச்சியடைந்த அதேவேளை நீண்டகால பொறுப்புக்கள் ரூ.413.3 பில்லியனிலிருந்து ரூ.409.0 பில்லியனிற்கு குறைவடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில், காலாண்டு திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் ஒழுங்கற்றநிலை காணப்பட்டபோதிலும், செலவு பிரதிபலிப்பு மின்சாரக் கட்டணத் திருத்தங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைய, மாச்சில் 21.9 சதவீதம் கொண்ட சராசரி குறைப்பைத் தொடர்ந்து யூலையில் மேலும் இடம்பெற்ற 22.5 சதவீதம் கொண்ட குறைப்புடன் மின்சாரக் கட்டணங்கள் ஆண்டுகாலப்பகுதியில் இரு தடவைகள் திருத்தப்பட்டன. ஆண்டின் பிற்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்ற மின்சாரக் கட்டணக் குறைப்புக்களின் காரணமாக, மாதாந்த இலாபங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. 2025 சனவரியில், சராசரியாக 20 சதவீதம் கொண்ட மின்சாரக் கட்டணங்களுக்கான மற்றுமொரு கீழ்நோக்கிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டமை அத்தகைய மின்சாரக் கட்டணங்களின் செலவுபிரதிபலிப்பு அளவு குறித்த கரிசனைகளை அதிகரித்தன. இவ்வாறு, செலவில் உண்மையான குறைப்புக்கள் மூலம் ஆதரவளிக்கப்படாமலிருக்கும், மேலும் மின்சாரக் கட்டணங்களில் ஏற்படும் குறைப்புக்கள் இலங்கை மின்சார சபையின் நிதியியல் செயலாற்றத்தை கடுமையாகப் பலவீனப்படுத்தக்கூடும்.

**அதிகரித்துவரும் மின்சார கேள்வியை நிவர்த்திசெய்வதற்கான முயற்சிகளுக்கு மத்தியில், உள்நாட்டு சக்தி மற்றும் வலுத் துறையில் சீர்திருத்தங்களை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டுவந்த அதேவேளை தற்போதுள்ள உட்கட்டமைப்பு தொடர்பான சிக்கல்களை சமப்படுத்தியது.** துறையில் தேவையான மறுசீரமைப்பை ஊக்குவிப்பதற்கு 2024ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க மின்சாரச் சட்டம் 2024 யூனில் இயற்றப்பட்டது. இச்சட்டவாக்கமானது கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல், சந்தைப் போட்டித்தன்மை, புதுப்பிக்கத்தகு வலு ஒருங்கிணைப்பு, மற்றும் நிறுவனம்சார் மறுசீரமைப்பு போன்ற முக்கிய பகுதிகளில் கவனம்செலுத்துவதுடன் வலுத் துறையுடன் தொடர்புடைய சட்டவாக்க கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க முன்னுதாரண மாற்றத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் மாற்றத்தைத் தொடர்ந்து, பாதுகாப்பான, நிலைபெறத்தக்க, மற்றும் பயன்பெறுநர்களை மையமாகக் கொண்ட மின்வலுத் துறையை இச்சட்டம் செயற்றிறன்மிக்க வகையில் ஆதரிப்பதை உறுதிப்படுத்துவதற்கான மேலதிகத் திருத்தங்களை மீளாய்வுசெய்து பரிந்துரைப்பதற்காக 2024இன் இறுதியில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. மேலும், சோபாதனவி மின்வலு நிலையத்திற்கான திட்டமிடப்பட்ட தொழிற்பாட்டு முறைமை மேம்படுத்தல்கள் மின்வலு உற்பத்திக்கு திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தும் ஆற்றலை கொண்ட நாட்டின் முதலாவது மின்வலு நிலையமாக மாறுவதற்கு உதவும். இம்மேம்பாடுகள் 2025இன் முதல் அரையாண்டில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு சேமிப்பு வசதிகள் உள்ளடங்கலாக, துணை உட்கட்டமைப்பின் அபிவிருத்தி 2028ஆம் ஆண்டில் நிறைவடையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், தற்போதைய சந்தை நிலைமைகள் மற்றும் நாட்டின் எதிர்கால வலுக் கேள்விளுக்கேற்ப சிறப்பாக இணங்கிச்செல்வதற்கு 2025-2044ஆம் ஆண்டுகளுக்கான நீண்டகால உருவாக்கத்திற்கான விரிவாக்கப்பட்ட திட்டத்தை மேம்படுத்துகின்ற செயன்முறையில் இலங்கை மின்சார சபை உள்ளது.

## போக்குவரத்துத் துறை

**நெருக்கடியான காலப்பகுதியில் போக்குவரத்துத் துறைக்கான குறிப்பிடத்தக்க பின்னடைவுகளைத் தொடர்ந்து, 2024ஆம் ஆண்டில் கலப்புச் செயலாற்றத்தைப் பதிவுசெய்தது.** தொழிற்படுத்தப்பட்ட கிலோ மீற்றர்களின் நியதிகளில், வீதிப் போக்குவரத்துக் குறிகாட்டிகளின் செயலாற்றம் சிறிதளவு விரிவாக்கத்தைப் பதிவுசெய்தது. அதேவேளை, அனுமதிச்சீட்டு வழங்கப்பட்ட பயணிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட இலங்கை போக்குவரத்து சபையின் பயணிகள் கிலோமீற்றர் சுருக்கத்தைப் பதிவுசெய்தது. மேலும், புகையிரத போக்குவரத்து நடவடிக்கைகள் கலப்பு செயலாற்றத்தைக் காண்பித்த அதேவேளை விமானப் போக்குவரத்து குறிகாட்டிகள் விரிவாக்கங்களைப் பதிவுசெய்தன. 2024 ஆண்டுகாலப்பகுதியில், துறைமுகத் துறை அதன் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க மீளெழுச்சியைக் காண்பித்து, 2023இலிருந்து பெற்றுக்கொண்ட மேல்நோக்கிய உத்வேகத்தை நிலைநிறுத்திக்கொண்டது.

**அட்டவணை 1.6 : போக்குவரத்துத் துறையின் செயலாற்றம்**

| துறை | 2023(அ) | 2024(அ) | மாற்றம் 2023/2024 (%) |
|---|---|---|---|
| **வீதிப் போக்குவரத்து (இலங்கை போக்குவரத்துச் சபை)** | | | |
| செயற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் தூரம் (மில்லியன்) | 364 | 371.7 | 2.1 |
| பயணிகள் கிலோமீற்றர் தூரம் (மில்லியன்) | 14,272 | 13,153 | -7.8 |
| **புகையிரத போக்குவாத்து (இலங்கை புகையிரதம்)** | | | |
| பயணிகள் கிலோமீற்றர் தூரம் (மில்லியன்) | 7,044 | 6,000 | -14.8 |
| பொருட்கள் கிலோமீற்றர் தூரம் (மில்லியன் தொன்) | 159 | 172 | 8.1 |
| **வான் போக்குவரத்து** | | | |
| பயணிகள் அசைவுகள் (மில்லியனில்) (ஆ) | 7.5 | 8.8 | 17.8 |
| இதில் சிறிலன்கன் ஏயார்லைன் | 3.7 | 3.5 | -6.1 |
| கப்பல் கட்டணங்கள் (மெ.தொ. '000) | 158.6 | 195.4 | 23.2 |
| இதில் சிறிலன்கன் ஏயார்லைன் | 79.3 | 93.0 | 17.2 |
| **கடல் போக்குவரத்து (கொழும்புத் துறைமுகம்)** | | | |
| கொள்கலன் கையாளுகை (இருபது அடிக்குச் சமமான அலகுகளினால், '000) | 6,950 | 7,792 | 12.1 |
| கப்பல் வருகைகளின் எண்ணிக்கை | 4,237 | 3,968 | -6.3 |

(அ) தற்காலிகமானது
(ஆ) இடைநிற் பயணிகள் நீங்கலாக

*மூலங்கள்:* இலங்கை போக்குவாத்துச் சபை
இலங்கை புகையிரதம்
இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகார சபை
இலங்கை துறைமுக அதிகாரசபை

## ஏனைய அபிவிருத்திகள்

**2024ஆம் ஆண்டில், பல்வேறு துறைகளில் முன்னேற்றம் சீரற்ற வகையில் காணப்பட்டபோதிலும், கொழும்புத் துறைமுக நகரம், கடற்படை துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைத்தல் உள்ளடங்கலாக முக்கிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை மேம்படுத்துவதில் அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது.** துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை நிறைவுபெறும் தருணத்திலிருந்த அதேவேளை மத்திய விரைவுச் சாலையின் பிரிவு I மற்றும் III இற்கான காணி கையேற்பு மற்றும் சிவில் பணிகள் ஆண்டில் முன்னேற்றமடைந்தன. வெளிநாட்டு அரசாங்க உதவித் திட்டத்தின் கீழ் 1,996 வீடமைப்பு அலகுகளை நிர்மாணிப்பதற்கான அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்ட அதேவேளை நகர அபிவிருத்தி அதிகார சபை தலைமையிலான ஏனைய பல்வேறு குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமான வீடமைப்பு தொடர்பான முன்னெடுப்புக்களும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இது பின்தங்கிய சமூகங்களுக்கு ஒழுங்கான வீடமைப்பு வசதிகளை வழங்குவதில் கவனம்செலுத்தியது. மேலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முக்கிய முன்னெடுப்புக்களான சியக் நகர அபிவிருத்தித் திட்டம் மற்றும் பொது நிறுவனங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பல்வேறு நகர உட்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள் இவ் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டன. கொழும்பு துறைமுக நகரத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திகளின் பாகமாக, பிராந்தியத்தின் முதல் நகர தீர்வையற்ற வணிக வளாகம் (Downtown Duty-Free Mall) ஆண்டுகாலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு தொடங்கிவைக்கப்பட்டது. மேலும், கொழும்பு துறைமுக நகரத்திற்கு ஏற்புடைய புதிய வங்கித்தொழில் ஒழுங்குவிதிகள் 2024இல் அறிமுகப்படுத்தப்பட்டு, முதலீட்டாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் உத்தரவாதத்தின் மூலம் முதலீட்டை கவர்வதற்கான அதன் தயார்நிலையை எடுத்துக்காட்டின. துறைமுக உட்கட்டமைப்பில், கொழும்பு துறைமுகத்தில் காணப்படும் கிழக்கு கொள்கலன் முனைக்கோடி மற்றும் மேற்கு கொள்கலன் முனைக்கோடி - I என்பனவற்றின் அபிவிருத்தி ஆண்டுகாலப்பகுதியில் முன்னேற்றமடைந்ததுடன் கிழக்கு கொள்கலன் முனைக்கோடி மற்றும் மேற்கு கொள்கலன் முனைக்கோடி - Iஇன் நிறைவுகள் 2026 மற்றும் 2027இல் முறையே நிறைவுபெறும். இவ் அபிவிருத்திகள் கொழும்பு துறைமுகத்தின் போட்டித்தன்மையை மேலும் அதிகரித்து, துறைமுகத் துறையில் அதிகரித்துவரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும் தோற்றம்பெற்றுவரும் கேள்வியை நிறைவேற்றுவதன் மூலமும் ஏனைய அண்டைய துறைமுகங்களுடன் மிகவும் தீவிரமாகப் போட்டியிடுவதற்கு இயலச்செய்யும்.

## 1.2.7 சமூக உட்கட்டமைப்பு

### கல்வி

**நெருக்கடிகளினால் ஏற்பட்ட வடுக்களின் தாக்கங்கள் காணப்பட்டபோதிலும், உலகளாவிய மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக ஏற்பட்ட பின்னடைவுகளின் பின்னர், 2024 காலப்பகுதியில் கல்வித் துறை பெருமளவில் இயல்புநிலைக்கு திரும்பியிருந்தது.** ஆண்டுப்பகுதியில், நாட்டின் சமமான அணுகலையும் சிறந்த கல்வியையும் உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய அதிகாரிகளினால் பரந்தளவிலான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம், இலவசக் கல்விக்கான சமமான அணுகலை உறுதிப்படுத்தும் வகையில், 2024ஆம் ஆண்டில் மாணவர் நல நிகழ்ச்சித்திட்டங்களை

1

அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்தது. மேலும், பாடசாலை சீருடைகள் 4.5 மில்லியனை விடவும் அதிகளவிலான மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டம் 1.4 மில்லியன் மாணவர்களை உள்ளடக்கி நீடிக்கப்பட்டதுடன் இலவசப் பாடப்புத்தகங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும், மாணவர் ஆதரவை மேலும் மேம்படுத்தும் வகையில், சுபஹா, சுஜாதா, தியனி, மற்றும் மகாத்மா காந்தி உதவுத்தொகைகள் போன்ற கொடைத் திட்டங்கள் 2024ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களுக்கு நீடிக்கப்பட்டன. மேலும், 2025ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு, தொழிற்கல்வியை கற்கும் மாணவர்களுக்கான உதவுத்தொகை, மஹாபொல உதவுதொகை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாதாந்த உதவுதொகை கொடுப்பனவுகளை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டது. 2023ஆம் ஆண்டிற்காக முதலில் திட்டமிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரம் மற்றும் உயர் தரத்திற்கான பொதுப் பரீட்சைகள் 2024ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அதேவேளை 2024ஆம் ஆண்டிற்கான சாதாரண தரப் பரீட்சைகள் 2025ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், பரீட்சைகளை முன்னெடுப்பதில் ஏற்பட்ட தொடர்ச்சியான தாமதங்கள் கல்வியின் துரிதத்தை எதிர்மறையாகப் பாதித்துள்ளன. மேலும், உலகளாவிய நோய்த்தொற்றும் பொருளாதார நெருக்கடியும் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடையில் விலகும் வீதங்களையும் மாணவர்களின் கல்விக்கு பெற்றோர்கள் மீது ஏற்படும் நிதியியல் சுமையையும் அதிகரிக்கச்செய்துள்ளன.

## சுகாதாரம்

**2024ஆம் ஆண்டில் வளம்சார்ந்த மட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், சுகாதாரத் துறை படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பியது.** இதற்கமைய, 2024ஆம் ஆண்டில் சுகாதார நல முறைமையையும் பணிகளையும் தரமுயர்த்தி மேம்படுத்துவதில், அரசாங்கம் முக்கிய ஆர்வலர்களுடன் இணைந்து, பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. ஆண்டுகாலப்பகுதியில், சுகாதார நலப் பணிகளின் சமமான அணுகலையும் அனைத்தையும் உள்ளடக்கியத் தன்மையையும் மேம்படுத்துவதில், நாட்டின் பல்வேறு பாகங்களை உள்ளடக்கி, குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு அபிவிருத்தி மைல்கற்கள் நிறைவேற்றப்பட்டன. ஏனையவற்றுக்கு மத்தியில், ஜேர்மன் அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட கரப்பிட்டியவிலுள்ள ஜேர்மன் மற்றும் இலங்கைக்கான நட்புறவு மகப்பேற்று மற்றும் சிறுவர் நல வைத்தியசாலையின் அங்குரார்ப்பணம், குருநாகலிலுள்ள போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட ஐந்து மாடி கட்டடம் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் பொது வைத்தியசாலையில் அமைந்துள்ள இருதய சத்திரசிகிச்சைக்கான கதெட்ரைசேசன் ஆய்வுகூடத்தை கொண்ட (Catheterization Laboratory) ஆறுமாடி கொண்ட கட்டடம், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட எலும்பு மச்சை மாற்று பிரிவு என்பன குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளாக கருதப்படுகின்றன. மேலும், 2025ஆம் ஆண்டின் தொடக்கத்தில், பல்வேறு நன்கொடையாளர்களின் நிதி உதவியுடன், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான அரசாங்க வைத்தியசாலையில் இலங்கையின் முதல் மற்றும் ஒரே எலும்பு மச்சை மற்றும் ஹீமாடோபாய்டிக் ஸ்டெம் செல் (Hematopoietic Stem Cell Transplant) மாற்று சிகிச்சைப் பிரிவு மஹரகமவிலுள்ள அபேக்ஷ புற்றுநோய் வைத்தியசாலையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

**இலங்கையின் சுகாதாரத் துறையில் தொடர்ந்தும் முன்னேற்றம் இருக்கின்றபோதிலும், சவால்களும் காணப்படுகின்றன.** இச்சவால்கள் சுகாதார முறைமையின் நவீனமயமாக்கல், மனித வளங்கள், நிதியிடல் மற்றும் வள ஒதுக்கீடு மற்றும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளுடன் தொடர்புடையனவாக காணப்படுகின்றன. ஆண்டுகாலப்பகுதியில், போதியளவு ஆய்வகச் சோதனை இயலளவு மற்றும் போக்குவரத்து வசதிகள் இன்மையானது நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எதிர்மறையாகப் பாதித்தது. இலங்கையில் ஏற்பட்ட உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், தாய் மற்றும் குழந்தை ஊட்டச்சத்து, இளம் பருவத்தினர் மற்றும் இளையோரின் மனநல ஆரோக்கியம் மற்றும் பொருளாதாரத்தின் பெருந்தோட்ட மற்றும் நகர்ப்புறத் துறைகளில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களிடையே காணப்படும் சுகாதாரச் சிக்கல்கள் மீது உபாய ரீதியிலான கவனம் என்பன இன்னும் கரிசனைக்குரியவையாகவே காணப்படுகின்றது. ஆகையினால், இப்பகுதிகளுடன் தொடர்புடைய

சுகாதாரத் துறையின் சரியான மாற்றங்கள் மற்றும் நாட்டின் அதிகரித்துவரும் வயதான குடித்தொகை, தொற்றா நோய்களின் விரைவான அதிகரிப்பு மற்றும் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய சுகாதாரம்சார்ந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்வதில் முனைப்புமிக்க உபாயங்கள் வகுக்கப்பட வேண்டும்.

## சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்கள்

**பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான சவால்களை அறிந்துகொள்வதன் மூலம், சமூகப் பாதுகாப்பு வலைகளை விரிவுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் அதன் முயற்சிகளை வலுப்படுத்தி, இலக்கிடப்பட்ட உதவியை உறுதிசெய்தது.** இம்முயற்சிகளின்படி, நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் 2023 யூலையில் தொடங்கப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைத் திட்டமானது 'மிகவும் வறுமையான', 'வறுமையான', மற்றும் 'பாதிக்கப்படக்கூடிய', மற்றும் 'நடுத்தர' என்று வகைப்படுத்தப்பட்ட குறைந்தளவான வருமானத்தை ஈட்டக்கூடிய குடும்பங்களுக்கு நிதியியல் உதவியினைத் தொடர்ந்தும் வழங்கிய அதேவேளை மாற்றுத்திறனாளிகள், அறியப்படாத காரணத்தினால் ஏற்பட்ட நாற்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் வயதான குடித்தொகையினர் ஆகியோருக்கும் தனிப்பட்ட கொடுப்பனவுகளை வழங்கியது. 2024ஆம் ஆண்டில், இத்திட்டமானது நிலுவைக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக, ரூ.145.6 பில்லியன் கொண்ட மொத்த பகிர்ந்தளிப்புக்களை நாடளாவிய ரீதியிலுள்ள 1.8 மில்லியன் நன்மைபெறும் குடும்பங்களுக்கு வழங்கியது. மேலும், மாற்றுத்திறனாளிகள், அறியப்படாத காரணத்தினால் ஏற்பட்ட நாற்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் வயதான குடித்தொகையினருக்கு ரூ.34.2 பில்லியன் கொண்ட தனிப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 1.1 மில்லியன் அளவிலான பாடசாலை சிறுவர்களுக்கான ரூ.6.6 பில்லியன் கொண்ட மொத்தச் செலவினத்துடன், எழுதுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான நிதி உதவியை வழங்கும் திட்டத்தையும் நலன்புரி நன்மைகள் சபை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. அதேவேளை, நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்திற்கான திருத்தங்கள் 2024 மே மற்றும் திசெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனுடன் இணைந்து, அஸ்வெசும திட்டத்தின் கீழ் நன்மைகளை மேம்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்குமான 2025ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் மேலும் மேம்பாடுகள் அறிவிக்கபட்டன. 2024 திசெம்பரில் விடுக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம், 2.4 மில்லியன் கொண்ட நன்மைபெறுநர்களுக்கான ஆதரவை விரிவுபடுத்துவதையும் மாற்றுத்திறனாளிகள், அறியப்படாத காரணத்தினால் ஏற்பட்ட நாற்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் வயதான குடித்தொகையினரை உள்ளடங்கலாக 1.28 மில்லியன் தனிப்பட்டவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதையும் இத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. அதேவேளை, தேவைப்படுபவர்களுக்கான நன்மைகளை விரிவுபடுத்தும் நோக்கில், 2025ஆம் ஆண்டு தொடக்கத்தில் அஸ்வெசும இரண்டாம் கட்டத்தை நலன்புரி நன்மைகள் சபை தொடங்கியது. உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய குடும்பங்களை மதிப்பீடுசெய்து தெரிவுசெய்வதற்கான முயற்சிகள் தற்போது நடந்துவருகின்றன. எனினும், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி திட்டத்தின் கீழ் சமூகச் செலவின இலக்குகள், பயனாளிகளுக்கான வங்கிக் கணக்குகள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் கிடைக்காதது போன்ற நிர்வாக ரீதியிலான சிக்கல்கள் காரணமாக முழுமையாக அடையப்படவில்லை, இதன்மூலம், தெரிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்களுக்கு சலுகைகள் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. இதற்கமைய, குடித்தொகையில் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளைப் போதியளவு உள்ளடக்கும் வகையில் இப்பிரச்சினைகளை விரைவாகத் தீர்ப்பதற்கான தெளிவான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுப்படுத்தல் அமைச்சினால் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த திட்டத்தை உள்ளடக்கிய பிரஜாசக்தி தேசிய இயக்கத்தைத் தொடங்குவதற்கும் 2025 பெப்புருவரியில் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. சமூகப் பாதுகாப்பு, பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புக்களை ஒன்றிணைக்கப்பட்ட கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைப்பதன் மூலம் வறுமை ஒழிப்புக்கான பலதரப்பட்ட அணுகுமுறைகளை ஒன்றிணைத்து, பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு நிலையான ஆதரவை உறுதிசெய்வதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

1

**2024ஆம் ஆண்டில், மகளிர் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் அமைச்சு பல்வேறு கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தது.** இது சமூக நலனை மேம்படுத்துவதற்கும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களை ஆதரிப்பதற்கும் முக்கியமான சமூகப் பாதுகாப்பு மற்றும் உதவுத்தொகை முயற்சிகளுடன் இணைந்து செயற்பட்டது. இதற்கமைய, தேசிய மகளிர் ஆணைக்குழுவை தாபித்தல், பெண்களின் உரிமைகளை உறுதிசெய்வதற்காக மகளிர் குறைகேள் அதிகாரியொருவரை நியமித்தல், மகளிருக்கான தேசிய நிதியை உருவாக்குதல் மற்றும் தேசிய பாலின சமத்துவம் மற்றும் மகளிர் வலுப்படுத்தல் கொள்கையை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றிற்காக இயற்றப்பட்ட 2024ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பெண்களின் வலுவூட்டல் சட்டம் உள்ளிட்ட முக்கிய சட்டவாக்க வழிமுறைகளை அமைச்சு அறிமுகப்படுத்தியது. ஆண்டுகாலப்பகுதியில், ஊட்டச்சத்து மற்றும் காலை உணவுகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நிதி உதவி உள்ளடங்கலாக பல்வேறு மகளிர் மற்றும் சிறுவர் நலத் திட்டங்களையும் அமைச்சு நடைமுறைப்படுத்தியது.

## 1.3. நாணயத் துறை அபிவிருத்திகள்


### 1.3.1. சந்தை வட்டி வீதங்கள்

**2023 யூன் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளினால் உந்தப்பட்டு, சந்தை வட்டி வீதங்கள் 2024இல் அவற்றின் கீழ்நோக்கிய உத்வேகத்தினைத் தொடர்ந்தன.** அக்காலப் பகுதியிலிருந்து, 2024 இல் 125 அடிப்படைப் புள்ளிக் குறைப்புடன், மொத்த கொள்கை வீதக் குறைப்பானது 775 அடிப்படைப் புள்ளிகளாக காணப்பட்டன. இரட்டைக் கொள்கை வட்டி வீத முறைமையொன்றிலிருந்து ஒற்றைக் கொள்கை வட்டி வீத முறைமையொன்றிற்கான மாறுதலினைக் குறித்துக்காட்டிய ஓரிரவு கொள்கை வீதத்தின்[16] அறிமுகத்துடன் இணைந்து 2024 நவெம்பர் பிற்பகுதியில் கொள்கை வட்டி வீதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏறத்தாழ 50 அடிப்படைப் புள்ளிகளினைக் கொண்ட வினைத்திறன்மிக்க குறைப்பினை இது உள்ளடக்கின்றது. நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் மேலதிகத்தளர்வு மற்றும் உள்நாட்டுப் பணச் சந்தையின் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது[17] ஆண்டு காலப்பகுதியில் கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டது. 2024 நவெம்பரில் ஓரிரவு கொள்கை வீதத்தின் அறிமுகப்படுத்தலினைத் தொடர்ந்து, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது படிப்படியான கீழ்நோக்கிய சீராக்கமொன்றினைக் கொண்டிருந்ததுடன் அதனைத்தொடர்ந்து ஆண்டின் இறுதியளவில் ஏறத்தாழ 8.00 சதவீதத்தில் உறுதிநிலையடைந்தது. நாணயக் கொள்கையின் தளர்த்துகைக்கு மேலதிகமாக, மெதுவடைந்த பணவீக்கம், மிதமான பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் கிட்டிய இறுதிப்படுத்தலினைத் தொடர்ந்து குறைக்கப்பட்ட இடர்நேர்வு மிகை என்பன 2024இல் சந்தை வட்டி வீதங்களில் ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றிற்கு ஆதரவளித்தன. 2024இன் முதலாவது அரைப் பகுதியில் சந்தை வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய சீராக்கமானது குறிப்பிடத்தக்கதொன்றாகக் காணப்பட்ட வேளையில், சீராக்கத்தின் வேகமானது 2024இன் நடுப்பகுதியில் அரசப்பிணையங்கள் மீதான விளைவு வீதங்களில் தற்காலிக அதிகரிப்பொன்றினால் மெதுவடைந்து காணப்பட்டது. இருப்பினும், சந்தை வைப்பு மற்றும் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் ஆகிய இரண்டும் 2024இன் பிற்பகுதியில் மேலும் மிதமடைந்து காணப்பட்டது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் வைத்திருக்கப்பட்ட வட்டியுள்ள ரூபா வைப்புக்களின் வெளிநின்ற இருப்புக்களை அடிப்படையாகக் கொண்ட வட்டி வீதங்கள் (சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம்) மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம்) 2024இல் 4.1-5.6 சதவீத புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. குறிப்பாக, சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் ஆகிய இரண்டும் ஆண்டு முழுவதும் நிலையான கீழ்நோக்கிய போக்கொன்றினைக் காட்டியபோதிலும், வீழ்ச்சியின் வேகம் பின்னைய அரைப்பகுதியில் ஓரளவு மெதுவடைந்து காணப்பட்டது. சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் என்பவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, குறித்த மாத காலப்பகுதியொன்றில் உரிமம்பெற்ற வர்த்தக

16 ஓரிரவு கொள்கை வீதத்தைப் பற்றிய மேலதிக விபரங்களுக்கு “ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கான மாறுதல்” என்ற சிறப்புக் குறிப்பு 3இனை பார்வையிடவும்.

17 சந்தை வட்டி வீதங்களை வழிப்படுத்துவதற்கு நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழான தொழிற்பாட்டு இலக்கான குறுங்கால வட்டி வீதமானது மத்திய வங்கியின் மூலம் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகின்றது.

வரைபடம் 1.11: **தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள்**




குறிப்பு: நிரல் வரைபடங்கள் 2023 மற்றும் 2024இல் வட்டிவீதங்களில் வருடாந்த திருத்தத்தினை பிரதிபலிக்கின்றன.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வங்கிகளினால் திரட்டப்பட்ட புதிய வட்டியுள்ள ரூபா வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் 2024 காலப்பகுதியில் 4.5-4.8 சதவீதப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது. சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் என்பன 2024இன் முற்பகுதியில் நாணயக் கொள்கைத் தளர்வடைதலிற்கு ஏற்ப விரைவாகச் சீராக்கப்பட்ட வேளையில், ஆண்டின் பின்னரைப்பகுதியானது கலப்பான அசைவுகளை எடுத்துக்காட்டியமையானது ஆரம்பத்தில் விஞ்சியளவிலான சீராக்கத்திற்குப் பின்னரான மெதுவடைதலினைப் பிரதிபலித்தது. கடன்வழங்கல் வீதங்கள், குறிப்பாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் குறிப்பிட்ட வார காலப்பகுதியொன்றில் அவர்களது முதன்மை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சில்லறைச் சந்தைகளில் அடிப்படை வட்டி வீதங்களிலொன்றாக விளங்குகின்ற குறுங்கால ரூபாய்க் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு விதிக்கப்படுகின்ற வட்டி வீதங்கள் (சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம்) 2024இல் 3.2 சதவீத புள்ளிகளினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற ரூபாய்க் கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்ட கடன்வழங்கல் வட்டி வீதம் (சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம்) மற்றும் குறிப்பிட்ட மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்துப் புதிய ரூபாய்க் கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்ட கடன்வழங்கல் வட்டி வீதம் (சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம்) என்பன 2023இல் பதிவுசெய்யப்பட்ட 4.5 மற்றும் 11.8 சதவீத புள்ளி வீழ்ச்சியிலும் பார்க்க 2024இல் முறையே 2.3 மற்றும் 3.6 சதவீதப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. அடிப்படைக் கடன்வழங்கல் வீதங்கள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்த போதிலும், குறித்த சில வங்கிக் கடன் சாதனங்கள் மீதான உச்சளவிலான வீதங்கள் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டமையானது அத்தகைய வீதங்களின் மேலதிக குறைப்புக்களிற்கான சாத்தியப்பாட்டினைக் குறித்துக்காட்டுகின்றது. அதேவேளை, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீது விதிக்கப்படுகின்ற வட்டி வீதங்களும் ஏனைய சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் மிதமானதன்மையுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற ரூபாய்க் கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்ட வீதம் (சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கடன்வழங்கல் வீதம்) மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு குறிப்பிட்ட


1

மாத காலமொன்றில் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்துப் புதிய ரூபாய்க் கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்ட வீதம் என்பன முறையே 2.9 மற்றும் 3.4 சதவீதப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கல் வட்டி வீதங்களில் காணப்பட்ட ஒட்டுமொத்த குறைப்பிற்கு மத்தியில், கடன்வழங்கலின் தன்மை மற்றும் அதனுடன் இணைந்து காணப்பட்ட இடர்நேர்வுகள் என்பன காரணமாக நுண்பாக மற்றும் சிறியளவிலான கடன்பாட்டாளர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான வீதங்கள் ஏனைய சந்தைக் கடன்வழங்கல் வீதங்களுடன் ஒப்பிடுகையில் நெகிழ்வற்றதாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. பெயரளவு சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியில், அடையப்பட்ட பணவீக்க மட்டங்களைப் பயன்படுத்தி அளவிடப்பட்ட உண்மை வட்டி வீதங்கள் 2024 செத்தெம்பரிலிருந்து காணப்பட்ட தாழ்ந்தளவிலான பணவீக்க மற்றும் பணச்சுருக்க நிலைமைகளின் காரணமாக 2024இல் பாரியளவில் நேர்மறையாகத் தொடர்ந்தும் காணப்பட்டது. இருப்பினும், 2025இன் இரண்டாம் அரையாண்டில் இலக்கினை நோக்கிய பணவீக்கத்தின் எதிர்பார்க்கப்படும் ஒருங்கிணைவானது உண்மை வட்டி வீதங்களில் வீழ்ச்சியொன்றினை ஏற்படுத்தக்கூடுமென எடுத்துக்காட்டுகின்றது. சந்தைக் கடன்வழங்கல் வீதங்களின் கீழ்நோக்கிய பாதையானது 2025இன் முற்பகுதியில் தொடர்ந்தமையானது 2024இன் இரண்டாம் அரையாண்டில் கொள்கை நிலைப்பாட்டின் மேலதிக தளர்த்தலின் காலங்கடந்த தாக்கத்தினைப் பிரதிபலித்தது.

## அரசப் பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள்

**இறைச் செயலாற்றத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மேம்பாடுகள், நாணயக் கொள்கைத் தளர்த்தல் மற்றும் இடர்நேர்வு மிகையின் படிப்படியான மறைவடைதல் ஆகியவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் 2024இல் வீழ்ச்சியடைந்தன.** இருப்பினும், 2024இன் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கானது, ஆண்டின் நடுப்பகுதியில் இடைக்கிடையேயான அதிகரிப்புக்களைக் கொண்டிருந்தது. பாரியளவிலான சந்தை முதிர்வுகளுக்கு மத்தியில் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக ஏலங்களில் வழங்கப்பட்ட உயர்ந்தளவிலான தொகைகள் மற்றும் அரசியல் நிச்சயமற்றதன்மைகளினால் செல்வாக்கிற்குட்பட்ட சந்தை மனோபாவங்கள் போன்ற காரணிகளினால் 2024 இன் யூன் தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களின் அதிகரிப்பானது முக்கியமாக உந்தப்பட்டது. இருப்பினும், செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து, விளைவு வீதங்கள் வலுவான கீழ்நோக்கிய போக்கொன்றினை மீளாரம்பித்தமையானது வளர்ச்சியடைந்து வருகின்ற சந்தை நிலைமைகளிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் அதிகளவிலான அளவிடப்பட்ட சீராக்கமொன்றினைச் சமிக்ஞை செய்தது. விளைவு வீதங்களின் ஒட்டுமொத்த குறைப்பானது போதியளவிலான தாங்கியிருப்புக்களின் பேணுகையுடன் கூடிய (முன்மதியுடைய இறை முகாமைத்துவம்), பொதுப் படுகடன் மறுசீரமைப்பில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் நாணயக் கொள்கைத் தளர்வு மற்றும் அதிகரித்தளவிலான சந்தைத் திரவத்தன்மை என்பவற்றிற்கு மத்தியில் பணவீக்கப் பக்கம் மீதான சாதகமான அபிவிருத்திகள் என்பவற்றுடன் இணைந்து முன்மதியுடைய இறை முகாமைத்துவம் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது. மேலும், மெதுவடைந்த பணவீக்கம் மற்றும் சாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றுடன் இணைந்து 2024இன் இறுதியில் அரச பிணையங்கள் சந்தைக்கான அதிகரித்தளவிலான தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் இப்போக்கிற்கு மேலும்

வரைபடம் 1.12: அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

1

**அட்டவணை 1.7 : வட்டி வீதங்களின் அசைவுகள்**

ஆண்டிற்காண்டு சதவீதம்

| வட்டி வீதம் | 2023 இறுதி | 2024 இறுதி | சதவீதப் புள்ளிகளில் மாற்றம் |
|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதம்** | | | |
| ஓரிரவு கொள்கை வீதம் (அ) | - | 8.00 | - |
| **துணைநில் வசதி வீதங்கள் (அ)** | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 9.00 | 7.50 | -1.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 10.00 | 8.50 | -1.50 |
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் | 9.24 | 8.00 | -1.24 |
| **அரச பிணையங்களின் மீதான விளைவு வீதம்** | | | |
| முதலாந்தரச் சந்தை (ஆ) | | | |
| **திறைசேரி உண்டியல்கள்** | | | |
| 91-நாள் | 14.51 | 8.62 | -5.89 |
| 182-நாள் | 14.16 | 8.77 | -5.39 |
| 364-நாள் | 12.93 | 8.96 | -3.97 |
| **திறைசேரி முறிகள்** | | | |
| 2-ஆண்டு | 13.87 (இ) | 13.83 (ஈ) | -0.04 |
| 3-ஆண்டு | 14.07 (இ) | 11.63 (ஈ) | -2.44 |
| 4-ஆண்டு | 14.21 (இ) | 10.42 (ஈ) | -3.79 |
| 5-ஆண்டு | 14.32 (இ) | 10.75 (ஈ) | -3.57 |
| 10-ஆண்டு | - | - | - |
| இரண்டாந்தரச் சந்தை | | | |
| **திறைசேரி உண்டியல்கள்** | | | |
| 91-நாள் | 14.13 | 8.43 | -5.70 |
| 182-நாள் | 13.86 | 8.61 | -5.25 |
| 364-நாள் | 12.71 | 8.81 | -3.90 |
| **திறைசேரி முறிகள்** | | | |
| 2-ஆண்டு | 13.52 | 9.31 | -4.21 |
| 3-ஆண்டு | 13.62 | 9.87 | -3.75 |
| 4-ஆண்டு | 13.66 | 10.30 | -3.36 |
| 5-ஆண்டு | 13.74 | 10.61 | -3.13 |
| 10-ஆண்டு | 13.10 | 11.27 | -1.83 |
| **வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்** | | | |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (உ) | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 0.25-13.00 | 0.25-9.00 | - |
| 1 ஆண்டு நிலையான வைப்புக்கள் (ஊ) | 1.00-22.00 | 2.50-18.39 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 11.64 | 7.53 | -4.11 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 14.88 | 9.27 | -5.61 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 11.06 | 6.52 | -4.54 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 11.33 | 6.57 | -4.76 |
| ஏனைய நிதி நிறுவனங்கள் (எ) | | | |
| தேசிய சேமிப்பு வங்கி | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 3.00 | 3.00 | - |
| 1 ஆண்டு நிலையான வைப்புக்கள் | 8.00 | 7.00 | -1.00 |
| நிதிக் கம்பனிகள் (ஏ) | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 4.33-6.62 | 3.91-6.03 | - |
| 1 ஆண்டு நிலையான வைப்புக்கள் | 11.88-13.56 | 9.23-11.00 | - |
| **கடன்வழங்கல் மீதான வட்டி வீதங்கள்** | | | |
| உரிமம்பெற்ற வங்கிகள் (ஐ) | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கல் வீதம் | 15.33 | 12.48 | -2.85 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கல் வீதம் | 14.96 | 11.59 | -3.37 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (உ) | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் (மாதாந்த) | 12.39 | 8.92 | -3.47 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 14.21 | 11.93 | -2.28 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.38 | 10.77 | -3.61 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் (எ) | | | |
| தேசிய சேமிப்பு வங்கி | 15.00-20.00 | 12.75-18.00 | - |
| அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி (ஒ) | 9.50-21.00 | 9.00-20.00 | - |
| நிதிக் கம்பனிகள் (ஏ) | | | |
| நிதிக் குத்தகை | 14.98-32.48 | 10.99-31.75 | - |
| **கூட்டாண்மை படுகடன் சந்தை** | | | |
| தொகுதிக்கடன்கள் | 13.50-29.50 | 12.00-15.25 | - |
| வர்த்தகப் பத்திரம் | 17.00-26.50 | 12.00-13.75 | - |

(அ) 2024 நவம்பர் 27 முதல், ஓரிரவு கொள்கை வீதமானது மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதமாக வரையறுக்கப்படுகிறது. துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட வீச்சிற்குள் ஓரிரவு கொள்ளை வீதத்துடன் இணைக்கபட்டுள்ளன.
(ஆ) இறுதியாகக் கிடைக்கப்பெற்ற ஏலத்தில் உள்ளவாறான சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள்.
(இ) 2023இல் இறுதி முதலாந்தர ஏலம்:
2 ஆண்டு - 28 திசெ| 3 ஆண்டு - 12 திசெ| 4 ஆண்டு - 28 திசெ| 5 ஆண்டு - 12 திசெ
(ஈ) 2024இல் இறுதி முதலாந்தர ஏலம்:
2 ஆண்டு - 11 சன| 3 ஆண்டு - 12 நவெ| 4 ஆண்டு - 30 திசெ| 5 ஆண்டு - 12 திசெ
(உ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஊ) உயர்ந்தபட்ச வீதமானது குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்த வங்கிகளால் வழங்கப்பட்ட சிறப்பு வீதமாகும்.
(எ) ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களினால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஏ) வட்டி வீத வீச்சுக்கள் நிதிநிறுவனங்கள் குறித்துக் காட்டிய அதிகபட்ச சராசரி மற்றும் குறைந்தபட்ச சராசரி வீதங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவை தொடர்புடைய மாதங்களில் திரட்டப்பட்ட வைப்புத்தொகைகள் மற்றும் வழங்கப்பட்ட கடன்களுக்கு பொருந்தும். 2024ஆம் ஆண்டிற்கான தரவுகள் தற்காலிகமானது.
(ஐ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாக கொண்டது.
(ஒ) வீடமைப்பு நோக்கங்களுக்கான கடன் வழங்கல் மட்டும்.


*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
தொடர்புடைய நிதியியல் நிறுவனங்கள்

ஆதரவளித்தன. 2024இல் திறைசேரி உண்டியல்களின் அனைத்து முதிர்ச்சிகளின் விளைவு வீதங்களிலும் 4.0-5.9 சதவீத புள்ளிகளினாலான குறைவொன்று பதிவுசெய்யப்பட்டது. இப்போக்குடன் இசைந்து செல்லும் விதத்தில், திறைசேரி முறி விளைவு வீதங்களும் கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டன. 2024இல், திறைசேரி முறி வழங்கல்களில் பெரும்பாலானவை நடுத்தர தவணைக்குரியவையாக அமைந்தன. ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு முதிர்வுகளுக்கான விளைவு வீதங்கள் ஏறத்தாழ 1.0 - 4.0 சதவீத புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்துள்ளன. 2023இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட கிடையான இரண்டாந்தர சந்தை விளைவு வீத வளையியுடன் ஒப்பிடுகையில், 2024இல் விளைவு வீத வளையியானது கீழ்நோக்கி நகர்ந்து, மேல்நோக்கிச் சரிந்த வளையியொன்றினை பதிவுசெய்து இயல்புநிலைக்குத் திரும்பியது. இருப்பினும், நீண்ட கால முதிர்வுகளுடனான திறைசேரி முறிகள் மீதான விளைவு வீதங்களிற்கான கீழ்நோக்கிய சீராக்கமானது தொடர்ந்தும் மந்தமாகக் காணப்பட்டது.

## 1.3.2. உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை

**மத்திய வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிகளின் தேறிய கொள்வனவுகளைத் தொடர்ந்த திரவத்தன்மை உட்செலுத்தல்களின் விளைவொன்றாக உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மையானது 2024இல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.** அதிகரித்தளவிலான திரவத்தன்மை மட்டங்கள் மற்றும் உள்நாட்டுப் பணச் சந்தை நடவடிக்கை என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, பங்கேற்கும் நிறுவனங்களினால் மத்திய வங்கியின் துணைநில் வசதிகளைப் பயன்படுத்துதல் தொடர்பில் 2023இன் முற்பகுதியில் விதிக்கப்பட்ட மட்டுப்படுத்தல்கள் 2024 பெப்புருவரியில் தளர்த்தப்பட்டதுடன் 2024 ஏப்பிறலிலிருந்து முற்றாக நீக்கப்பட்டன. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான ஏறத்தாழ ரூ. 858 பில்லியனுக்கு நிகரான மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு நாணய கொள்வனவுகளிற்கு மேலதிகமாக, அரசிற்கான, குறிப்பாக இருபுடைப் பங்காளர்களிடமிருந்தான, தேறிய வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிற்கும் இடையிலான தேறிய வெளிநாட்டு நாணயப் பரஸ்பர பரிமாற்றல்களும் உள்நாட்டுப்

வரைபடம் 1.13: முக்கிய குறுங்கால வட்டி வீதங்கள் மற்றும் சந்தைத் திரவத்தன்மை





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

பணச் சந்தையில் ரூபாய்த் திரவத்தன்மையினை அதிகரித்தன. இருப்பினும், மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி முறிகள் மீதான நறுக்குக் கொடுப்பனவுகள், மத்திய வங்கியின் கையிருப்பிலுள்ள திறைசேரி உண்டியல்களின் முதிர்வுகள் மற்றும் தவணை நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் முதிர்வுகளுடன் இணைந்து தேறிய நாணய திரும்பப் பெறுகைகள் என்பன ஆண்டுக் காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையினை பகுதியளவு உள்ளீர்த்தன. இதற்கமைய, 2023இல் ஏறத்தாழ ரூ. 70 பில்லியன் சராசரித் தொகையிலான பற்றாக்குறையொன்றாக விளங்கிய திரவத்தன்மையானது 2024இன் நடுத்தர காலப்பகுதி வரையில் ஏறத்தாழ ரூ. 120 பில்லியன் தொகையிலான மிகையொன்றிற்கு அதிகரித்ததுடன், 2024இன் இறுதியளவில் ஏறத்தாழ ரூ. 168 பில்லியனுக்கு மேலும் விரிவடைந்தது. ஒட்டுமொத்தத் திரவத்தன்மையானது மிகையான மட்டங்களில் தொடர்ந்து காணப்பட்ட போதிலும், பங்கேற்கும் நிறுவனங்களிடையே திரவத்தன்மைப் பகிர்ந்தளிப்பானது சமச்சீரற்றதாகக் காணப்பட்டமையானது வங்கிகளிற்கிடையேயான சந்தையில், குறிப்பாக 2024இன் முதலாவது அரைப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையினை தோற்றுவித்தது. கொடுக்கல்வாங்கல்களிற்கான எதிர்தரப்பினர் வரையறைகள் காரணமாக பற்றாக்குறைகளைக் கொண்ட வங்கிகளிற்கு வெளிநாட்டு வங்கிகளின் பாரியளவிலான திரவத்தன்மை மிகைகள் பெருமளவில் கிடைப்பனவாகக் காணப்படாத போதிலும், 2024இன் இறுதியில் இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் மேம்படுத்தலானது நிலைமையினை ஓரளவு மாற்றியது. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு ஏற்ப, சந்தைப் பங்கேற்பாளர்களிடையே திரவத்தன்மையின் சமச்சீரற்ற பகிர்ந்தளிப்பினைச் சீராக்கும் பொருட்டு தேவைப்பாட்டின் அடிப்படையில் திரவத்தன்மையினை உட்செலுத்துகின்ற திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஊடாக உள்நாட்டுப் பணச் சந்தையில் கிரமமான தலையீட்டினை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. இருப்பினும், சந்தைப் பங்கேற்பாளர்களிடையே காணப்பட்ட மேம்பட்ட நடவடிக்கைகளுடன் திரவத்தன்மை மட்டங்கள் குறிப்பிடத்தக்க மிகையளவிலான மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டமையினால், மத்திய வங்கி அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைப் படிப்படியாகக் குறைத்ததுடன் 2024 திசெம்பர் முற்பகுதியிலிருந்து அதன் ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவுத் தொழிற்பாடுகளை இடைநிறுத்தியது.

## 1.3.3. கொடுகடன் கூட்டுக்கள்

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலம் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது 2024இல் குறிப்பிடத்தக்க விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தது.** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலம் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது 2024இன் முற்பகுதியில் சீரற்ற போக்கொன்றினைக் காட்டியமையானது வளர்ச்சியடைந்து வருகின்ற பொருளாதார நிலைமைகளிற்கு மத்தியில் எச்சரிக்கைமிக்க கடன்வழங்கல் நடத்தையினையும் கொடுகடனிற்கான மந்தமான கேள்வியினையும் பிரதிபலித்தது. இருப்பினும், 2024இன் நடுப்பகுதியிலிருந்து, பல்வேறு காரணிகளினால் உந்தப்பட்டு தனியார் துறைக் கொடுகடனானது வலுவான மற்றும் குறிப்பிடத்தக்க விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தது. இவ்வகையில், அடுத்தடுத்த கொள்கை வீதக் குறைப்புக்கள் திரவத்தன்மை நிலைமைகளை மேம்படுத்தியதுடன் கடன்பெறுகைச் செலவுகளைக் குறைவடையச் செய்தமையினால் நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் தொடர்ச்சியான தளர்வானது இன்றியமையாத பங்கினை ஆற்றியதுடன், அதன்மூலம் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் நிதியளித்தலினை நாடுவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். மேலும், மேம்பட்ட வியாபார நம்பிக்கையுடன் இணைந்து உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான புத்துயிரளிப்பானது இக்கொடுகடன் வளர்ச்சிக்கு, குறிப்பாக 2024 மே

வரைபடம் 1.14: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்




மூலம்: இலங்கை மத்திய வங்கி


தொடக்கம், பங்களித்தது. இதற்கமைய, 2024இல் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலம் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற கொடுகடனானது ரூ. 789.6 பில்லியன் தொகையினால் அதிகரித்து, 2023இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட சுருக்கமொன்றுடன் ஒப்பிடுகையில் 2024 திசெம்பரில் 10.7 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, தாழ்ந்தளவிலான வட்டி வீதச் சூழலொன்றிற்கு மத்தியில், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது 2024 காலப்பகுதியில் ஏறத்தாழ ரூ. 27.9 பில்லியன் தொகையினால் மாத்திரமே அதிகரித்து, 2024 இறுதியளவில் 2.5 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இருப்பினும், துறையில் காணப்பட்ட மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, நுகர்வோர் கொடுகடன், குறிப்பாக தங்கம் மற்றும் தனிநபர் கடன்கள் வடிவில், மற்றும் வாகனக் குத்தகைக்கான அதிகரித்துச் செல்கின்ற கேள்வியினால் முதன்மையாக உந்தப்பட்டு, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மூலமான தனியார் துறைக்கான கொடுகடனானது 2024 காலப்பகுதியில் ரூ. 277.1 பில்லியன் தொகையினால் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டு, 2024 இறுதியளவில் 21.0 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

**பொருளாதாரத்தின் முக்கிய துறைகளிற்கான குறிப்பிடத்தக்க கொடுகடன் விரிவாக்கமொன்று[18] 2024இல் பதிவுசெய்யப்பட்டமையானது மேம்பட்ட வியாபார நம்பிக்கைக்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளில் மீட்சியொன்றினைப் பிரதிபலித்தது.** கைத்தொழிலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீளெழுச்சியினைக் குறிக்கும் விதத்தில், கைத்தொழில் துறைக்கான கொடுகடனானது (இது வெளிநின்ற கொடுகடனின் 39.7 சதவீதமாகக் காணப்படுகின்றது) 2024 இறுதியளவில் 8.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இத்துறைக்குள், கைத்தொழில் நடவடிக்கைகளிற்குப் பாரியளவிலான பங்களிப்பைச் செலுத்திய கட்டடவாக்கத் துணைத்துறைக்கான கொடுகடனானது 5.5 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைக் கொண்டிருந்தமையானது நீண்ட காலத்திலான மெதுவடைந்த நடவடிக்கைகளினைத் தொடர்ந்து கட்டடவாக்கத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் படிப்படியான மீளெழுச்சியொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது. புடவைகள் மற்றும் ஆடைகள், இரசாயனம், பெற்றோலியம், மருந்தாக்கல் மற்றும் நலக்கவனிப்பு மற்றும் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி

18 கண்டறிகைகள், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலம் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் குறித்த காலாண்டு அளவீட்டின் அடிப்படையிலமைந்துள்ளன.

1

வரைபடம் 1.15: வங்கித்தொழில் முறைமையிலிருந்தான அரச துறைக்கான கொடுகடனின் வருடாந்த மாற்றம்




(அ) 2023 சனவரி 30 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அதன் ஒப்புதலுடன், இலங்கை பெற்றோலியக் கூட்டத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணய உத்தரவாதப்படுத்தப்பட்ட படுகடனானது 2022 திசெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில், மத்திய அரசப் படுகடனில் உள்ளீர்க்கப்பட்டது. இதற்கமைய, இச்சீராக்கமானது இரு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலாவது 2023 ஏப்பிறலிலும், அதைத்தொடர்ந்து 2023 திசெம்பரிலும் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் குறிப்பிடத்தக்க அரசுக்குச் சொந்தமான வர்த்தக வங்கியின் ஐந்தொகையில் பிரதிபலிக்கப்பட்டது. இதன்மூலம், அரசக் கூட்டுத்தாபனங்களுக்கான/அரசுக்குச்சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கொடுகடனில் குறைப்பும் அத்துடன் தேறிய அரசிற்கான கொடுகனில் தொடர்புடைய விரிவாக்கமும் தோற்றுவிக்கப்பட்டது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் உணவு மற்றும் குடிபானங்கள் துணைத்துறைகளிலும் கொடுகடன் விரிவாக்கமொன்று பதிவுசெய்யப்பட்டது. பணிகள் துறைக்கான கொடுகடனும் (இது வெளிநின்ற கொடுகடனின் 27.4 சதவீதமாகக் காணப்படுகின்றது) 2024 இறுதியளவில் 12.3 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றுடன் விரிவாக்கமொன்றினைக் காட்டியது. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், நிதியியல் மற்றும் வியாபாரப் பணிகள், தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கப்பலேற்றல், வான் போக்குவரத்து மற்றும் சரக்கு அனுப்பல்சார் துணைத்துறைகளின் கொடுகடனில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் பதிவுசெய்யப்பட்டமையானது பணிகளுடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகளின் மீளெழுச்சியொன்றினை எடுத்துக்காட்டுகின்றது. வேளாண்மைத் துறைக்கான கொடுகடனானது (இது வெளிநின்ற கொடுகடனின் 9.0 சதவீதமாகக் காணப்படுகின்றது) 2024 இறுதியளவில் 12.6 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இத்துறையினுள், தேயிலை, தெங்கு, நெல் மற்றும் மீன்பிடி என்பவற்றிற்கான கொடுகடன் விரிவடைந்தமையானது முதலாந்தர வேளாண்மை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த பண்டங்களிற்கான மேம்பட்ட நிதியிடலினைப் பிரதிபலித்தது. தனிநபர் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வடிவில் வழங்கப்பட்ட கொடுகடனும் (இது வெளிநின்ற கொடுகடனின் 23.9 சதவீதமாகும்) 2024 இறுதியளவில் 11.3 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அண்மைய ஆண்டுகளில் நீடித்து நிலைத்திருக்கின்ற விரிவாக்கமொன்றினைக் பதிவுசெய்துள்ள அடகு பிடித்தலுடன் தொடர்புடைய கொடுகடனானது தொடர்ந்து குறிப்பிடத்தக்களவு விரிவடைந்து, 2024இல் 20.5 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இக்குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்குக் அதிகரித்துச் செல்கின்ற தங்க விலைகள் மற்றும் கொடுகடனைப் பெற்றுக்கொள்வதற்கான எளிதான மற்றும் விரைவான வடிவமாக அடகு பிடித்தல் தொடர்ந்து காணப்படுகின்றமை என்பன காரணமாயமைகின்றன. மேலும், கடன் அட்டைகளுடன் தொடர்புடைய கடன்களும் ஆண்டு காலப்பகுதியில் வளர்ச்சியடைந்து, நுகர்வோர் செலவிடல் மற்றும் நிதியியல் துறை நடவடிக்கைகளின் புத்துயிரளிப்பினைச் சமிக்ஞையிடுகின்றது. அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான தனியார் துறைக்கான கொடுகடன் விரிவாக்கத்தின் முதிர்ச்சி வாயிலான பகுப்பாய்வொன்று குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கான கொடுகடன் வளர்ச்சியானது நீண்ட காலக் கொடுகடனிலும் பார்க்க உயர்ந்தளவில் காணப்பட்டதென்பதனைக் காட்டுகின்றது. பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான மீளெழுச்சியுடன், நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான கொடுகடனின் நீடித்திநிலைத்திருக்கின்ற விரிவாக்கமொன்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**2023இல் பதிவுசெய்யப்பட்ட போக்கினைத் தொடர்ந்து, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சியினால் பெறப்பட்ட கொடுகடனானது 2024இல் சுருக்கமடைந்தது.** செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலைச் சீராக்கங்களின் தொடர்ச்சி மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றலினை மேம்படுத்துவதற்கான ஏனைய முன்னெடுக்கப்படுகின்ற சீர்திருத்தங்கள் என்பவற்றினைத் தொடர்ந்து, முக்கிய அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் மேம்பட்ட நிதியியல் செயலாற்றத்திற்கு மத்தியில் அவற்றின் தேறிய மீள்கொடுப்பனவுகளினால் முக்கியமாக உந்தப்பட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிலிற்கான கொடுகடனானது 2024இல் ரூ. 113.1 பில்லியன் தொகையினால்

**அட்டவணை 1.8 : நாணயக் கூட்டுக்களின் அபிவிருத்திகள்**

ரூ. பில்லியன்

| விடயம் | 2020 இறுதி | 2021 இறுதி | 2022 இறுதி | 2023 இறுதி | 2024 இறுதி (அ) |
|---|---|---|---|---|---|
| **1. ஒதுக்குப் பணம்** | **964** | **1,306** | **1,349** | **1,329** | **1,539** |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 3.4 | 35.4 | 3.3 | -1.5 | **15.8** |
| மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் | 527 | -387 | -1,614 | -837 | **222** |
| மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 438 | 1,693 | 2,963 | 2,166 | **1,317** |
| **2. ஒடுங்கிய பணம் ($M_1$)** | **1,177** | **1,460** | **1,454** | **1,658** | **1,926** |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 36.0 | 24.0 | -0.4 | 14.1 | **16.1** |
| **3. விரிந்த பணம் ($M_{2b}$)** | **9,406** | **10,647** | **12,290** | **13,189** | **14,322** |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 23.4 | 13.2 | 15.4 | 7.3 | **8.6** |
| **3.1 தேறிய வெளிநாட்டு சொத்துக்கள்** | -209 | -982 | -1,767 | -456 | **573** |
| நாணய அதிகார சபைகள் (ஆ) | 527 | -387 | -1,614 | -837 | **222** |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | -736 | -595 | -153 | 381 | **351** |
| **3.2 தேறிய உள்நாட்டு சொத்துக்கள்** | 9,615 | 11,629 | 14,056 | 13,645 | **13,749** |
| உள்நாட்டு கொடுகடன் | 11,721 | 14,002 | 16,632 | 16,421 | **17,083** |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 4,548 | 5,832 | 7,471 | 8,285 (இ) | **8,270** |
| மத்திய வங்கி | 869 | 2,094 | 3,432 | 2,376 | **1,774** |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 3,679 | 3,738 | 4,039 | 5,909 | **6,497** |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் | 1,002 | 1,188 | 1,750 | 770 (இ) | **657** |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 6,171 | 6,981 | 7,411 | 7,366 | **8,156** |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 6.5 | 13.1 | 6.2 | -0.6 | **10.7** |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -2,106 | -2,373 | -2,576 | -2,776 | **-3,334** |
| **4. விரிந்த பணம் ($M_4$)** | **11,462** | **12,985** | **14,840** | **15,829** | **17,261** |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 21.4 | 13.3 | 14.3 | 6.7 | **9.0** |
| **4.1 தேறிய வெளிநாட்டு சொத்துக்கள்** | -217 | -999 | -1,767 | -456 | **552** |
| நாணய அதிகார சபைகள் (ஆ) | 527 | -387 | -1,614 | -837 | **222** |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | -736 | -595 | -153 | 381 | **351** |
| உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகள் | -8 | -17 | 0 | 0 | **-21** |
| **4.2 தேறிய உள்நாட்டு சொத்துக்கள்** | 11,679 | 13,984 | 16,607 | 16,285 | **16,709** |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 5,366 | 6,769 | 8,469 | 9,507 (இ) | **9,470** |
| மத்திய வங்கி | 869 | 2,094 | 3,432 | 2,376 | **1,774** |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 3,679 | 3,738 | 4,039 | 5,909 | **6,497** |
| உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகள் | 742 | 845 | 881 | 1,022 | **1,078** |
| நிதிக் கம்பனிகள் | 75 | 92 | 116 | 200 | **121** |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் | 1,002 | 1,188 | 1,750 | 770 (இ) | **657** |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 8,285 | 9,339 | 9,917 | 9,815 | **10,910** |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 6.3 | 12.7 | 6.2 | -1.0 | **11.2** |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 6,171 | 6,981 | 7,411 | 7,366 | **8,156** |
| உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகள் | 936 | 1,094 | 1,159 | 1,126 | **1,154** |
| நிதிக் கம்பனிகள் | 1,177 | 1,264 | 1,347 | 1,323 | **1,600** |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -2,973 | -3,312 | -3,529 | -3,807 | **-4,327** |
| **விஞ்ஞாபன விடயங்கள்:** | | | | | |
| பணப் பெருக்கி ($M_{2b}$) | 9.75 | 8.15 | 9.11 | 9.93 | **9.30** |
| சுற்றோட்ட வேகம் ($M_{2b}$ இற்கான சராசரி) (ஈ) | 1.84 | 1.73 | 2.04 | 2.17 (உ) | **2.18** |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

(அ) தற்காலிகமானது

(ஆ) அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் அறிக்கையிடப்பட்டவாறு மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்தையும் அதேபோன்று அரசாட்சி முகவர் நிலுவையையும் உள்ளடக்குகின்றது

(இ) 2023 சனவரி 30 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அதன் ஒப்புதலுடன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணய உத்தரவாதப்படுத்தப்பட்ட படுகடனானது 2022 திசெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில், மத்திய அரசப் படுகடனில் உள்ளீர்க்கப்பட்டது. இதற்கமைய, இச்சீராக்கமானது இரு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலாவது 2023 ஏப்பிறலிலும், அதைத்தொடர்ந்து 2023 திசெம்பரிலும் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் குறிப்பிடத்தக்க அரசுக்குச் சொந்தமான வர்த்தக வங்கியின் ஐந்தொகையில் பிரதிபலிக்கப்பட்டது. இதன்மூலம், அரசக் கூட்டுத்தாபனங்களுக்கான/அரசுக்குச்சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கொடுகடனில் குறைப்பும் அத்துடன் தேறிய அரசிற்கான கொடுகடனில் தொடர்புடைய விரிவாக்கமும் தோற்றுவிக்கப்பட்டது.

(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் (அடிப்படையாண்டு 2015)இன் அடிப்படையில் அமைந்தது.

(உ) திருத்தப்பட்டது

வீழ்ச்சியடைந்தது. அரசிற்குச் சொந்தமான முக்கிய வியாபாரத் தொழில்முயற்சிகளிற்கிடையே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிற்கான அதன் படுகடன் கடப்பாடுகளை 2023இல் அரசிற்கு மாற்றியதைத் தொடர்ந்து, 2024இல் ஏறத்தாழ ரூ.59.4 பில்லியன் தொகையிலான தேறிய மீள்கொடுப்பனவுகளை மேற்கொண்டதுடன், இதன்மூலம் வங்கித்தொழில் துறை மீதான அதன் தங்கியிருத்தலினைக் குறிப்பிடத்தக்களவு குறைவடையச்செய்தது. இலங்கை மின்சார சபையும் செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலைச் சீராக்கங்களினால் ஆதரவளிக்கப்பட்டு ஆண்டுக் காலப்பகுதியில் ஏறத்தாழ ரூ.27.2 பில்லியன் தொகையிலான தேறிய மீள்கொடுப்பனவுகளை மேற்கொண்டன. மேலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கொழும்பு வர்த்தக உரம் என்பவற்றின் மூலமான தேறிய மீள்கொடுப்பனவுகள் 2024இல் பதிவுசெய்யப்பட்டன. மேலும், ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியுயர்வானது அரசிற்குச் சொந்தமான சில வியாபாரத் தொழில்முயற்சிகளினாலான வெளிநாட்டு நாணயக் கடன்பெறுகைகளின் ரூபாவிற்கு நிகரான பெறுமதியில் குறைவொன்றிற்கு வழிவகுத்தது.

**வங்கித்தொழில் முறைமையின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது முக்கியமாக மத்திய வங்கியின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட சுருக்கத்தின் காரணமாக 2024இல் ரூ. 14.9 பில்லியன் தொகையினால் சிறிதளவு சுருக்கமடைந்த வேளையில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** 2023இல் அவதானிக்கப்பட்ட அபிவிருத்திகளைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது 2024இல் ரூ. 602.7 பில்லியனால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது[19]. மத்திய வங்கியிடமிருந்த திறைசேரி உண்டியல்களின் சுமை குறைக்கப்பட்டமை மற்றும் பங்கேற்கும் நிறுவனங்களின் மூலம் மத்திய வங்கியின் துணைநில் கடன்வழங்கல் வசதியின் குறைந்தளவிலான தங்கியிருத்தல் என்பன இதற்கு முக்கிய காரணங்களாயமைந்தன. மாறாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது ஆண்டுக் காலப்பகுதியில் ரூ. 587.8 பில்லியன் தொகையிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தமையானது அரச பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட அவற்றின் அதிகரித்தளவிலான முதலீடுகளைப் பிரதிபலித்தன. இருப்பினும், அதிகரிக்கப்பட்ட அரச பிணையங்களிலான முதலீடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து காணப்பட்டது. இது தாழ்ந்தளவிலான வருவாய் வீதத்தின் காரணமாக அத்தகைய முதலீடுகளின் குறைந்தளவிலான கவரும்தன்மையினால் விளக்கப்பட முடியும். அதேவேளை, நிதியியல் அளவீட்டின் $(M_4)$[20] அடிப்படையிலமைந்த அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனின் குறைவானது 2024இல் ரூ.37.6 பில்லியனாக அமைந்தது. இது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட ரூ.79.0 பில்லியன் தொகையிலான சுருக்கமொன்றினை உள்ளடக்கிய வேளையில், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன், அவற்றின் அரச பிணையங்களின் மேம்பட்ட முதலீட்டுடன் ரூ.56.3 பில்லியனால் விரிவடைந்தது.

### 1.3.4. நாணயக் கூட்டுக்கள்


**சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் முக்கியமாக உந்தப்பட்டு, ஒதுக்குப் பணமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** சுற்றோட்டத்திலுள்ள நாணயமானது 2024 ஏப்பிறலில் காணப்பட்ட பண்டிகைக் கேள்வி காரணமாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததுடன், அதனைத்தொடர்ந்து வங்கித்தொழில் முறைமைக்கான நாணயத் திரும்பலுடன் 2024 மே இறுதியளவில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், தாழ்ந்தளவிலான பணவீக்கச் சூழலிற்கு மத்தியில் சுற்றோட்டத்திலுள்ள நாணயமானது அதன்பின்னர் தொடர்ந்து உயர்வடைந்து காணப்பட்டது. தேர்தலுடன் தொடர்புடைய செலவுகள் மற்றும் ஆண்டு இறுதியிலான பண்டிகைக் கேள்வி என்பவற்றிற்கு மத்தியில் நாணயத்திற்கான அதிகரித்தளவிலான கேள்வியும்

19 மத்திய வங்கியின் திறைசேரி முறிக் கையிருப்புக்களின் சந்தைப் பெறுமதியினை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட முறையில் ஏற்பட்ட மாற்றமொன்று 2024 நவெம்பரில் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் குறிப்பிடத்தக்க விரிவாக்கமொன்றினை ஏற்படுத்தியது.

20 நிதியியல் அளவீடானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் மத்திய வங்கி என்பனவற்றிற்கு மேலதிகமாக உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பன உள்ளடங்கலாக அனைத்து வைப்புக்களையும் ஏற்கின்ற நிறுவனங்களையும் உள்ளடக்கின்ற பண நிரம்பலின் பரந்தளவிலான அளவீட்டினை வழங்குகின்றது.

1

வரைபடம் 1.16: விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்காண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தினை அதிகரித்தது. மேலும், வரி ஏய்ப்பு நோக்கங்களினால், பணத்தின் மூலமான கொடுக்கல்வாங்கல்களிற்கான படிப்படியான நகர்வொன்று பதிவுசெய்யப்பட்டது. இதற்கமைய, சுற்றோட்டத்திலுள்ள நாணயமானது 2024இல் ரூ. 172.2 பில்லியனால் அதிகரித்தது. அதேவேளை, மத்திய வங்கியின் துணைநில் வசதிகளிற்கான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அணுகலினை வரையறுப்பதற்காக மத்திய வங்கியின் நிர்வாக ரீதியிலான வழிமுறைகளிலிருந்து தோற்றம்பெற்ற, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்பட்ட ஒழுங்கற்ற பாரியளவிலான விஞ்சிய ஒதுக்குகளின் காரணமாக 2024இன் முதலாம் காலாண்டில் ஒதுக்குப் பணத்தில் உயர்ந்தளவிலான தளம்பல் அசைவுகள் அவதானிக்கப்பட்டன. 2024 ஏப்பிறல் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் இக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதுடன் ஒதுக்குப் பணத்தின் தளம்பல்தன்மையானது அதன்பின்னர் மறைவடைந்தது. முக்கியமாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மத்திய வங்கியிடமுள்ள வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு வைப்புக்களின் அதிகரிப்பிற்கு வழிவகுத்து ஒதுக்குப் பண விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தது. இதற்கமைய, ஒதுக்குப் பணமானது 2024 இறுதியளவில் ரூ. 1,539.3 பில்லியனிற்கு விரிவடைந்து, 15.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

**மத்திய வங்கியின் ஐந்தொகையின் சொத்துக்கள் பக்கத்தில், ஆண்டு காலப்பகுதியில் ஒதுக்குப் பணத்தின் விரிவாக்கமானது தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கத்தினால் முழுமையாக உந்தப்பட்டுக் காணப்பட்டது.** மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்ந்து மேம்பட்டதுடன் 2021 யூலையிலிருந்து முதலாவது தடவையாக 2024 ஒத்தோபரில் நேர்மறையாகத் திரும்பலடைந்து, ஆண்டுக் காலப்பகுதியில் ரூ. 1,059.5 பில்லியனிற்கு அதிகரித்தது. இது வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் குறைவு என்பவற்றின் ஒருங்கிணைந்த தாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான தேறிய கொள்வனவுகளின் மூலமான வெளிநாட்டுக் கையிருப்புக்களின் திரட்சியினால் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் ஏற்பட்ட மேம்பாடுகள் முக்கியமாக உந்தப்பட்ட வேளையில், இந்திய ரிசர்வ் வங்கியின் பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகளின் பணிக் கொடுப்பனவுகள் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் படிப்படியான வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. அதேவேளை, அரசாங்கத்தின் தேறிய கோரல்களில் ஏற்பட்ட சுருக்கம், குறிப்பாக மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் கையிருப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது (மீள்கொள்வனவு நீங்கலாக) மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் சுருக்கத்தின் முக்கிய காரணியாகக் காணப்பட்டது. மேலும், மத்திய வங்கி மூலம் வழங்கப்பட்ட திரவத்தன்மை உதவி வசதியின் முழுமையான தீர்ப்பனவின் காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மீதான மத்திய வங்கியின் கோரல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் ஆண்டுக் காலப்பகுதியில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்தது. இதற்கமைய, மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 2024இல் ரூ. 848.9 பில்லியன் தொகையினால் சுருக்கமடைந்தது.

**மத்திய வங்கியின் மேம்பட்ட தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலம் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கம் என்பன 2024ஆம் காலப்பகுதியில் விரிந்த பண ($M_{2b}$) நிரம்பலின் விரிவாக்கத்திற்குப் பாரியளவில்**

1

**பங்களித்தன.** மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் மேம்பாடுகளைப் பாரியளவில் பிரதிபலித்து, மத்திய வங்கி மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் என்பவற்றினை உள்ளடக்கிய வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 1,029.0 பில்லியனால் மேம்பட்டது. அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்து, இலங்கை ரூபாவின் பெறுமதியுயர்விலிருந்து தோற்றம்பெற்ற மீள்மதிப்பீட்டுத் தாக்கங்களின் முக்கிய காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2024 காலப்பகுதியில் சுருக்கமடைந்தது. இருப்பினும், ஆண்டுக் காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் இது பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது. இவ்வபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், $M_{2b}$ இன் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட 7.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024இல் 8.6 சதவீதத்திற்குத் துரிதமடைந்தது. $M_{2b}$ இன் போக்கினைப் பின்பற்றி, நிதியியல் அளவீட்டினால் அளவிடப்பட்ட $M_4$ விரிந்த பண நிரம்பலின் வளர்ச்சியும் அதேபோன்ற வேகமொன்றில் அதிகரித்தது. அதேவேளை, $M_{2b}$ மற்றும் ஒதுக்குப் பணம் என்பவற்றிற்கிடையிலான விகிதமாகக் காணப்படுகின்ற பணப் பெருக்கியானது ஒதுக்குப் பணத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தின் விளைவொன்றாக 2023இல் பதிவுசெய்யப்பட்ட 9.93 இலிருந்து 2024இல் 9.30 இற்குக் குறைவடைந்தது.


## 1.4. வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

### 1.4.1 சென்மதி நிலுவைகள்

#### நடைமுறைக் கணக்கு

**இலங்கையின் வெளிநாட்டுத் துறை அதன் நேர்மறையான வேகத்தைத் தொடர்ந்ததுடன், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு 2024ஆம் ஆண்டில் கணிசமானளவு மிகையொன்றினைப் பதிவுசெய்தது.** ஏற்றுமதி வருவாய்களின் விரிவாக்கத்தை விஞ்சுகின்ற இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட பாரியளவிலான விரிவாக்கத்தின் காரணமாக வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் விரிவடைந்தது. இருப்பினும், குறைந்தளவிலான கொள்வனவு சக்தி மற்றும் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் காரணமாக இறக்குமதிகளுக்கான கட்டுப்படுத்தப்பட்ட கேள்வி இறக்குமதிகளில் காணப்படும் மிகையான விரிவாக்கத்தை தடுத்திருந்தது. வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை பணிகள் வர்த்தகத்தில், குறிப்பாக சுற்றுலாத் துறையில், ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கு மிகையில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலம் எதிரீடுசெய்யப்பட்டது. முதலாந்தர வருமானக்

**சிறப்பு வரைபடங்கள் 1.3**
**மாதாந்த வெளிநாட்டு நாணயக் கணக்குப் புள்ளிவிபரங்கள்**




2024ஆம் ஆண்டின் இரு மாதாங்கள் தவிர பெரும்பாலான மாதங்களின் நடைமுறைக் கணக்கு மீதியானது சாதகமாகக் காணப்பட்டு, ஆண்டிற்கான நடைமுறைக் கணக்கு மிகையொன்றினைத் தோற்றுவித்தது. 2024 செத்தெம்பரில், விசா தொடர்பான இடையூறுகள் மற்றும் பொதுவான பருவகால சரிவினால் சுற்றுலாத்துறையானது பாதிக்கப்பட்டமையினால் பணிகள் கணக்கு மிகை வழமைக்கு மாறாகக் குறைவாகவிருந்தது. 2024 திசெம்பரில், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மறுசீரமைத்தலுடன் தொடர்புடைய முதலாந்தர வருமான கணக்கிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகளாகவும் பணிகள் கணக்கிலிருந்து அரச செலவினமாகவும் குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்டது. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு நடைமுறைக் கணக்கானது 2025இன் முதலாவது இரண்டு மாதங்களிலும் மிகையொன்றினைப் பதிவுசெய்தது.

**அட்டவணை 1.9 : நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு**

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2023 (அ) | 2024 (ஆ) |
|---|---|---|
| நடைமுறைக் கணக்கு (தேறிய) | 1,439 | 1,206 |
| பெறுகைகள் | 23,776 | 26,877 |
| கொடுப்பனவுகள் | 22,337 | 25,671 |
| | | |
| வர்த்தக நிலுவை | -4,900 | -6,069 |
| ஏற்றுமதிகள் | 11,911 | 12,772 |
| வேளாண்மை | 2,567 | 2,774 |
| கைத்தொழில் | 9,278 | 9,947 |
| கனிப்பொருள் | 38 | 25 |
| ஏனையவை | 28 | 26 |
| இறக்குமதிகள் | 16,811 | 18,841 |
| நுகர்வோர் | 3,044 | 3,466 |
| இடைநிலை | 11,007 | 11,915 |
| முதலீடு | 2,745 | 3,448 |
| ஏனையவை | 16 | 13 |
| | | |
| பணிகள் (தேறிய) | 3,053 | 3,435 |
| பெறுகைகள் | 5,416 | 6,910 |
| *இதில்;* | | |
| போக்குவரத்து | 1,550 | 1,794 |
| பயணம் | 2,068 | 3,169 |
| கணனி பணிகள் | 795 | 848 |
| கட்டடவாக்க பணிகள் | 355 | 212 |
| | | |
| கொடுப்பனவுகள் | 2,363 | 3,475 |
| *இதில்;* | | |
| போக்குவரத்து | 732 | 1,017 |
| பயணம் | 503 | 755 |
| கணனி பணிகள் | 198 | 194 |
| கட்டடவாக்க பணிகள் | 111 | 127 |
| | | |
| முதலாந்தர வருமானம் (தேறிய) | -2,548 | -2,599 |
| பெறுகைகள் | 460 | 609 |
| ஊழியர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் | 53 | 146 |
| முதலீட்டு வருமானம் | 407 | 463 |
| நேரடி முதலீடு | 8 | 73 |
| ஏனைய முதலீடு | 349 | 271 |
| ஒதுக்குச் சொத்துக்கள் | 49 | 119 |
| கொடுப்பனவுகள் | 3,007 | 3,208 |
| ஊழியர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் | 30 | 20 |
| முதலீட்டு வருமானம் | 2,977 | 3,188 |
| நேரடி முதலீடு | 916 | 942 |
| சொத்துப்பட்டியல் முதலீடு | 854 | 877 |
| ஏனைய முதலீடு | 1,207 | 1,369 |
| | | |
| இரண்டாந்தர வருமானம் (தேறிய) | 5,834 | 6,439 |
| பெறுகைகள் | 5,989 | 6,585 |
| *இதில்;* | | |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 5,970 | 6,575 |
| கொடுப்பனவுகள் | 155 | 146 |
| | | |
| மூலதனக் கணக்கு (தேறிய) | 37 | 12 |
| பெறுகைகள் | 40 | 20 |
| கொடுப்பனவுகள் | 3 | 8 |
| | | |
| நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு (தேறிய) | 1,476 | 1,217 |
| | | |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | | |
| வர்த்தக நிலுவை | -5.9 | -6.1 |
| பொருட்கள் மற்றும் பணிகள் நிலுவை | -2.2 | -2.7 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | 1.7 | 1.2 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

கணக்குப் பற்றாக்குறை 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் அதே மட்டத்தில் காணப்பட்டது. இதற்கமைய, நடைமுறைக் கணக்கு மிகை 2023ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 1.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில், (மொ.உ.உற்பத்தியின் 1.7 சதவீதம்) 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1.2 பில்லியனாகக் (மொ.உ.உற்பத்தியின் 1.2 சதவீதம்) காணப்பட்டது.

## வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கு

**வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் விரிவடைந்திருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளின் சராசரிகளை விடவும் குறைவாகக் காணப்பட்டது.** 2015 தொடக்கம் 2019 வரையான உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முன்னைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 9 மில்லியன் கொண்ட ஆண்டுச் சராசரி வர்த்தகப் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் மிதமடைந்து காணப்பட்டது. ஏற்றுமதி வருவாய்கள் முக்கியமாக கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டு, 2024ஆம் ஆண்டின் பெரும்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சாதகமான போக்கொன்றைப் பதிவுசெய்தன. அதேவேளை, அதிகரித்த பொருளாதார நடவடிக்கை, தளர்த்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள், தளர்த்தப்பட்ட நாணய நிலைப்பாடுகள் மற்றும் சாதகமான உலகளாவிய விலை இயக்கவாற்றல்கள் என்பனவற்றின் காரணமாக இறக்குமதிச் செலவினம் 2024ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, வர்த்தகப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் 5.9 சதவீதத்திலிருந்து 2024ஆம் ஆண்டில் 6.1 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

**இத்தகைய அபிவிருத்திகள் காணப்பட்ட போதிலும், ஏற்றுமதி விலைகளின் வீழ்ச்சியை விடவும் இறக்குமதி விலைகள் சிறிதளவு உயர்வான வேகத்தில் வீழ்ச்சியடைந்தமையினால், ஏற்றுமதியின் விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்கிடையிலான விகிதத்தால் அளவிடப்படும் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் 2024ஆம் ஆண்டில் சிறிதளவு முன்னேற்றமடைந்தது.** 2024ஆம் ஆண்டில், ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினம் ஆகிய இரண்டினதும் அதிகரிப்பு, உயர்ந்த அளவுகளினால் விபரிக்கப்பட்டது. அதேவேளை, ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய மொத்த வர்த்தகம் 2024ஆம் ஆண்டில், 10.1 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு)

1

**அட்டவணை 1.10 : வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றத்தின் சுருக்கம்**

| வகை | 2023 பெறுமதி (ஐ.அ.டொ. மில்லியன்) | 2024 பெறுமதி (ஐ.அ.டொ. மில்லியன்) | ஆண்டிற்காண்டு மாற்றம் (%) |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | 11,910.7 | 12,772.0 | 7.2 |
| கைத்தொழில் | 9,277.7 | 9,946.9 | 7.2 |
| வேளாண்மை | 2,566.5 | 2,774.5 | 8.1 |
| கனிப்பொருள் | 38.5 | 24.5 | -36.2 |
| வகைப்படுத்தப்படாதவை | 28.0 | 26.1 | -6.6 |
| **இறக்குமதிகள்** | 16,811.1 | 18,841.4 | 12.1 |
| நுகர்வோர் | 3,043.9 | 3,465.7 | 13.9 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 1,693.0 | 1,914.3 | 13.1 |
| உணவல்லா நுகர்வோர் | 1,350.9 | 1,551.4 | 14.8 |
| இடைநிலை | 11,006.6 | 11,914.5 | 8.2 |
| முதலீடு | 2,744.6 | 3,448.2 | 25.6 |
| வகைப்படுத்தப்படாதவை | 16.0 | 13.0 | -18.8 |
| **வர்த்தக நிலுவை** | -4,900.4 | -6,069.4 | |
| **மொத்த வர்த்தகம்** | 28,721.8 | 31,613.4 | 10.1 |

*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

அதிகரித்தது. இது முன்னேற்றமடைந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிலைமைகளின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி துறைகள் இரண்டும் விரிவடைந்தமையினால் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட மீட்சியினைப் பிரதிபலித்தது. இருப்பினும், திறந்த வர்த்தகமானது 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் மிதமடைந்ததுடன் 1990ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.


## ஏற்றுமதிச் செயலாற்றம்

**வணிகப்பொருள் ஏற்றுமதி துறை 2024ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைக் காண்பித்தது. சவால்மிக்க ஏற்றுமதிச் சூழலொன்றுக்கு மத்தியில் இச்செயலாற்றம், நாட்டின் பொருளாதார மீட்சியையும் கட்டியெழுப்பப்பட்ட தாக்குப்பிடிக்கும் தன்மையையும் பிரதிபலித்தது.** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023ஆம் ஆண்டின் 7.2 சதவீத அதிகரிப்பொன்றுடன், ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 12.8 பில்லியனைப் பதிவுசெய்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, ஏற்றுமதி வருவாய்கள் 2023இன் 14.2 சதவீதத்திலிருந்து 2024இல் 12.9 சதவீதத்திற்கு குறைவடைந்தபோதிலும், 2015-2019 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 12.4 சதவீதம் கொண்ட உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியின் சராசரியிலிருந்து அதிகரித்திருந்தது.

**ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சியைத் தூண்டுவதில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பு முக்கிய பங்காற்றியது.** 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் 97.2 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளும் வரலாற்றில் முதற்தடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சிக்காணப்பட்டன. இவ்வதிகரிப்பானது உயர்ந்தளவிலான நீர்க்கல எரிபொருள் மற்றும் வான்வழி எரிபொருள் அளவுகளின் மூலம் தூண்டப்பட்டு, அதன் குறைந்தளவிலான பெறுமதி சேர்த்தல் காணப்பட்ட போதிலும், ஏற்றுமதிகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த அதிகரிப்பிற்கான முக்கிய பங்களிப்பாளாராக தோற்றம்பெற்றது. பெற்றோலிய ஏற்றுமதிகளில் ஏற்பட்ட இவ்வுயர்வானது செங்கடல் கடல் பயணவழியில் ஏற்பட்ட இடையூறுகளின் மூலம் பகுதியளவில் தூண்டப்பட்டிருந்தபோதிலும், நீர்க்கல எரிபொருள் பணிகள் மற்றும் வலுசக்தியுடன் தொடர்புடைய பொருட்களுக்கான உலகளாவிய கேள்வி வலுவாக இருப்பின் அத்துடன் போதியளவான பெறுமதி சேர்த்தலை உறுதிசெய்வதற்காக நாட்டினுடைய சுத்திகரிப்பு இயலாற்றல் வலுப்படுத்தப்படுமாயின், மேலும் இத்துறையில் மூலதனமயப்படுத்துவதற்கான நாட்டின் வாய்ப்பு வளத்தை இது எடுத்துக்காட்டுகின்றது. மேலும், புடவைகள் மற்றும் ஆடைகள் (முக்கியமாக ஆடைகள்) ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க மீட்சி அவதானிக்கப்பட்டது. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் பெறுமதி சேர்க்கப்பட்ட தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகளினால் தூண்டப்பட்டு 2024ஆம் ஆண்டில் மேலும் முன்னேற்றமடைந்தது. அதேவேளை, கையுறைகளின் ஏற்றுமதிகளினால் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளும் முன்னேற்றமடைந்தன. எனினும், 2024ஆம் ஆண்டில், இரத்தினக்கற்கள், வைரங்கள், மற்றும் ஆபரணங்கள் அதேபோன்று இயந்திரங்கள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டின.

**வேளாண்மை ஏற்றுமதிகளும் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் வருவாய்களில் அதிகரிப்பொன்றை காண்பித்தன.** வேளாண்மை ஏற்றுமதிகளுக்கிடையில், தேயிலை, தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள், மற்றும் வாசனைத்திரவியங்கள் போன்றவற்றின் அதிகரிப்புகள் குறிப்பிடத்தக்கவையாகக் காணப்பட்டன. உயர்ந்தளவான ஏற்றுமதி அளவுகள் மற்றும்

வரைபடம் 1.17: ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு




*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

விலைகள் ஆகிய இரண்டினாலும் தூண்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பு இலங்கை தேயிலைக்கான நிலையான உலகளாவிய கேள்வியை எடுத்துக்காட்டுகின்றது. ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், 2024ஆம் ஆண்டின் தேயிலை ஏற்றுமதி அளவு, 2015 தொடக்கம் 2019 வரை பதிவுசெய்யப்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முன்னைய ஆண்டுச் சராசரியுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு குறைவாகவே காணப்பட்டது. 2024ஆம் ஆண்டில் தேங்காய்த் துருவல் மற்றும் தேங்காய் நார் ஏற்றுமதிகளால் தூண்டப்பட்ட தேங்காய் உள்ளீட்டு மற்றும் உள்ளீடற்ற ஏற்றுமதிகள் இரண்டிலுமிருந்தான வருவாய்களும் அதிகரித்திருந்த அதேவேளை கைத்தொழில் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகளும் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கப்பட்டன. நடுத்தரகாலத்தில், தெங்கு உற்பத்திகள் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக அடைவதற்கு இலக்கிடப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்புடன் இணைந்து தெங்கு உற்பத்தியின் விரிவாக்கம் உதவுமென தெங்கு உற்பத்தியின் மூலப்பொருள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் இரண்டின் கீழான தெங்கின் வலுவான செயலாற்றம் எடுத்துரைக்கின்றது. அதேவேளை, கடலுணவுகள் மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகள் குறைந்தளவிலான செயலாற்றத்தைக் காண்பித்தன. கனிப்பொருள் ஏற்றுமதிகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடையும் போக்கை எடுத்துக்காட்டிய அதேவேளை சில கனிப்பொருள்கள் கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளாக ஏற்றுமதிசெய்யப்பட்டன.

## இறக்குமதிச் செயலாற்றம்


**இலங்கை, 2024ஆம் ஆண்டில் வணிகப்பொருள் இறக்குமதிச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காண்பித்து, பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீட்சியினதும் பெரும்பாலான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையினதும் தாக்கத்தைப் பிரதிபலித்தது.** 2024ஆம் ஆண்டில் மொத்த வணிகப்பொருள் இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 18.8 பில்லியனிற்கு அதிகரித்து, 12.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், 2015 தொடக்கம் 2019 வரையான உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முன்னைய காலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 20.3 பில்லியன் கொண்ட ஆண்டுச் சராசரியுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில், இறக்குமதிச் செலவினம் கணிசமானளவு குறைந்திருந்தது. பொருளாதாரம் மீண்டும் உத்வேகத்தையடைந்திருந்ததால், 2023 யூனிலிருந்தான இறக்குமதிக்கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்த்தலின் மூலம் முக்கியமாக தூண்டப்பட்டு இறக்குமதிகளுக்கான, குறிப்பாக

1

நுகர்வோர் மற்றும் முதலீட்டு பொருட்களுக்கான, கேள்வி அதிகரித்தது. மூன்று கட்டங்களாகப் படிப்படியாக அகற்றப்பட்ட மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் இறுதியாக தளர்த்தப்பட்ட வகையாக காணப்பட்டது. தளர்த்தல்களின் கட்டம் 1, 2 மற்றும் 3 ஆகியவை முறையே, பயணிகள் பேருந்து மற்றும் விசேட நோக்க வாகனங்கள், சரக்கு போக்குவரத்து வாகனங்கள், மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான வாகனங்கள் போன்றவற்றுடன் தொடர்புபட்டவையாக காணப்பட்டன. 2024 திசெம்பரில் கட்டம் 1 நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளை 2025 சனவரி இறுதியில் கட்டம் 2 மற்றும் கட்டம் 3 நடைமுறைப்படுத்தப்பட்டன. மொ.உ.உ.ற்பத்தியின் சதவீதமாக, இறக்குமதிச் செலவினம் 2023இன் 20.1 சதவீதத்திலிருந்து 2024ஆம் ஆண்டில் 19.0 சதவீதத்திற்கு குறைவடைந்து 2015 தொடக்கம் 2019 வரையான உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முன்னரான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 22.4 சதவீதம் கொண்ட சராசரிக்கு கீழே காணப்பட்டது.

**2024ஆம் ஆண்டில் இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு அனைத்து முக்கிய வகைகளிடையிலான உயர்ந்தளவான கேள்வி காரணமாக அமையலாம்.** உள்நாட்டு நிரம்பல் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு, ஆண்டின் இறுதியில் பெரும்பாலும் அதிகரிக்கப்பட்ட எண்ணெய் மற்றும் கொழுப்பு, காய்கறிகள் அத்துடன் அரிசி போன்றவற்றின் இறக்குமதிகளின் காரணமாக, 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்திருந்தன. இதுபோன்று, 2023ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலின் மூலம் துணையளிக்கப்பட்டு, குறிப்பாக வீட்டு உபயோகப் பொருட்கள், ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், மற்றும் தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் போன்ற உணவல்லா நுகர்வோர் பொருட்கள் மீதான செலவினம் அதிகரித்தது. புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் உயர்ந்தளவான இறக்குமதிகளின் மூலம் தூண்டப்பட்டு, 2024ஆம் ஆண்டில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினமும் அதிகரித்து, ஆடை ஏற்றுமதிகள் மற்றும் இரசாயன உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், பிளாத்திக்கு மற்றும் தொடர்புடைய பொருட்கள், அத்துடன் இறப்பர் மற்றும் இறப்பர் அடிப்படையிலான உற்பத்திகள் போன்ற தயாரிப்பதற்கு தேவைப்படும் ஏனைய உள்ளீடுகள் என்பனவற்றின் வளர்ச்சியினை ஆதரிக்கின்றது. எனினும், மசகெண்ணெய் மற்றும் நிலக்கரி போன்றவற்றின் இறக்குமதி விலைகள் மற்றும் அளவுகளில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக இறக்குமதிக் கூடையில் காணப்படும் பாரிய இறக்குமதி பொருளான எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம், வீழ்ச்சியடைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை

வரைபடம் 1.18: **இறக்குமதிகளின் உள்ளமைப்பு**




(அ) பருப்பு வகைகள், வெங்காயம், உருளைக் கிழங்கு, அவரை வகை மற்றும் ஏனைய காய்கறிகளை உள்ளடக்குகின்றது.

*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

முழுமையாக நம்பியுள்ள நீர்க்கல எரிபொருளின் ஏற்றுமதிகள் உயர்வடைந்தபோதிலும், வலுசக்தி கலவையில் நீர்மின்வலுவின் உயர்ந்தளவிலான பங்களிப்பு காரணமாக மின் உற்பத்திக்கான குறைவடைந்த எரிபொருள் கேள்வி, எரிபொருள் இறக்குமதிகள் மீதான குறைந்தளவான செலவினத்திற்கு வழிவகுத்தது. அதேவேளை, இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, 2024ஆம் ஆண்டில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதன் மூன்று முக்கிய துணைப் பிரிவுகளான பொறி மற்றும் சாதனங்கள் (முக்கியமாக பொறியியல் உபகரணங்கள்), கட்டடவாக்கப் பொருட்கள், ((முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு மற்றும் மட்பாண்ட உற்பத்திகள்) மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் (வர்த்தக நோக்கத்திற்கான வாகனங்கள்), அத்துடன் அவற்றின் பெரும்பாலான உப பிரிவுகளின் அதிகரிப்புடன் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எடுத்துக்காட்டின.

## வர்த்தக மாற்று விகிதம்

**ஏற்றுமதியின் விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்கிடையிலான விகிதத்தால் அளவிடப்படும் வர்த்தக மாற்று விகிதம், 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் மேம்பட்டன.** கனிப்பொருள் ஏற்றுமதிகள் தவிர்ந்த அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளுக்குமான அளவுச் சுட்டெண்கள் மேம்பட்ட அதேவேளை, அனைத்து முக்கிய வகைகளின் இறக்குமதிகளுக்கான அளவுச் சுட்டெண்களும் மேம்படுத்தலைக் காண்பித்து, அதிகரித்த அளவுகள்

அட்டவணை 1.11 : வர்த்தக மாற்று விகிதச் சுருக்கம் (2010=100) (அ) (ஆ)

| வகை | ஆண்டிற்காண்டு மாற்றம் 2023/2024 (%) | | |
|---|---|---|---|
| | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகுப் பெறுமதிச் சுட்டெண் |
| மொத்த ஏற்றுமதிகள் | 7.2 | 11.3 | -3.7 |
| வேளாண்மை ஏற்றுமதிகள் | 8.1 | 3.2 | 4.7 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | 7.2 | 12.8 | -5.0 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | -36.2 | -35.2 | -1.6 |
| மொத்த இறக்குமதிகள் | 12.1 | 17.9 | -4.9 |
| நுகர்வுப் பொருட்கள் | 13.9 | 12.1 | 1.5 |
| இடைநிலைப் பொருட்கள் | 8.2 | 17.5 | -7.9 |
| முதலீட்டுப் பொருட்கள் | 25.6 | 21.8 | 3.1 |
| வர்த்தக மாற்று விகிதம் | | | -1.3 |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐ.அ.டொலர் நியதிகளில்


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2024ஆம் ஆண்டில் உயர்ந்தளவிலான ஏற்றுமதி வருவாய்களுக்கும் இறக்குமதிச் செலவினத்திற்கும் பங்களித்தன என்பதைக் குறித்துக்காட்டுகின்றது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பிரதானமாக ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட குறைப்புக்கு பங்களிப்புச் செய்தவேளையில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிக்கான குறைந்த விலைகள் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. இதற்கமைய, ஏற்றுமதி விலை மற்றும் இறக்குமதி விலைச் சுட்டெண்கள் முறையே, 3.7 சதவீதத்தினாலும் 4.9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து வர்த்தக மாற்று விகிதம் 2023ஆம் ஆண்டின் 85.6 சுட்டெண் புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் 1.3 சதவீதத்தினால் 86.7 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. இருப்பினும், 2023இனை விட 2024இல் வர்த்தக மாற்று விகிதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டபோதிலும், இது 2021இலிருந்து 100 சுட்டெண் புள்ளிகளுக்கு கீழே காணப்பட்டு, அடிப்படை ஆண்டு 2010 உடன் ஒப்பிடுகையில் தேய்வு, ஏற்றுமதிகளின் அலகொன்றிலிருந்து கொள்வனவு செய்யக்கூடிய இறக்குமதிகளின் அளவு காலப்போக்கில் குறைந்துள்ளது என்பதைக் குறிக்கின்றது.

## வர்த்தகத்தின் போக்கு

**முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான மேம்பட்ட இருபுடை வர்த்தகம் உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளினால் தூண்டப்பட்டு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் இலங்கையின் வணிகப்பொருள் வர்த்தகத் துறை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண்பித்தது.**

வரைபடம் 1.19: இருபுடை வர்த்தக நிலுவைகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1.12 : இலங்கையின் முன்னுரிமை மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான ஏற்றுமதிகள்**

| வர்த்தக உடன்படிக்கை | 2023 | 2024 (அ) | | |
|---|---|---|---|---|
| | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | வளர்ச்சி (%) | பங்கு (%) |
| முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜி.எஸ்.பி) | 3,803.5 | 3,985.7 | 4.8 | 80.2 |
| இதில் ஐரோப்பிய ஒன்றியம் (முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை+ உள்ளடங்கலாக) | 2,094.5 | 2,108.1 | 0.6 | 42.4 |
| ஐக்கிய அமெரிக்கா (ஆ) | 663.4 | 741.6 | 11.8 | 14.9 |
| ஐக்கிய இராச்சியம் | 562.4 | 601.9 | 7.0 | 12.1 |
| ருசிய கூட்டாட்சி (இ) | 127.9 | 152.7 | 19.4 | 3.1 |
| அவுஸ்திரேலியா | 93.3 | 108.8 | 16.6 | 2.2 |
| கனடா | 72.9 | 89.9 | 23.3 | 1.8 |
| யப்பான் | 68.3 | 71.1 | 4.1 | 1.4 |
| துருக்கி | 62.6 | 54.5 | -13.0 | 1.1 |
| ஏனைய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை | 58.2 | 57.2 | -1.7 | 1.2 |
| இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 536.4 | 490.3 | -8.6 | 9.9 |
| ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (ஈ) | 213.9 | 209.9 | -1.9 | 4.2 |
| வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறைமை | 79.1 | 70.1 | -11.4 | 1.4 |
| பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 46.1 | 46.2 | 0.3 | 0.9 |
| தெற்காசியா சுதந்திர வர்த்தக பிரதேசம் | 93.2 | 169.0 | 81.3 | 3.4 |
| சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை | 1.1 | 1.3 | 22.0 | 0.0 |
| சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள் | 4,773.4 | 4,972.5 | 4.2 | 100.0 |
| மொத்த ஏற்றுமதிகளின் பங்காக | 40.1 | 38.9 | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐக்கிய அமெரிக்க-முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை 2020.12.31 அன்று காலாவதியானதினால் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைகளின் கீழ் தகுதிபெற்ற ஏற்றுமதிகளை காண்பிக்கின்றது.
(இ) ருசியா, பெலாருஸ் மற்றும் கசகஸ்தான் உள்ளடங்கலாக
(ஈ) முன்னர் பாங்கொக் உடன்படிக்கை (1975) என அழைக்கப்பட்டது

*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை வர்த்தகத் திணைக்களம்

வர்த்தகக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு பொருளாதார நிலைமைகள் உறுதிப்படுத்தப்பட்டதற்கு மத்தியில், மொத்த வர்த்தகம் அதிகரிக்கப்பட்டு, ஏற்றுமதிகளிலும் இறக்குமதிகளிலும் மீட்சியொன்றினைப் பிரதிபலித்தது. 2024ஆம் ஆண்டில், பாரிய வர்த்தகப் பங்காளராக இந்தியாவும் அதனைப் பின்தொடர்ந்து சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளும் காணப்பட்டன. இவ் மூன்று பாரிய நாடுகளும் 2024ஆம் ஆண்டின் இலங்கையின் மொத்த வர்த்தகத்தின் ஏறத்தாழ 40 சதவீதத்திற்கு கூட்டாக வகைகூறின. பெற்றோலிய உற்பத்திகள், துணிகள் மற்றும் அரிசி உள்ளடங்கலாக, இந்தியாவிலிருந்தான வலுவான இறக்குமதிகளால் ஆதரவளிக்கப்பட்டு, 2024ஆம் ஆண்டில் இந்தியாவுடனான மொத்த வர்த்தகம் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 4.8 பில்லியனாகக் காணப்பட்டது. சீனாவுடனான மொத்த வர்த்தகமும் 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 4.6 பில்லியனை அடைந்தது. எனினும், இலங்கை சீனாவுடனான அதன் உயர்ந்தளவிலான வர்த்தகப் பற்றாக்குறையைப் பதிவுசெய்து 2023ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 2.8 பில்லியனிலிருந்து 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 4.1 பில்லியனிற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. விரிவடைந்த பற்றாக்குறைக்கு முதன்மையாக, பொறியியல் உபகரணங்கள் மற்றும் கட்டடவாக்க பொருட்களின் (இரும்பு மற்றும் உருக்கு) இறக்குமதிகள் அதிகரிக்கப்பட்டமை காரணமாக அமைந்த அதேவேளை சீனாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகள் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்பட்டன. 2024ஆம் ஆண்டில், ஐ.அ.டொலர் 3.3 பில்லியன் பெறுமதியான மொத்த வர்த்தகத்துடன், இலங்கைக்கான முக்கிய வர்த்தகப் பங்காளாராக ஐக்கிய அமெரிக்கா காணப்பட்டது. வலுவான ஆடை ஏற்றுமதிகளின் காரணமாக இலங்கையானது ஐக்கிய அமெரிக்காவுடன் வர்த்தக மிகையை அனுபவித்தது.

**இலங்கை தாய்லாந்துடனான அதன் நான்காவது இருபுடைய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட அதேவேளை, 2024ஆம் ஆண்டில் ஏனைய பல்வேறு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.**
இலங்கைக்கும் தாய்லாந்திற்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2024 பெப்புருவரியில் கைச்சாதிடப்பட்டது. இது பொருட்கள் மற்றும் பணிகளின் வர்த்தகம், அத்துடன் முதலீடுகள், சுங்க நடைமுறைகள், புலமைச் சொத்துரிமைகள் போன்வற்றினை உள்ளடக்கிய அனைத்தையுமுள்ளடக்கிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையாகும். இலங்கைக்கும் தாய்லாந்திற்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2025 சனவரி 01 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைவு உடன்படிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன், முறையே 2024 சனவரியும் 2024 யூலையிலும் பேச்சுவார்த்தைகளின் 13ஆவது மற்றும் 14ஆவது சுற்றுக்கள் நிறைவுசெய்யப்பட்டன. அதேவேளை, சீனாவிற்கும் இலங்கைக்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் பேச்சுவார்த்தைகளில் மெதுவான முன்னேற்றம் காணப்பட்டபோதிலும், வங்காளதேசம், மற்றும் இந்தோனேஷியா முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் என்பனவற்றுடன் தொடர்புடைய பேச்சுவார்த்தைகள் சிறப்பாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. மேலும், தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் கீழ் இந்தியாவிற்கான


ஏற்றுமதிகள் அதிகரித்திருந்தபோதிலும், இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. பாகிஸ்தானிற்கும் இலங்கைக்குமிடையிலான உடன்படிக்கையின் கீழ் வர்த்தகம் மட்டுப்படுத்தப்பட்டு காணப்பட்ட அதேவேளை வர்த்தக முன்னுரிமையின் உலகளாவிய முறைமை மற்றும் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை போன்ற ஏனைய பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் செயலாற்றம் 2024ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டிணைவிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பின் பட்டயம் 2024 மே மாதத்தில் நடைமுறைக்கு வந்தது. பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டிணைவிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பின் பட்டயம் அதன் அடைவையும் செல்வாக்கு செலுத்தலையும் விரிவுபடுத்துவதற்கு உதவுகின்ற அதேவேளை உறுப்பு நாடுகளுக்கிடையில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டிணைவிற்கு ஊக்குவிக்கின்றது. மேலும், இலங்கை அதன் முக்கிய வர்த்தகப் பங்காளர்களான ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்றவற்றால் வழங்கப்படும் பொதுவான முன்னுரிமை முறைமை திட்டங்களிலிருந்து தொடர்ந்தும் பயனடைந்து வருகின்றது. இதன் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு, ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான முன்னுரிமை முறைமை திட்டம் 2024 தொடக்கம் 2027ஆம் ஆண்டு காலப்பகுதி வரை ஐரோப்பிய ஆணைக்குழுவின் மூலம் 2023ஆம் ஆண்டு செத்தெம்பரில் நீடிக்கப்பட்டது. இதன்விளைவாக, இலங்கை 2024ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான முன்னுரிமை முறைமைத் திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் நன்மையடைந்து மெதுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், 2024ஆம் ஆண்டில், புதிய பொதுவான முன்னுரிமை முறைமைத் திட்டத்திற்கான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, 2023 யூனில் ஐரோப்பிய ஒன்றியம் காடழிப்பு இல்லாத உற்பத்திகள் மீதான ஒழுங்குவிதியை ஏற்றுக்கொண்டது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான முன்னுரிமை முறைமை திட்ட சலுகைகளின் நன்மைப்பெறுநராக, ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான இலங்கையின் இறப்பர் ஏற்றுமதிகள் பாரிய/நடுத்தர தொழிற்பாட்டாளர்களுக்கு 2025 திசெம்பர் 30 ஆம் திகதிகளிலும் நுண்பாக/சிறிய தொழிற்பாட்டாளர்களுக்கு 2026 யூன் 30ஆம் திகதிகளிலும் இவ்வொழுங்குவிதி இணங்குதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, 2023ஆம் ஆண்டு யூனில் நடைமுறைக்கு வந்த ‘அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தக திட்டம்’ எனப் பெயரிடப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் புதிய பொதுவான முன்னுரிமை முறைமை திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட முன்னுரிமைகளின் கீழ் இலங்கை தொடர்ந்தும் நன்மையடைந்தது. 2020 திசெம்பரில் முடிவுறுத்தப்பட்ட ஐக்கிய அமெரிக்காவின் பொதுவான முன்னுரிமை முறைமைத் திட்டமானது புதிய ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் முக்கிய கொள்கை மாற்றத்தின் காரணத்தினாலன்றி, பொதுவான நடைமுறையின்படி இது பின்னோக்கிச் செயல்படுத்தப்படும் அடிப்படையில் மீளமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும் அமெரிக்க அரசாங்கத்தினால் இன்னும் மீளமைக்கப்படவில்லை. மொத்த ஏற்றுமதிகளின் பகிர்வொன்றாக முன்னுரிமை வர்த்தகத்தின் கீழ் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தபோதிலும், 2023ஆம் ஆண்டுடன் 2024ஆம் ஆண்டில் முன்னுரிமை மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் மொத்த வர்த்தகம் வளர்ச்சியடைந்து, 2024ஆம் ஆண்டில் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளுக்கு வெளியே ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பை குறிக்கின்றது.

## பணிகள் கணக்கு

**2024ஆம் ஆண்டில், பணிகள் கணக்கு மிகை குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றை பதிவுசெய்தது. பணிகள் கணக்கு மிகையானது 2023இன் ஐ.அ.டொலர் 3.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 3.4 பில்லியனிற்கு அதிகரித்தது.** சுற்றுலாத்துறை, கடல் போக்குவரத்து, கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் துறைகள் உள்ளடங்கலாக, முக்கிய பணிகள் துறைகளுக்கான உறுதியான உட்பாய்ச்சல்களின் மூலம் இவ்வளர்ச்சி தூண்டப்பட்டிருந்தது. 2023இல் பதிவுசெய்யப்பட்ட 1.49 மில்லியன் கொண்ட பயணிகளுடன் ஒப்பிடுகையில், 2024இல் 2.05 மில்லியன் கொண்ட சுற்றுலாப் பயணிகளின் வருகைகளைப் பதிவுசெய்ததன் மூலம் சுற்றுலாத்துறை தொடர்ந்தும் அதன் உத்வேகத்தைக் காண்பித்தது. இதற்கமைய, 2023இன் ஐ.அ.டொலர் 2.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையிடமிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 3.2 பில்லியனாக மதிப்பிடப்பட்டு, 53.2 சதவீதம்

1

வரைபடம் 1.20: பணிகள் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள்




குறிப்பு: செறிவான நிறங்கொண்ட கட்டங்கள் 2024இற்கான பெறுமதிகளை பிரதிபலிப்பதுடன், செறிவு குறைந்த நிறங்கொண்ட கட்டங்கள் 2023இன் பெறுமதிகளை பிரதிபலிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளுடன், வருவாய்களில் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனை ஈட்டியதன் மூலம், 2018ஆம் ஆண்டில், சுற்றுலாப் பயணிகளின் வருகை உச்சத்தை அடைந்தது. அதேவேளை, சுற்றுலாத் தவிர்ந்த பணிகள், நடைமுறைக் கணக்கு மிகைக்கும் குறிப்பிடத்தக்களவிற்கு பங்களித்தன. பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையிலிருந்தான தரவுகளிற்கமைய, 2024ஆம் ஆண்டில் பணிகள் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் நீங்கலாக, 2023இன் ஐ.அ.டொலர் 3.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர் 3.7 பில்லியனாகக் காணப்பட்டன. போக்குவரத்து, கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான பணிகள் போன்றன பணிகளுக்கான முக்கிய பங்களிப்பாளர்களாகக் காணப்பட்டன. 2024ஆம் ஆண்டில், தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள், தொழில்நுட்ப மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய பணிகளும் உயர்ந்தளவிலான பணிகள் உட்பாய்ச்சல்களுக்கு பங்களிப்புச்செய்திருந்தன. மேலும், 2024இல் பணிகள் துறையிலிருந்தான மொத்த வெளிப்பாய்ச்சல்கள் 2023இன் ஐ.அ.டொலர் 2.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனாகக் காணப்பட்டன. வெளிநாட்டுப் பயணம், போக்குவரத்துப் பணிகள், ஏனைய வியாபாரப் பணிகள் மற்றும் அரசாங்கத்தின் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையுடன் தொடர்புடைய சட்ட மற்றும் துறைசார் கட்டணங்களாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் போன்றவற்றுடன் தொடர்புடைய வெளிப்பாய்ச்சல்கள் என்பன பணிகள் துறையிலிருந்து பதிவுசெய்யப்பட்ட வெளிப்பாய்ச்சல்களுக்கான முக்கிய பங்களிப்பாளர்களாகக் காணப்பட்டன.

## முதலாந்தர வருமானக் கணக்கு

**முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2024ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பரந்தளவில் மாற்றமின்றி காணப்பட்டது.** முதலாந்தர வருமானத்தின் வெளிப்பாய்ச்சல்களின் குறிப்பிடத்தக்க பகுதியானது படுகடன் ஸ்தம்பிதநிலையின் விளைவாக ஒன்றுசேர்ந்த நிலுவைத் தொகை அதேபோன்று பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் இந்திய றிசேர்வ் வங்கியுடனான விசேட பரஸ்பர பரிமாற்றல் ஒருங்கேற்பாட்டுடன் தொடர்புடைய மத்திய வங்கியின் வெளிநின்ற பொறுப்புக்கள் தொடர்பில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வட்டி கொடுப்பனவுகள்

1

## சிறப்புக் குறிப்பு 01
## வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களை மேம்படுத்துதல்: பணிகள் வர்த்தகம் மீதான முக்கிய நுண்நோக்குகள்


### அறிமுகம்

நாட்டின் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் முக்கிய கூறாகவிருக்கும் இலங்கையின் பணிகள் வர்த்தகம், சமீபத்திய ஆண்டுகளில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் விரிவாக்கத்தை விடவும் கணிசமானளவு வளர்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களுக்கான முக்கிய பங்களிப்பாளராக, சுற்றுலாத்துறை, கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல், மற்றும் துறைமுக மற்றும் விமானநிலையப் பணிகள் போன்ற துறைகளினால் பணிகள் ஏற்றுமதிகளின் வளர்ச்சி தூண்டப்பட்டுள்ளது. எனினும், நாடுகளுக்கு அப்பால் பௌதீக ரீதியிலான பொருட்கள் வர்த்தகம் செய்யப்படும் வணிகப்பொருள் வர்த்தகத்தைப் போலன்றி, பணிகள் வர்த்தகம் பற்றிய எல்லைகளுக்கிடையிலான தரவுகளைப் பெற்றுக்கொள்ளுதலானது பொதுவாக மிகவும் சவால்மிக்கதாக கருதப்படுகின்றது. வணிகப்பொருள் வர்த்தகப் புள்ளிவிபரங்கள் முதன்மையாக இலங்கை சுங்கத்தினூடாக அறிக்கையிடப்பட்டுள்ள அதேவேளை, பணிகள் வர்த்தகப் புள்ளிவிபரங்களைத் தொகுப்பதற்கு வங்கித்தொழில் முறைமையின் வாயிலாக விரிவான கொடுக்கல்வாங்கல் மட்ட அறிக்கையிடல் தேவைப்படுகின்றது. இது, தரவுகள் சேகரிப்பு செயன்முறைகளுக்கு சிக்கல்தன்மையை அதிகரிக்கின்றது.

2008ஆம் ஆண்டிற்கான தேசிய கணக்குகள் முறைமையில் (SNA 2008)[1] வரையறுக்கப்பட்டுள்ளவாறு, 'மாறும் தன்மையுள்ள பணிகள்' மற்றும் 'எல்லைசார்ந்த பணிகள்' என இரு வடிவங்களில் பரந்தளவில் வகைப்படுத்தப்பட்ட பல்வேறு வகையிலான அருவமான பொருட்கள் மற்றும் நடவடிக்கைகளை பணிகள் துறையிலுள்ள பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்குகின்றன. மாறும் தன்மையுள்ள பணிகள் கேள்விக்கேற்ப உருவாக்கப்படுகின்றதுடன் வாடிக்கையாளரின் நிலைமைகளை நேரடியாக மாற்றக்கூடியன. இப்பணிகள், அவற்றின் உற்பத்தியிலிருந்து பிரிக்க முடியாதவையாகும். உதாரணமாக, இலங்கை மென்பொருள் அபிவிருத்தி நிறுவனமொன்றினால் மென்பொருள் உற்பத்தியை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பணியை இறுதி உற்பத்தியிலிருந்து பிரிக்க முடியாது மற்றும் தனியாக விற்பனை செய்யமுடியாது. மாறாக, எல்லைசார்ந்த பணிகள், வணிகப்பொருள் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளை வசதிப்படுத்துவதற்காக இலங்கை கொள்கலன் முனைக்கொடிகளின் மூலம் வழங்கப்படும் போக்குவரத்து பணிகள் போன்ற பொருட்களை விநியோகிப்பதில் இடையீட்டாளர்களால் சேர்க்கப்படும் பெறுமதியை உள்ளடக்குகின்றன. உலகளாவிய ரீதியில், பணிகள் துறையிலுள்ள பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் மீதான தரவு

1 தேசிய கணக்குகள் முறைமை என்பது மொ.உ.உற்பத்தி போன்ற ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை, பொருளாதார கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கடுமையான கணக்கீட்டு நியதிகளுக்கு இணங்க அளவிடுவதற்கான சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டமைப்பாகும்.

வரைபடம் சி.கு 1.1: வணிகப்பொருள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகள் மீதான புள்ளிவிபரங்கள்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மத்திய வங்கி

சேகரிப்பிற்கான பெரும்பாலான அனைத்தையுமுள்ளடக்கிய முறை, வங்கித்தொழில் முறைமையின் வாயிலாக வதிவோர் மற்றும் வதிவற்றோருக்கிடையிலான கொடுப்பனவு பாய்ச்சல்களினூடாக இடம்பெறுகின்றது. எனினும், அத்தகைய மேம்படுத்தப்பட்ட மற்றும் அதிநவீன முறைமை இல்லாதபோது, சென்மதி நிலுவையிலுள்ள பணிகள் துறை வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு, இனங்காணப்பட்ட நிறுவனங்களின் நேரடி அளவீட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இருப்பினும், பணிகள் துறை சார்ந்த புள்ளிவிபரங்களை தொகுப்பதில், நேரடியான அளவீட்டு முறையியலின் செயற்றிறன்மிக்க தன்மையானது அத்தகைய பணி வழங்குநர்களை இனங்காணுதல், குறைந்தளவான அளவீட்டு பதிலிறுப்பு வீதங்கள், சென்மதி நிலுவையை தொகுப்பதில் காணப்பட்ட மனித வளக் கட்டுப்பாடுகள், மற்றும் குறிப்பாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் அதனைத் தொடர்ந்துவந்த பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில், நிறுவனங்களுடனான தொடர்புகளின் கடுமையான மட்டுப்படுத்தல்கள் உள்ளடங்கலாக பல்வேறு சவால்கள் காரணமாக விவாதத்திற்கு உட்பட்டது. வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களின் துல்லியத்தையும் நுணுக்கத்தையும் மேம்படுத்துவதற்கான முயற்சியின் போது, வங்கித்தொழில் முறைமையில் அறிக்கையிடப்பட்ட உண்மை வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டு எல்லைகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களை சேகரிப்பதற்கும் வகைப்படுத்துவதற்கும் 2019ஆம் ஆண்டில் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை இலங்கை மத்திய வங்கி உருவாக்கத் தொடங்கியது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட தடைகளுக்கு மத்தியில், இலங்கை மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்குமிடையில் தீவிரமான இணையவழி ஒத்துழைப்பினூடாக பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமை செயற்றிட்டம் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. நான்கு ஆண்டுகால அபிவிருத்தியின் பின்னர், 2023 சனவரியில், பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையினூடாக தரவுகளின் சேகரிப்பு தொடங்கப்பட்டது. இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, 2024 சனவரியில் மாதாந்த அடிப்படையில் பணிகள் துறை புள்ளிவிபரங்களைப் பரப்புதலை இலங்கை மத்திய வங்கி தொடங்கியது[2].


### பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் பணிகள் தொடர்பான முக்கிய எடுத்துக்காட்டுகள்

பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையின் நடைமுறைப்படுத்தலானது, முன்னர் காலாண்டு அடிப்படையில் மாத்திரம் கிடைக்கப்பெற்ற பணிகள் வர்த்தகப் புள்ளிவிபரங்களை மாதாந்தம், காலாண்டு சென்மதி நிலுவையின் வெளியீட்டுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கி அறிக்கையிடுவதற்கு இயலுமாயிருந்தது. இதற்கமைய, புதிய வகைகளின் கீழ் அறிக்கையிடப்பட்ட தரவுகளுடன் மிகவும் விரிவான வகைப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்ட அதேவேளை தற்போதுள்ள வகைகள் தொடர்பான தரவுகள் துல்லியமாக மேம்படுத்தப்பட்டு, சிறந்த துறைசார்ந்த பகுப்பாய்வினை இயலச்செய்தது.

பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடலை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரும் பின்னரும் சென்மதி நிலுவை புள்ளிவிபரங்கள் தொடர்பான பணிகள் துறை தரவுகளின்

2 மாதாந்த பணிகள் துறைப் புள்ளிவிபரங்கள் https://www.cbsl.gov.lk/en/statistics/statistical-tables/external-sector → பணிகள் துறை என்ற இணையத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றது

வரைபடம் சி.கு 1.2: சுற்றுலாத்துறை உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் நீங்கலாக பணிகள் கணக்கு மீதான புள்ளிவிபரங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

சேகரிப்பு முறைமையிலுள்ள மாற்றங்களின் தாக்கம், கீழே வரைபடம் சி.கு. 1.2இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. 2023ஆம் மற்றும் 2024ஆம் ஆண்டுகளில், சுற்றுலாத்துறை உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் நீங்கலாக, அனைத்து பணிகள் துறை தரவுகளும் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆகவே, 2022ஆம் ஆண்டிற்கு பின்னரான பணிகள் துறை தரவுகள், மாதிரி அளவீட்டு தரவுகளின் அடிப்படையிலான புள்ளிவிபர அனுமானத்தில் தங்கியிருந்த மாதிரி அடிப்படையிலான அணுகுமுறையிலிருந்து பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையின் கீழ் தொகைமதிப்பு அடிப்படையிலான முறைக்கு மாறியுள்ளன. எனினும், நேரடியான அளவீடுகள் நிறுத்தப்பட்டமையினால், 2023ஆம் ஆண்டிலிருந்து முறைகளுக்கிடையிலான உடன்நிகழ்வு இடம்பெறவில்லை.


ஒப்பீட்டு நோக்கங்களுக்காக, சுற்றுலாத் துறை வெளிப்பாய்ச்சல்கள் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை ஓரளவு அடிப்படையாகக் கொண்டும் அத்துடன் சுற்றுலாத்துறை உட்பாய்ச்சல்கள் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடொன்றை அடிப்படையாகக் கொண்டும் காணப்பட்டமையினால், சுற்றுலாத்துறை உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும் விலக்கப்பட்டுள்ளன. கீழே வரைபடம் சி.கு. 1.2இல் எடுத்துரைக்கப்பட்டவாறு, மொத்த உட்பாய்ச்சல்கள் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரும் பின்னருமான காலப்பகுதிக்கிடையில், குறிப்பிடத்தக்க விலகலை காண்பிக்கின்றன. 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளின் மொத்த உட்பாய்ச்சல்கள் 2022ஆம் ஆண்டில் காணப்பட்டதை விடவும் கணிசமானளவு உயர்வாகக் காணப்பட்டன. இந்த அதிகரிப்பானது புள்ளிவிபரவியல் மேம்பாடுகளால் மாத்திரமின்றி தொடர்ச்சியான பொருளாதார மீட்பின் மூலமும் தூண்டப்பட்டிருந்தது. எனினும், 2022ஆம் ஆண்டை விடவும் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை நடைமுறைப்படுத்தலின் பின்னர் உயர்ந்தளவிலான மொத்த உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களுக்கு மத்தியில், 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கான பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையினால் அறிக்கையிடப்பட்ட தேறிய உட்பாய்ச்சல்கள் 2022ஆம் ஆண்டின் தேறிய உட்பாய்ச்சல் மதிப்பீடுகளுக்கமைய பரந்தளவில் காணப்படுகின்றமையினால், மொத்த உட்பாய்ச்சல்களில் அறிக்கையிடப்பட்ட இவ்விலகல், நடைமுறைக் கணக்கு மதிப்பீடுகளை கணிசமாகப் பாதிக்கவில்லை.

பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை அடிப்படையாகக் கொண்ட பணிகள் துறை தொடர்பான சில முக்கிய கண்டறிதல்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

### i. கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தொடர்புடைய பணிகள்

பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடைய பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவீட்டு பதிலிறுப்புக்கள் மற்றும் மாதிரி அளவீட்டு தரவுகளின் அடிப்படையிலான புள்ளிவிபர அனுமானம் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு மதிப்பிடப்பட்டன. அளவீட்டை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளிற்கமைவாக, கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடைய பணிகளுக்கான உட்பாய்ச்சல்கள் ஆண்டிற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1 பில்லியனாகக் காணப்பட்டது. எனினும், தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடைய பணிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 800 மில்லியன் உட்பாய்ச்சலை பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமை தரவுகள் தற்போது அறிக்கையிடுகின்றன. எவ்வாறெனினும், முன்னர் அறிக்கையிடப்படாத, தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் மற்றும் தொழில்நுட்ப பணிகள் போன்ற

வரைபடம் சி.கு. 1.3: கணனி மற்றும் தகவல்தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளும் துறை மற்றும் ஏனைய வியாபாரப் பணிகளுக்கான உட்பாய்ச்சல்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

1

சில தோற்றம்பெற்றுவரும் பணிகளின் துணைத்துறைகளிலிருந்தான உட்பாய்ச்சல்கள் சென்மதி நிலுவைக்கு கணிசமானளவு பங்களிப்புச் செய்துள்ளன என பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமை தரவுகள் வெளியிட்டன. இதற்கமைய, இவ்வகைகள் தற்போது வேறாக இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் பணிகள் துறை வகைப்படுத்தலுடன் தொடர்புடைய பாய்ச்சல்களை மேம்படுத்துகின்றது. வரைபடம் சி.கு. 1.3இல் காட்டப்பட்டதற்கமைவாக, ஏனைய வியாபார பணிகளுடன் இணைந்து, கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடைய பணிகளின் ஒருங்கிணைந்த மொத்தம் முன்னைய மதிப்பீடுகளுடன் இணங்கி செல்வதுடன், பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையானது பணிகள் துறை வர்த்தக கொடுக்கல்வாங்கல்களின் மிகவும் துல்லியமானதும் விரிவானதுமான வகைப்படுத்தலை இயலச்செய்துள்ளதுள்ளமையை நிரூபிக்கின்றது.


### ii. கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதிப் பணிகள்

கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதிப் பணிகள் போன்ற சில பணிகள் துறைகள் முக்கியமாக குறைந்தளவான பதிலிறுப்பு வீதங்கள் காரணமாக அளவீட்டு அடிப்படையிலான மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு குறைவாக அறிக்கை செய்யப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டன. பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பாக கட்டடவாக்கப் பணிகள் உட்பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்கவையாகவுள்ளதுடன் இப்பணிகள் தொழில்கள் வருகின்ற ஆண்டுகளில் வளர்ச்சியடைவதற்கு மகத்தான உள்ளார்ந்த ஆற்றலை கொண்டுள்ளன என்பதை தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன (வரைபடம் சி.கு. 1.4). உள்நாட்டு கட்டடவாக்க தொழிற்துறையின் மெதுவான மீட்சியினைக் கருத்திற்கொண்டு, விரிவாக்கத்திற்கான வெளிநாட்டு வாய்ப்புக்களை தேடும் இலங்கை கட்டடவாக்க நிறுவனங்கள் சமீபத்தில் காட்டிய உற்சாகம் இதற்கு பகுதியளவில் காரணமாக அமைந்தது.

### iii. இலங்கை மாணவர்களால் வெளிநாட்டில் பின்தொடரப்படும் கல்வி மீதான செலவினம்

அண்மைய ஆண்டுகளில், வெளிநாட்டுக் கல்வியுடன் தொடர்புடைய எல்லைகளுக்கிடையிலான வெளிப்பாய்ச்சல்கள் கொள்கைச் சுழற்சிகளில் முக்கிய பேசுபொருளாக இருந்து வருகின்றன. எனினும், இத்தகைய வெளிப்பாய்ச்சல்கள் மீதான நம்பகமான தரவுகள் இல்லாதது கொள்கை விவாதத்திற்கு தடையாக இருந்தது. பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை அறிமுகப்படுத்தியதிலிருந்து, கல்விசார்ந்த பணிகளுக்கான எல்லைகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் மாதாந்த அடிப்படையில் அறிக்கையிடப்பட்டு, பாரியவிலான

வரைபடம் சி.கு. 1.4: காப்புறுதி மற்றும் கட்டடவாக்கப் பணிகள் (உட்பாய்ச்சல்கள்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வெளிப்படைத்தன்மையையும் தரவுத் தூண்டல் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளுவதையும் ஊக்குவிக்கின்றன (வரைபடம் சி.கு. 1.5). எவ்வாறெனினும், இதுபோன்ற பணிகளுக்கான கொடுப்பனவுகளின் வங்கியல்லா வழிமுறைகளின் பயன்பாட்டின் காரணமாக, பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையினூடாக அடையப்பெறும் பெறுமதி முழுமையடையாமலிருக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

## பணிகள் துறை புள்ளிவிபரங்களின் பயன்பாடு


மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள உதாரணங்களுக்கமைய, செயல்திறன்வாய்ந்த கொள்கை உருவாக்கத்திற்கு பணிகள் துறை பற்றிய துல்லியமான தரவுகள் இன்றியமையாதனவாகும். இலங்கை மத்திய வங்கியானது 2025 சனவரியில் வெளியிடத் தொடங்கிய மாதாந்த நடைமுறைக் கணக்குத் தரவுகளில் பணிகள் துறை புள்ளிவிபரங்கள் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ளன. நடைமுறைக் கணக்கு புள்ளிவிபரங்களை அடிக்கடி மற்றும் துல்லியமாக அறிக்கையிடுகின்றமையானது நாணய மற்றும் இறைக் கொள்கைகளை வடிவமைப்பதில் கொள்கை வகுப்பாளர்களுக்கு பெறுமதிமிக்க நுண்ணறிவுகளை வழங்குகின்றது. மேலதிகமாக, பணிகள் துறை தரவுகள் உள்ளடங்கலாக நடைமுறைக் கணக்கின் மாதாந்த இற்றைப்படுத்தல்கள், வெளிநாட்டுத் துறையில் சாத்தியமான மாற்றங்களின் முன்கூட்டிய குறிகாட்டிகளை வழங்குகின்றன. இந்தத் தரவு எதிர்காலத்தில் சாத்தியமான சென்மதி நிலுவைச் சவால்களை எதிர்வுகூறுவதற்கான முக்கிய சமிக்ஞையாக செயல்பட முடியும்.

## முன்னோக்கிய பயணம்

முன்னோக்கி பார்க்கையில், வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களை மேலும் முன்னேற்றுவதற்கு, வங்கித்தொழில் துறை உள்ளடங்கலாக, பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள்

1

வரைபடம் சி.கு. 1.5: இலங்கை மாணவர்களால் வெளிநாட்டில் பின்தொடரப்படும் கல்வி மீதான செலவினம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

அறிக்கையிடல் முறைமை செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்வலர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதை இலங்கை மத்திய வங்கி இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், இலங்கை மத்திய வங்கியானது அதன் சுய மதிப்பீடுகளினதும் அலுவல்சார் தரவுகளினதும் வேறுபாடுகளை நீக்குவதற்கு முக்கிய பணிகள் துறை கைத்தொழில்கள் மற்றும் தொடர்புடைய வர்த்தக அமைப்புகளிடம் கலந்துரையாடுவதற்கும் பணிகள் துறை புள்ளிவிபரங்களின் உள்ளடக்கத்தையும் தரத்தையும் மேலும் உயர்த்துவதற்கும் ஆர்வத்துடன் காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, வளர்ச்சியடைந்துவரும் பணிகள் துறைகளின் வளர்ச்சி வாய்ப்பினை சிறந்த முறையில் அறிந்துகொள்வதில் கவனம்செலுத்துவதற்கு, இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட தீவிரமான துறைசார் கொள்கை ஆய்வுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடுகின்றது. அறிவுறுத்தப்பட்ட கொள்கை வகுப்பிற்கான பெறுமதிமிக்க நுண்நோக்குகளை இதுபோன்ற பகுப்பாய்வுகள் வழங்குவதுடன் வளர்ச்சியடைந்துவரும் பணிகள் துறையைப் பேணிவளர்ப்பதற்கான உபாயங்களை உருவாக்குவதற்கும் அதன் உள்ளார்ந்த ஆற்றலை அதிகரிக்கச்செய்வதற்கும் ஆதரவளிக்கும்.

**உசாத்துணைகள்**

United Nations, European Commission, International Monetary Fund, Organisation for Economic Co-operation and Development and World Bank (2009) *System of National Accounts 2008*, New York: United Nations.

Wijayawardhana A (2024) 'Capturing Services Sector Cross Border Transactions: The Central Bank of Sri Lanka's Long Endeavour to Establish an International Transactions Reporting System', Information Series Note, Central Bank of Sri Lanka.

உள்ளடங்கலாக அரசக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளிலிருந்து உருவாக்கப்பட்டது. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் மூலம் செலுத்தப்பட்ட பங்கிலாபங்களின் அதிகரிப்பு, 2024ஆம் ஆண்டில் முக்கிய வளர்ச்சியொன்றாக காணப்பட்டு, அவற்றின் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான உயர்ந்தளவிலான பகிர்ந்தளிப்புக்களைப் பிரதிபலித்தது. எனினும், மீள் முதலீடுசெய்யப்பட்ட வருவாய்களின் வெளிப்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்தன. நிதியியல் கணக்கில் உட்பாய்ச்சலொன்றாகவும் இது பதிவுசெய்யப்பட்டு, நிதியியல் கணக்கின் குறைந்தளவிலான நேரடி முதலீடுகளைத் தோற்றுவித்தன. 2024ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளின் அட்டுறு வட்டி மற்றும் 2024ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின் உண்மை வட்டிக் கொடுப்பனவுகள் போன்றவற்றுக்கான படுகடன் பிணையங்களுக்கான தொடர்புடைய வட்டிக் கொடுப்பனவுகள் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், அதிகரித்தன. முன்னோக்கிப் பார்க்கையில், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு செயன்முறை நிறைவுடன், படுகடன் பிணையங்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் கணிசமானளவில் குறைவாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, அரசாங்கத்தினால் செலுத்தவேண்டிய

பலதரப்பிலான படுகடன் அதிகரித்ததன் விளைவாகவும், அத்துடன் இருதரப்பிலான படுகடனின் ஒன்றுசேர்ந்த வட்டி அதிகரிப்பின் விளைவாகவும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் கணிசமானளவு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அவற்றில் பெரும்பாலானவை இன்னும் மறுசீரமைப்புச் செயன்முறையின் கீழ் காணப்படுகின்றன. அதேவேளை, மத்திய வங்கியினால் ஒதுக்கு சொத்துக்களின் முதலீடுகளிலிருந்தான வருவாய்கள் 2024இல் அதிகரித்தன. இது மொத்த அலுவல்சார் ஒதுக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கலாம். எனினும், வங்கித்தொழில் துறையின் வட்டி வருமானம் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024ஆம் ஆண்டில் மிதமாகக் குறைவடைந்தது. இதற்கமைய, முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2.6 பில்லியனாகக் காணப்பட்டது.

## இரண்டாந்தர வருமானக் கணக்கு

**இரண்டாந்தர வருமானக் கணக்கிலுள்ள மிகையானது தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட நிலையான முன்னேற்றத்தினால் முதன்மையாக உந்தப்பட்டு 2024ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.** இந்த சாதகமான போக்கானது வெளிநாட்டு தொழில்வாய்ப்பினை நாடும் இலங்கை தொழிலாளர்களின் தொடர்ச்சியான வெளியேற்றங்களால் பெருமளவில் ஆதரவளிக்கப்பட்டமையானது இவ்வாண்டின் காலப்பகுதியில் உத்தியோகபூர்வ வங்கித்தொழில் வழிமுறைகளினூடாக தொழிலாளர் பணவனுப்பல்களின் உயர்ந்த உட்பாய்ச்சல்களுக்கு பங்களிப்புச் செய்தது. வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான புறப்படுகைகள் இதுவரை இல்லாத அளவிற்கு உயர்வாக 2024ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டன. இதன்விளைவாக, தொழிலாளர் பணவனுப்பல்கள் 10.1 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு, 2023இன் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 6.6 பில்லியனை அடைந்தது. பணவனுப்பல்களில் ஏற்பட்ட இத்தோற்றமானது 2024இல் ஐ.அ.டொலர் 6.4 பில்லியனாகக் காணப்பட்ட இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகையின் சடுதியான அதிகரிப்பிற்கு பங்களித்தது.

## மூலதனக் கணக்கு

**மூலதன கணக்கு மிகை 2024ஆம் ஆண்டில் மிதமடைந்தது. அரசாங்கத்திற்கான மூலதனக் கொடைகள் மிதமாக இருந்ததன் விளைவாக, 2024ஆம் ஆண்டில் அரச மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டிற்குமான மூலதன மாற்றல்கள் குறைவடைந்தன.** இதற்கமைய, 2023இன் ஐ.அ.டொலர் 37 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில், மூலதனக் கணக்கு 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 12 மில்லியன் கொண்ட மிதமான மிகையொன்றைப் பதிவுசெய்தது.

## நிதியியல் கணக்கு

**2024ஆம் ஆண்டில் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் தேறிய உறப்பட்ட பொறுப்புக்களும் நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பும்**

அட்டவணை 1.13 : நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2023 (அ) | 2024 (ஆ) |
|---|---|---|
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | 1,483 | 892 |
| நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் | 3,655 | 1,910 |
| பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | 2,172 | 1,018 |
| | | |
| **நேரடி முதலீடு: சொத்துக்கள்** | 51 | 110 |
| பங்குரிமை மூலதனம் | 47 | 106 |
| படுகடன் சாதனங்கள் | 5 | 4 |
| **நேரடி முதலீடு: பொறுப்புக்கள்** | 713 | 761 |
| பங்குரிமை மூலதனம் | 497 | 499 |
| படுகடன் சாதனங்கள் | 216 | 262 |
| | | |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: சொத்துக்கள்** | 173 | 180 |
| படுகடன் பிணையங்கள் | 173 | 180 |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: பொறுப்புக்கள்** | 931 | 301 |
| பங்குரிமை மூலதனம் | 8 | 2 |
| படுகடன் பிணையங்கள் | 923 | 299 |
| பொது அரசாங்கம் | 910 | 286 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | 132 | -217 |
| நீண்டகாலம் | 778 | 504 |
| திறைசேரி முறிகள் | 78 | 39 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | -27 | - |
| நாட்டுக்கான முறிகள் | 727 | 465 |
| ஏனைய துறைகள் | 13 | 13 |
| நீண்டகாலம் | 13 | 13 |
| | | |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - |
| | | |
| **ஏனைய முதலீடுகள்: சொத்துக்கள்** | 972 | -3 |
| நாணயமும் வைப்புக்களும் | 114 | -73 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 136 | 111 |
| ஏனைய கணக்குகள் பெறவேண்டியவை | 721 | -42 |
| **ஏனைய முதலீடுகள்: பொறுப்புக்கள்** | 528 | -44 |
| நாணயமும் வைப்புக்களும் | -134 | -868 |
| கடன்கள் | 751 | 993 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -260 | -170 |
| ஏனைய கணக்குகள் கொடுக்க வேண்டியவை | 171 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - |
| | | |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | 2,458 | 1,622 |
| | | |
| **தேறிய தவறுகளும் விடுபாடுகளும்** | 6 | -325 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**மெதுவான வேகத்திலேனும் அதிகரித்தன.** தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் 2023இன் ஐ.அ.டொலர் 2.2 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர் 1.0 பில்லியனால் அதிகரித்தன. ஆண்டுகாலப்பகுதியில், நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்கள் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற மூன்றாம் தொகுதியினையும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றிலிருந்தான பகிர்ந்தளிப்புக்களினையும் உள்ளடக்கியிருந்தன.

## நேரடி முதலீடுகள்

**நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்கள் 2024ஆம் ஆண்டில் தொடர்ந்தும் ஒப்பீட்டளவில் மிதமடைந்துக் காணப்பட்டன.** நேரடி தொழில்முயற்சிகளுக்கான பங்குரிமை முதலீடுகள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான கடன்கள் போன்றவற்றில் உயர்வு இருந்தபோதிலும், நேரடி தொழில்முயற்சிகளுக்கான வருவாய்களினதும் பங்குதாரர் முற்பணங்களினதும் மீள்முதலீடு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காண்பித்தது. அதேவேளை, 2024ஆம் ஆண்டில் முதலீட்டுச் சபை நிறுவனங்களுக்கான தொடர்பற்ற தரப்பினர்களிடமிருந்தான வெளிநாட்டுக் கடன்களும் அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தன. இதற்கமைய, வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடு 2023இன் ஐ.அ.டொலர் 759 மில்லியனிலிருந்து 2024இல் ஐ.அ.டொலர் 846 மில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டது. கடன்கள் நீங்கலாக, வெளிநாட்டு நேரடி முதலீடு, கடந்த ஆண்டின் ஐ.அ.டொலர் 713 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024இல் ஐ.அ.டொலர் 761 மில்லியனாகக் காணப்பட்டது. துறைவாரியான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல்கள் முதன்மையாக, பன்முகப்படுத்தப்பட்ட உடைமைகள், தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் வலையமைப்புக்கள், விடுதிகள் மற்றும் உணவகங்கள் மற்றும் துறைமுக கொள்கலன் முனைக்கோடிகள் போன்றவற்றை நோக்கி செலுத்தப்பட்டன. முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கான நேரடி முதலீடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்து காணப்பட்டன. எனினும், முக்கிய பொது பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றின் பங்கு உரிமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றமொன்றுடன் தொடர்பான குறிப்பிடத்தக்களவு உட்பாய்ச்சல் காணப்பட்ட போதிலும், அதன் தாய்க் கம்பனி கொழும்பு பங்கு பரிவர்த்தனையிலிருந்து நீக்கப்பட்டதனால், முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்படவில்லை.

## சொத்துப்பட்டியல் முதலீடுகள்


**சொத்துப்பட்டியல் முதலீடுகளின் தேறிய உறப்பட்ட பொறுப்புக்களும் தேறிய கையேற்பு நிதியியல் சொத்துக்களும் 2024இல் அதிகரித்தன. கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பங்குரிமை மற்றும் முதலீட்டு பங்குகளின் வடிவத்தில் காணப்படும் சொத்துப்பட்டியல் முதலீடு, சிறிதளவு தேறிய உட்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்த அதேவேளை அரசப் பிணையங்களிலுள்ள வெளிநாட்டு முதலீடு தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தது.** மேலும், கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் அங்கு பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் மீட்சியைப் பிரதிபலிக்கும் வகையில், சில நிறுவனங்கள் உரிமைச் சிக்கல்களை வெற்றிகரமாக நிவர்த்திசெய்து, வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து வந்தவை உள்ளடங்கலாக, அவற்றின் புதிய பங்குரிமையுடன் ஐந்தொகைகளை வலுப்படுத்தின. அதேவேளை, ஆண்டுகாலப்பகுதியில், அரசப் பிணையங்களின் வதிவற்றோர் முதலீடுகள் கணிசமானளவு குறைவடைந்தன. சொத்துப்பட்டியல் முதலீட்டின் கீழ் படுகடன் பிணையங்களில் காணப்படும் கொடுக்கல்வாங்கல்களின் நியதிகளில், வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் வெற்றிகரமான நிறைவும் கடந்தகாலத்தில் செலுத்தவேண்டிய வட்டி முறியின் மீள்கொடுப்பனவின் முதல் தொகுதியும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட படுகடன் பிணையங்களின் பொறுப்புக்களில் குறைப்பைத் தோற்றுவித்தன.

## ஏனைய முதலீட்டு மற்றும் ஒதுக்குச் சொத்துக்கள்

**ஏனைய முதலீடுகளிலுள்ள தேறிய உறப்பட்ட பொறுப்புக்களும் மற்றும் தேறிய நிதியியல் சொத்துக்களின் கையேற்பும் 2024ஆம் ஆண்டில் குறைவடைந்தன.** இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, ஈரானிய கொடுகடன் வசதி உள்ளடங்கலாக அதன் தற்போதுள்ள வர்த்தகக் கொடுகடன் பொறுப்புக்களைத் தொடர்ந்தும் குறைத்தமையினால், வர்த்தக கொடுகடன்களும் முற்பணங்களும் பொறுப்புக்களில் குறைவொன்றினைப்

## சிறப்பு வரைபடம் 1.4:
## நெருக்கடிக்கு முன்னரான நடைமுறைக் கணக்கிற்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கணக்கின் நெருக்கடிக்கு பின்னரான இயக்கவாற்றல்

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் நிதியிடல்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நெருக்கடிக்கு முன்னர் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியளித்தலானது சில குறிப்பிடத்தக்க தகவல்களை வெளிப்படுத்துகின்றன. 2023ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில், இலங்கையின் தொடர்ச்சியான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள் 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் பதிவுனைய முதலீடுகள் (முக்கியமாக தேறிய வெளிநாட்டுக் கடன்கள்), சொத்துப்பட்டியல் முதலீடுகள் மற்றும் நேரடி முதலீடுகள் என்பவற்றினால் பெரும்பாலும் நிதியளிக்கப்பட்டுள்ளன. எனினும், 2020 தொடக்கம் 2022 வரை, சொத்துப்பட்டியல் முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினையும் குறிப்பிடத்தக்க குறைந்தளவு நேரடி முதலீடுகளும் காணப்பட்டன. 2020 தொடக்கம் 2022 வரையிலான காலப்பகுதியில் ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவு குறைந்ததன் மூலம் இதை ஈடுசெய்ய வேண்டியிருந்தது. எனினும், நெருக்கடிக்கு பின்னர், வெளிநாட்டுத் துறையின் உறுதிப்படுத்தலுடன் நடைமுறைக் கணக்கு 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் மிகையொன்றினைப் பதிவுசெய்து, ஒதுக்குகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. மேலும், 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில், வங்கித்தொழில் துறை குறிப்பாக அவற்றின் வெளிநாட்டுச் சொத்துக்களைக் கட்டியெழுப்பக்கூடியதாயிருந்தது.

பதிவுசெய்தன. மேலும், ஆண்டுகாலப்பகுதியில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் புதிய வர்த்தக கொடுகடன் வசதிகளினுள் இணைந்திருக்கவில்லை. அதேவேளை, வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்கள் 2024ஆம் ஆண்டில் சிறிய தேறிய அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தன. கம்பனிகள் துறையின் கடன்பெறுகை மட்டுப்படுத்தப்பட்டிருந்து, ஆண்டுகாலப்பகுதியில் துறையில் சிறிய தேறிய வெளிப்பாய்ச்சலுக்கு வழிவகுத்தது. இவ் அதிகரிப்பிற்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றிடமிருந்தான கிடைப்பனவுகளுடன் இணைந்து, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் கணிசமான தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் அதிகரிப்பிற்கு பாரியளவில் பங்களிப்புச்செய்தன. மேலும், வங்கித்தொழில் துறையானது நாணயத்திலும் வைப்புக்களிலும் தேறிய நிதியியல் சொத்துக்களின் கையேற்பில் குறைவொன்றைக் காண்பித்த அதேவேளை 2024ஆம் ஆண்டில் வர்த்தக கொடுகடன்களிலும் முற்பணங்களிலும் தேறிய அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது.

### 1.4.2. பன்னாட்டு முதலீட்டு நிலைமை, ஒதுக்குச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

#### பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**2024ஆம் ஆண்டில், இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்தளவிலான தேறிய பொறுப்பு நிலைமையைப் பிரதிபலித்தது.** நாட்டின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்களும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும் 2024ஆம் ஆண்டின் இறுதியளவில் அதிகரித்திருந்தபோதிலும், பொறுப்புக்களின் அதிகரிப்பு சொத்துக்களின் அதிகரிப்பை விட அதிகமாவிருந்தது. 2016இல் பெற்றுக்கொள்ளப்பட்ட

**அட்டவணை 1.14 : பன்னாட்டு முதலீட்டு நிலைமை (சுருக்கம்) (அ)**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| விடயம் | 2023 (ஆ) | | 2024 (இ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு** | 1,589 | 14,833 | 1,699 | 16,556 |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | 1,539 | 8,668 | 1,645 | 10,130 |
| படுகடன் கருவிகள் | 50 | 6,164 | 54 | 6,427 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | 174 | 7,744 | 353 | 10,457 |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | - | 484 | - | 762 |
| படுகடன் கருவிகள் | 174 | 7,260 | 353 | 9,694 |
| **ஏனைய முதலீடு** | 6,370 | 40,832 | 6,367 | 41,012 |
| நாணயமும் வைப்புக்களும் | 1,770 | 7,941 | 1,697 | 7,051 |
| கடன்கள் | - | 30,847 | - | 32,133 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 1,629 | 760 | 1,741 | 590 |
| ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள் | 2,971 | - | 2,930 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | | 1,285 | | 1,239 |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | 4,392 | | 6,122 | |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | 12,525 | 63,410 | 14,542 | 68,025 |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | -50,885 | | -53,484 |
| **விஞ்ஞாபன விடயங்கள்** | | | | |
| ப.மு.நி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 12,525 | 63,410 | 14,542 | 68,025 |
| குறுங்காலம் | 9,280 | 5,811 | 9,075 | 5,915 |
| நீண்டகாலம் | 3,244 | 57,599 | 5,467 | 62,110 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) ப.மு.நி இன் விரிவான பகுப்பிற்கு பின்னிணைப்பு அட்டவணை 12ஐப் பார்க்க
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடன் தொடர்புடைய மீள்கொடுப்பனவுகள் மற்றும் இந்திய ரிசேர்வ் வங்கியுடனான விசேட பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாட்டை படிப்படியாக தீர்ப்பனவு செய்தமை போன்றவற்றின் முக்கிய காரணமாக ஆண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. ஆண்டிறுதியில், சில பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சந்தை விலைகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவுசெய்தமை காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சல்கள் மிதமடைந்து காணப்பட்டபோதிலும் நேரடி முதலீட்டுப் பொறுப்புக்கள் அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தன. மேலும், 2023 இறுதியில் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்த முன்னைய படுகடன் பிணையங்களின் சந்தை விலைகளுடன் ஒப்பிடுகையில் படுகடன் மறுசீரமைப்பிற்கு பின்னர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு புதிய படுகடன் பிணையங்களின் உயர்ந்தளவான சந்தை விலைகளினால் தூண்டப்பட்டு, சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்புக்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தன. புதிதாக வழங்கப்பட்ட முறிகளின் முகப் பெறுமதியானது முன்னர் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முகப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருந்தபோதிலும், இது நிகழ்ந்தது. மேலும், அரசாங்கத்தின் செலுத்தப்படாத வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான ஒன்றுசேர்ந்த வட்டி அதிகரிப்புடன் இணைந்து, முக்கியமாக, பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றிலிருந்து அரசாங்கத்திற்கான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களைப் பிரதிபலித்து, வெளிநாட்டு கடன் பொறுப்பு நிலைமை அதிகரிக்கப்பட்டது. இதன்விளைவாக, நாட்டின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2023இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 63.4 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ஐ.அ.டொலர் 68.0 பில்லியனிற்கு அதிகரித்தது.

**ஒதுக்கு சொத்துக்கள் மற்றும் வங்கித்தொழில் துறை வெளிநாட்டுச் சொத்துக்கள் இரண்டினதும் அதிகரிப்புகளுடன், 2024ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமையும் அதிகரித்திருந்தது.** இதன்விளைவாக, நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2023இன் இறுதியில் ஐ.அ.டொலர் 12.5 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ஐ.அ.டொலர் 14.5 பில்லியனிற்கு அதிகரித்தது. மொத்த பொறுப்புக்களின் அதிகரிப்பினால் வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சி விஞ்சப்பட்டு, உயர்ந்தளவிலான தேறிய பொறுப்பு நிலைமைக்கு வழிவகுத்தது. இதற்கமைய, நாட்டின் தேறிய பொறுப்பு நிலைமை 2023இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 50.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இன் இறுதியில் ஐ.அ.டொலர் 53.5 பில்லியனிற்கு அதிகரித்தது.

## ஒதுக்குச் சொத்து நிலைமை

**இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமடைந்து, 2023ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனை அடைந்தது.** இவ்வதிகரிப்பிற்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையிலிருந்து மத்திய வங்கி மூலம் இடம்பெற்ற இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்தளவிலான வெளிநாட்டுச்


1

## சிறப்பு வரைபடம் 1.5:
## இலங்கையின் ஒதுக்குப் போதுமை குறிகாட்டிகளை மேம்படுத்தல்

2021/2022 ஆண்டுகளின் சடுதியான குறைவடைதலைத் தொடர்ந்து, இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வலுவாக அதிகரித்துள்ள அதேவேளை குறுகிய கால படுகடன் குறைவடைந்துள்ளது. இது குறுகிய கால பொறுப்புக்களின் சதவீதமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் உயர்ந்தளவான விகிதத்திற்கு வழிவகுத்து, குறுகிய காலத்தில் நாடு அதன் நிதியியல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நன்கு தயாராகவுள்ளதென்பதனை எடுத்துக்காட்டுகின்றது.


அதேவேளை, இறக்குமதி மாதாங்களாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் கிடைப்பனவில் வெளிப்படுத்தப்படும் இறக்குமதி உள்ளடக்கமும் வலுவாக மேம்பட்டு, வெளிநாட்டுத் துறையில் படிப்படியான மீட்சியைக் குறித்துக்காட்டுகின்றது. ஒதுக்குப் போதுமை குறிகாட்டிகளிலுள்ள இவ்வீட்டல்கள் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பொன்றுடன் இணைந்து வெளிநாட்டுத் தாங்கிருப்புக்கள் மற்றும் நாட்டின் பேரண்டபொருளாதார உறுதிப்பாடு மற்றும் கடன் மதிப்புக்கள் என்பவற்றின் வலுப்படுத்தலினைக் காண்பிக்கின்றன.

**ஒதுக்குப் போதுமை: இறக்குமதிகளின் மாதங்கள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**ஒதுக்குப் போதுமை: குறுகிய காலப் படுகடனின் சதவீதமாக**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

செலாவணியின் தேறிய கொள்வனவுகள், தற்போதைய பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நாணய வசதி ஏற்பாட்டின் மூன்றாம் தொகுதியின் கிடைப்பனவு, மற்றும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான நிதியியல் ஆதரவு போன்றன இவ்வதிகரிப்பிற்கு தூண்டுதலாகவிருந்தன. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான நேரடி வெளிநாட்டுச் செலாவணி உள்ளீர்த்தலினுடாக மொத்த அலுவல்சார் ஒதுக்கின் அதிகரிப்பானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் 2024ஆம் ஆண்டிற்கான தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்குகளை விஞ்சுவதற்கு மத்திய வங்கிக்கு இயன்றது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை மறுசீரமைப்பதுடன் தொடர்புடைய ஒரு தடவையிலான கட்டணங்கள் மற்றும் வட்டி மீள்கொடுப்பனவுகள் காரணமாக 2024 நவெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.5 பில்லியனாக காணப்பட்ட மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2024 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், வெளிநாட்டுப் பொறுப்புக்களின் அதிகரிப்பை விட வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பு உயர்வாக காணப்பட்டமையினால், 2024ஆம் ஆண்டில் வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமை மேம்பட்டது. 2024இன் இறுதியளவில், வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2023 இறுதியின் ஐ.அ.டொலர் 5.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 5.1 பில்லியனிற்கு அதிகரித்தது. இதன்விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் சொத்துக்களையும் உள்ளடக்குகின்ற மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2023இன் இறுதியில் ஐ.அ.டொலர் 9.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 11.2 பில்லியனை அடைந்து, குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

1

**அட்டவணை 1.15 : மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| விடயம் | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள் | 155 | 177 | 39 | 875 | **368** |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் | 5,510 | 2,962 | 1,858 | 3,517 | **5,754** |
| **3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2)** | **5,664** | **3,139** | **1,898** | **4,392** | **6,122** |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத் தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள் | 2,856 | 2,983 | 3,976 | 4,981 | **5,108** |
| **5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ)** | **8,521** | **6,122** | **5,874** | **9,373** | **11,230** |
| 6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 2,121 | 3,562 | 5,127 | 4,796 | **3,635** |
| **7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6)** | **3,543** | **-423** | **-3,229** | **-404** | **2,487** |
| **8. திரண்ட நிலுவை (ஈ)** | **-2,328** | **-3,967** | **-2,806** | **2,826** | **2,890** |
| 9. பொருட்களின் இறக்குமதிகளின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி | 4.2 | 1.8 | 1.2 | 3.1 | **3.9** |
| 10. பொருட்களின் இறக்குமதிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | 6.4 | 3.6 | 3.9 | 6.7 | **7.2** |

(அ) தற்காலிகமானது
(ஆ) "வெளிநாட்டு நேரடி முதலீடு" மற்றும் "வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள்" வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## திரண்ட நிலுவை

**தேறிய பன்னாட்டு ஒதுக்குகளில் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்ற சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2024 இறுதியளவில் உயர்ந்த மிகையொன்றினைப் பதிவுசெய்தது.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023இன் இறுதியில் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனிற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. 2024 திசெம்பரில் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பிக்கப்பட்ட சீன மக்கள் வங்கியிலிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியை இது உள்ளடக்குகின்றதுடன் பயன்பாட்டிற்கான நிபந்தனைகளுக்குட்பட்டதாகும். அதேவேளை, ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு, முக்கியமாக 2016ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடன் தொடர்புடைய கடப்பாடுகளின் தீர்ப்பனவு மற்றும் ஆண்டுகாலப்பகுதியில் இந்திய றிசேர்வ் வங்கியின் விசேட பரஸ்பர பரிமாற்றல் வசதியின் மீள்கொடுப்பனவுகள் என்பன காரணங்களாக அமைந்தன. இதன்விளைவாக, தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024இன் இறுதியளவில் மேம்பட்டு, 2023இல் ஐ.அ.டொலர் 2.8 பில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் திரண்ட நிலுவையில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.9 பில்லியன் கொண்ட மிகையொன்றுக்கு வழிவகுத்தது.


## 1.4.3. வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள்

### வெளிநாட்டுப் படுகடன்

**வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கு பின்னர், 2024ஆம் ஆண்டில் முகப் பெறுமதிகளின் நியதிகளில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் குறைவடைந்தது.** 2023ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் படுகடனின் சந்தைப் பெறுமதிக்கும் முகப் பெறுமதிக்குமிடையில் பாரிய விலகலொன்று காணப்பட்டது. எனினும், படுகடன் மறுசீரமைப்பின் பின்னர், இவ்வேறுபாடு கணிசமானளவு குறைவடைந்தது. 2023ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் படுகடனின் சந்தைப் பெறுமதிக்கும் முகப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ஐ.அ.டொலர் 5,374 மில்லியனாகக் காணப்பட்டது. இது 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 62 மில்லியனிற்கு குறைவடைந்துள்ளது. இதற்கமைய, முகப் பெறுமதியின் நியதிகளில் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2023 இறுதியின் ஐ.அ.டொலர் 59.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் ஐ.அ.டொலர் 57.2 பில்லியனாகக் காணப்பட்டது. மொத்த வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட இக்குறைப்பானது வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மறுசீரமைப்பின் நேரடி விளைவாகவும் அரசாங்கத்தினால் வைத்திருக்கப்படும் இருதரப்பிலான படுகடனின் முக்கிய அங்கமாகவும் காணப்பட்டது. இப்பின்னணியில், படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கு பின்னர், முகப் பெறுமதியில் வதிவற்றோர் வசமிருக்கும் இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பெறுமதி, 2023இன் இறுதியின் ஐ.அ.டொலர் 10.8 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ஐ.அ.டொலர் 9.3 பில்லியனிற்கு குறைவடைந்தது.

1

## சிறப்பு வரைபடம் 1.6: பன்னாட்டு ஒதுக்குகளின் நெருக்கடிக்கு பின்னைய திரும்பல்



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் குறிப்பிடத்தக்க திரும்பலொன்றினைப் பதிவுசெய்தன. 2021இலிருந்து, சீன மக்கள் வங்கியின் பரஸ்பர நாணய பரிமாற்றல் உடன்படிக்கை உள்ளடங்கலாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2022இல் மிகக் குறைந்தளவிற்கு வீழ்ச்சியடைந்து, அரசாங்கத்தினால் படுகடன் ஸ்தம்பிதநிலை தொடர்பிலான அறிவித்தலினைத் தூண்டியது. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்களையும் கருத்திற்கொள்கின்ற நாட்டின் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமை 2022இல் எதிர்மறையாகவும் வரலாற்றில் குறைந்தளவாகவும் காணப்பட்டது. எனினும், நேரடி கொள்வனவுகளின் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான தேவைப்பாடுகளுக்கு மேலாக சொத்துக்களை அதிகரிப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு இயலுமாயிருந்த அதேவேளை பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடன் தொடர்புடைய பல்புடை நிதியிடலும் இச்செயன்முறைக்கு ஆதரவளித்தது. இந்திய றிசேர்வ் வங்கியுடனான விசேட பரஸ்பர நாணயப் பரிமாற்றல் வசதி ஏற்பாட்டின் தீர்ப்பனவுடன் ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்களும் வீழ்ச்சியடைந்தன. எனவே, நெருக்கடிக்கு பின்னைய ஒதுக்குடன் தொடர்புடைய V வடிவ மீட்சியுடன் தொடர்புடைய ஒதுக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்கின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினதும் மத்திய வங்கியின் பொறுப்புக்களின் தொடர்ச்சியான குறைப்பினதும் இணைந்த விளைவொன்றாகக் காணப்பட்டது. ▲

**ஒட்டுமொத்தமாக, முகப் பெறுமதியின் நியதிகளில், அரச வெளிநாட்டுப் படுகடன் 2023இன் இறுதியில் ஐ.அ.டொலர் 38.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 37.6 பில்லியனாக காணப்பட்டது.** அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் குறிப்பிடத்தக்க குறைப்பு அத்துடன் பன்னாட்டு நாணய நிதியம்[21] மற்றும் ஏனைய பலதரப்பிலான கடன்வழங்வோருடன் உயர்ந்தளவிலான வெளிநின்ற கொடுகடனின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு என்பனவற்றின ஒருங்கிணைந்த விளைவாக இது காணப்பட்டது. ஒட்டுமொத்தமாக, நாட்டின் வெளிநாட்டுப் படுகடனிற்கு மொ.உ.உற்பத்தி விகிதம் (முகப் பெறுமதியின் நியதிகளில்) 2023இன் 71.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 57.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**அதேவேளை, சந்தைப் பெறுமதியின் நியதிகளில் அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் அதிகரித்தது.** இதன்விளைவாக, வர்த்தகப் படுகடன் சாதனங்களுக்கான சந்தைப் பெறுமதியில் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன், 2023 இறுதியின் ஐ.அ.டொலர் 33.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 இறுதியளவில் ஐ.அ.டொலர் 37.6 பில்லியனாக காணப்பட்டமைக்கு முக்கியமாக, 2023இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின்[22] சந்தை விலைகளின் அதிகரிப்பு காரணமாக அமைந்தது. மத்திய வங்கியின் வெளிநாட்டுப் படுகடன் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமைக்கு இந்திய றிசேர்வ் வங்கியுடனான விசேட பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாட்டின் படிப்படியான மீள்கொடுப்பனவும் 2016இல் பெற்றுக்கொள்ளப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியத் திட்டத்தின் மீள்கொடுப்பனவுகளும் காரணங்களாக அமைந்தன. வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் படுகடன் சிறிதளவில் அதிகரித்தமைக்கு முக்கியமாக குறுகிய காலக் கடன்களின் அதிகரிப்பு காரணமாக அமைந்தது.

21 தற்போதைய பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியத் திட்டமானது பிரதானமாக வரவுசெலவுத்திட்ட உதவிக்காகப் பெறப்பட்டமையால் அது அரசாங்கத்தின் பொறுப்பொன்றாகக் கருதப்படுகின்றது. முன்னைய பன்னாட்டு நாணய நிதிய வசதிகள் பிரதானமாக சென்மதி நிலுவைகளின் ஆதரவிற்காக இருந்ததால் மத்திய வங்கியின் பொறுப்புகளாகக் கருதப்பட்டன.

22 ஒரு குறிப்பிட்ட காலத்தின் முடிவில் செலுத்தப்படாத நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஒன்றுசேர்ந்த வட்டி, சந்தைப் பெறுமதி மற்றும் முகப் பெறுமதி ஆகிய இரண்டினதும் நியதிகளின் அடிப்படையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பொறுப்பில் சேர்க்கப்பட்டது.

## வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**முன்னர் கடன் ஸ்தம்பித நிலையிலிருந்த அநேகமான அரசாங்கத்தின் படுகடனின் மீள்கொடுப்பனவு 2024இன் பின்னரைப்பகுதியில் மீண்டும் தொடங்கியதுடன் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் அதிகரித்தன.** 2024ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் அதிகரித்து, 2023இன் ஐ.அ.டொலர் 2.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4.2 பில்லியனை அடைந்தது. 2024ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பானது அரசாங்கத்தின்

**அட்டவணை 1.16 : வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலைமை**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| விடயம் | 2023 (அ) | 2024 (ஆ) |
|---|---|---|
| **சந்தைப் பெறுமதியின் அடிப்படையில்** | | |
| **பொது அரசாங்கம்** | 33,117 | 37,599 |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் (ஏட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது) | 334 | 223 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (அட்டுறு வட்டி உள்ளடங்கலான சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டது) | 6,794 | 9,315 |
| வெளிநின்ற வெளிநாட்டு கடன்கள் (அட்டுறு வட்டி உள்ளடங்கலாக) | 25,988 | 28,061 |
| **மத்திய வங்கி** | 6,081 | 4,874 |
| நாணயமும் வைப்புக்களும் (குறுங்காலம்) | 0.3 | 0.1 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடுகள் | 1,285 | 1,239 |
| இந்திய றிசேர்வ் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | 2,471 | 1,563 |
| சீன மக்கள் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | 1,420 | 1,406 |
| ப.நா.நிதியத்துடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 904 | 667 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | 4,933 | 4,980 |
| நாணயமும் வைப்புக்களும் (இ) | 4,050 | 4,082 |
| கடன்கள் | 883 | 897 |
| **ஏனைய துறைகள் (ஈ)** | 3,963 | 3,254 |
| வர்த்தக கொடுகடன்களும் முற்பணங்களும் (உ) | 760 | 590 |
| படுகடன் பிணையங்கள் (அட்டுறு வட்டி உள்ளடங்கலான சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டது) | 132 | 156 |
| தனியார் துறையினதும் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளினதும் கடன்கள் | 3,071 | 2,508 |
| **நேரடி முதலீடு: கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஊ)** | 6,164 | 6,427 |
| | | |
| **சந்தைப் பெறுமதியில் மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | 54,257 | 57,133 |
| **சந்தைப் பெறுமதியில் மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை - மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக** | 64.8 | 57.7 |
| | | |
| **முகப் பெறுமதியில்** | | |
| **பொது அரசாங்கம்** | 38,428 | 37,610 |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் (முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது) | 363 | 234 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் (அட்டுறு வட்டி உள்ளடங்கலாக முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது) | 12,078 | 9,315 |
| வெளிநின்ற வெளிநாட்டு கடன்கள் (அட்டுறு வட்டி உள்ளடங்கலாக) | 25,988 | 28,061 |
| **இலங்கை மத்திய வங்கி** | 6,081 | 4,874 |
| நாணயமும் வைப்புக்களும் (குறுங்காலம்) | 0.3 | 0.1 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள், ஒதுக்கீடுகள் | 1,285 | 1,239 |
| இந்திய றிசேர்வ் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | 2,471 | 1,563 |
| சீன மக்கள் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | 1,420 | 1,406 |
| ப.நா.நிதியத்துடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 904 | 667 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | 4,933 | 4,980 |
| நாணயமும் வைப்புக்களும் (இ) | 4,050 | 4,082 |
| கடன்கள் | 883 | 897 |
| **ஏனைய துறைகள் (ஈ)** | 4,024 | 3,304 |
| வர்த்தக கொடுகடன்களும் முற்பணங்களும் (உ) | 760 | 590 |
| படுகடன் பிணையங்கள் (அட்டுறு வட்டி உள்ளடங்கலான முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது) | 194 | 207 |
| தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கடன்கள் | 3,071 | 2,508 |
| **நேரடி முதலீடு: கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஊ)** | 6,164 | 6,427 |
| | | |
| **முகப் பெறுமதியில் மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | 59,631 | 57,195 |
| **முகப் பெறுமதியில் மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை - மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக** | 71.2 | 57.8 |
| | | |
| **விஞ்ஞாபன விடயங்கள்** | | |
| மொத்த வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முகப் பெறுமதி | 12,550 | 10,585 |
| வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 10,800 | 9,315 |
| வதிவுள்ளோரினால் வைத்திருக்கப்படும் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் (எ) | 1,750 | 1,270 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(ஈ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(உ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஊ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக
(எ) 2019 திசெம்பர் முதல் வெளிநாட்டு படுகடன் புள்ளிவிபரவியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

1

**அட்டவணை 1.17 : வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2023 (அ) | 2024 (ஆ) |
|---|---|---|
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 2,751 | 4,152 |
| 1.1 தீர்ப்பனவுகள் | 2,125 | 3,020 |
| பொது அரசாங்கம் | 1,043 | 693 |
| செயற்றிட்டக் கடன்கள் | 1,041 | 589 |
| படுகடன் பிணையங்கள் | 2 | 104 |
| மத்திய வங்கி | 522 | 1,110 |
| ப.நா.நிதியம் | 172 | 210 |
| பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றங்கள் | 350 | 900 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 560 | 1,217 |
| வெளிநாட்டு கடன்கள் | 560 | 1,217 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 627 | 1,132 |
| பொது அரசாங்கம் | 405 | 749 |
| செயற்றிட்டக் கடன்கள் | 377 | 532 |
| படுகடன் பிணையங்கள் | 28 | 217 |
| மத்திய வங்கி | 118 | 276 |
| ப.நா.நிதியம் | 57 | 83 |
| பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றங்கள் | 60 | 192 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 92 | 107 |
| வெளிநாட்டு கடன்கள் | 92 | 107 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 12 | - |
| 2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் | 17,327 | 19,682 |
| 3. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 23,776 | 26,877 |
| 4. படுகடன் பணி விகிதம் | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 15.9 | 21.1 |
| ப.நா.நிதிய கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 14.6 | 19.6 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 11.6 | 15.4 |
| ப.நா.நிதிய கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 10.6 | 14.4 |
| 5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 1,448 | 1,443 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 52.6 | 34.7 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ப.நா.நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள் அதே மட்டத்தில் காணப்பட்டபோதிலும் முக்கியமாக மத்திய வங்கி மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் மூலமான உயர்ந்தளவிலான படுகடன் தீர்ப்பனவினால் தூண்டப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவின் ஒரு முக்கிய அபிவிருத்தியாக மறுசீரமைக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பான கொடுப்பனவுகளின் தொடக்கம் காணப்பட்டது. இது கடந்த கால வட்டி முறியின் முதலாவது மூலதன மீள்கொடுப்பனவையும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வட்டிக் கொடுப்பனவையும் உள்ளடக்கின்றது. அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதே மட்டத்தில் காணப்பட்டபோதிலும், வட்டிக் கொடுப்பனவுகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் மற்றும் மூலதன மீள்கொடுப்பனவுகளின் குறைப்பும் காணப்பட்டது. மாறாக, மத்திய வங்கியின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் 2024இல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. மேலும், தனியார் துறை நிறுவனங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவுசெய்து, நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் அதிகரிப்பிற்கு பங்களித்தன.

## 1.4.4. செலாவணி வீத அசைவுகள்

**2024ஆம் ஆண்டில் இலங்கை ரூபாய் உயர்வடைந்தது. நடைமுறைக் கணக்கு மிகைகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயத்தின் நிலையான தேறிய உட்பாய்ச்சல்களுடன் தொடர்ச்சியான இரு ஆண்டுகால உயர்வானது ஒரே நேரத்தில் இடம்பெற்றது.** இது வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையை அதிகரிக்கச்செய்தது. இவ் உட்பாய்ச்சல்கள் முதன்மையாக, தொழிலாளர் பணவனுப்பல்கள், சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள், பணிகள் துறைக்கான ஏனைய பணிகள், மற்றும் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, வணிகப்பொருள் இறக்குமதிகளின் நியதிகளில் வெளிப்பாய்ச்சல்கள், பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள் மற்றும்

**வரைபடம் 1.21: நாளாந்த செலாவணி வீத அசைவுகள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

1

**அட்டவணை 1.18 : செலாவணி வீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2022 | 2023 | 2024 | 2022 | 2023 | 2024 | 2023 | 2024 | 2023 | 2024 |
| யூரோ | 386.93 | 358.75 | **304.56** | 339.04 | 354.11 | **327.05** | 7.86 | **17.79** | - 4.26 | **8.28** |
| இந்திய ரூபா | 4.39 | 3.90 | **3.42** | 4.11 | 3.97 | **3.61** | 12.57 | **13.94** | 3.63 | **9.82** |
| யப்பானிய யென் | 2.74 | 2.29 | **1.87** | 2.44 | 2.34 | **2.00** | 19.53 | **22.51** | 4.54 | **17.01** |
| ஸ்ரேலிங் பவுண் | 437.35 | 412.61 | **367.38** | 396.89 | 407.07 | **386.25** | 5.99 | **12.31** | - 2.50 | **5.39** |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 363.11 | 323.92 | **292.58** | 324.55 | 327.53 | **302.12** | 12.10 | **10.71** | - 0.91 | **8.41** |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 483.24 | 434.60 | **381.57** | 431.91 | 436.88 | **401.07** | 11.19 | **13.90** | - 1.14 | **8.93** |

(அ) இலங்கை ரூபாவிற்கு சமனான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன.
(-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்திற்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நடைமுறைக் கணக்கின் ஏனைய வெளிப்பாய்ச்சல்கள் மிதமடைந்து காணப்பட்டன. நாட்டின் அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்துவதற்கு 2024ஆம் ஆண்டில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையிலிருந்து தேறிய அடிப்படையில் (வர்த்தகத் திகதியை அடிப்படையாகக் கொண்டு) மத்திய வங்கி ஐ.அ.டொலர் 2,846 மில்லியனை தேறிய அடிப்படையில் கொள்வனவு செய்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான வரலாற்றிலேயே உயர்ந்தளவிலான தேறிய ஆண்டு கொள்வனவாக இது காணப்பட்டது. மத்திய வங்கியிலிருந்தான கொள்வனவுகள் இடம்பெறவில்லையெனின், ரூபாய் மேலும் உயர்வடைந்திருக்கக்கூடும்.

## சிறப்பு வரைபடம் 1.7: நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதத்தின் கீழான செலாவணி வீத இயக்கவாற்றல்கள்


மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களை கருத்திற்கொண்டு வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மிகையினால் அளவிடப்பட்டவாறு, கடந்த இரு ஆண்டுகாலமாக பதிவுசெய்யப்பட்ட இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைந்தமைக்கு மேம்பட்ட அடிப்படைகள் முக்கிய காரணமாக அமைந்தன. வெளிநாட்டுச் செலாவணியின் பதிவு மட்டங்களை கொள்வனவுசெய்வதற்கான உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிடவில்லையெனின், இவ் உயர்வடைதலானது மிகவும் முக்கியத்துவமிக்கதாக இருந்திருக்கும். நாணய உயர்வடைதலானது பொருளாதாரச் செயலாற்றத்தின் சிறந்த பிரதிபலிப்பாகும் என்ற பொதுவான கருத்து ஒரு ஆதாரமாற்ற விடயமாகும். நாணய தேய்மானத்தைப் போன்று, நாணய உயர்வடைதலும் அதற்கான நன்மைகளையும் தீமைகளையும் கொண்டுள்ளதுடன் தொடர்ச்சியான உயர்வடைதல் நாட்டின் வெளிநாட்டுப் போட்டித்தன்மைக்குத் தீங்குவிளைவிக்கும். இவ்வாறு, இலங்கை மத்திய வங்கி சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு, நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத ஏற்பாட்டின் கீழ், செலாவணி வீத அசைவுகள் வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளினால் பாரியளவில் தீர்மானிக்கப்படும். பொருளாதார அடிப்படைகள் அத்தகைய போக்குகளைத் தூண்டாவிட்டால், இவ் ஏற்பாட்டின் கீழ் செலாவணி வீதத்தின் தொடர்ச்சியான தேய்மானம் அல்லது உயர்வு குறைவாகவே இருக்கக்கூடும்.

**செலாவணி வீத உயர்வு/ தேய்வு**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**இலங்கை மத்திய வங்கியின் தலையீடு**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


1

**2024ஆம் ஆண்டில், ஒட்டுமொத்த உயர்வடைதலிருந்தபோதிலும், ஆண்டின் சில காலப்பகுதியில் இலங்கை ரூபாய் தளம்பலடைந்திருந்தது.** ஒட்டுமொத்தமாக, ஆண்டின் இறுதி வரையிலான காலப்பகுதியில், இலங்கை ரூபா ஐ.அ.டொலரொன்றுக்கு ரூ.292.58 ஆக காணப்பட்டு, 10.7 சதவீதம் கொண்ட ஆண்டு உயர்வடைதலொன்றைப் பதிவுசெய்தது. 2024ஆம் ஆண்டில், ஐ.அ.டொலருக்கெதிராக முக்கிய நாணயங்கள் தேய்வடைந்திருந்தபோதிலும், இலங்கை ரூபா இந்நாணயங்களுக்கெதிராக தொடர்ச்சியாக உயர்வடைந்திருந்தது. இதற்கமைய, 2024ஆம் ஆண்டில், யூரோ (17.8 சதவீதம்), ஸ்ரேலிங் பவுண் (12.3 சதவீதம்), யப்பானிய யென் (22.5 சதவீதம்), சீன யுவான் (13.9 சதவீதம்), இந்தியா ரூபா (13.9 சதவீதம்) மற்றும் அவுஸ்திரேலிய டொலர் (21.7 சதவீதம்) போன்ற நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா உயர்வடைந்தது. மத்திய வங்கியானது சந்தை அடிப்படையிலான செலாவணி வீதக் கொள்கையை தொடர்ந்ததுடன் நாளுக்குள்ளேயான மிதமிஞ்சிய தளம்பல் காணப்பட்டபோது விற்பனை பக்கத்தில் மாத்திரம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. அலுவல்சார் ஒதுக்குகளை உருவாக்குவதற்கு கொள்வனவு பக்கத்தில் தலையீடுகள் கிரமமாக இடம்பெற்றன.

## பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**2024ஆம் ஆண்டுகாலப்பகுதியில் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் அதிகரித்து, உயர்வடைதலைப் பதிவுசெய்தன.** குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளுடன் இலங்கை ரூபாவானது தெரிவுசெய்யப்பட்ட முக்கிய நாணயங்களுக்கெதிராக பெயரளவு உயர்வடைதலைப் பிரதிபலித்து பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அதிகரித்தன. இதற்கமைய, 5 நாணய மற்றும் 24 நாணய பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் முறையே, 14.6 சதவீதத்தினாலும் 14.9 சதவீதத்தினாலும் அதிகரித்தன. நாணயங்களின் கூடையில் பெயரளவு செலாவணி வீதங்களில் வேறுபாட்டையும் நாணயக் கூடையில் நாடுகளுக்கிடையிலான பணவீக்க வேறுபாடுகளையும் கருத்திற்கொள்கின்ற உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அதிகரித்தன. இதற்கமைய, 5 நாணய மற்றும் 24 நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் முறையே, 8.9 சதவீதத்தினாலும் 9.6 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும், நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அடிப்படை ஆண்டு (2017=100) மட்டத்திற்கு கீழே காணப்பட்டு, அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடுகையில், மேம்பட்ட* வெளிநாட்டுப் போட்டித்தன்மையைப் பிரதிபலித்தது.

வரைபடம் 1.22: தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 24 - நாணயம் (2017=100)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.19 : பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

| தாக்கமுள்ள செலாவணிவீதச் சுட்டெண்கள் (அ) (ஆ) (2017=100) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| | 2022 | 2023 | 2024 | 2022 | 2023 | 2024 | 2023 | 2024 | 2023 | 2024 |
| பெ.தா.செ.வீ - 24 நாணயங்கள் | 47.32 | 53.66 | **61.63** | 53.99 | 53.30 | **58.56** | 13.39 | **14.86** | -1.28 | **9.87** |
| உ.தா.செ.வீ - 24 நாணயங்கள் | 79.74 | 70.24 | **76.98** | 77.49 | 71.73 | **74.77** | -11.91 | **9.59** | -7.44 | **4.25** |

(அ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவு நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலகாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி (உ.தா. செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது

(ஆ) செலாவணி வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/ பெறுமதி தேய்வு என்பது முறையே தாக்கமுள்ள செலாவணி வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/ வீழ்ச்சியில் நேரடியாக பிரதிபலிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

* இது இணையதள வடிவத்தில் திருத்தப்பட்டுள்ளது.

# 1.5 இறைத் துறை அபிவிருத்திகள்

## 1.5.1 முக்கிய இறை நிலுவைகள்

**தொடர்ச்சியான உறுதியான அரசிறை மேம்பாடுகள் மற்றும் செலவினத்தை சிக்கனப்படுத்தும் வழிமுறைகள் 2024இல் முக்கிய இறை நிலுவைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தது.** இதற்கமைய, ஒட்டுமொத்தப் பற்றாக்குறையிலிருந்து வட்டி கொடுப்பனவுகளை நீக்குகின்ற முதலாந்தர நிலுவை மேலும் மேம்பட்டு, 2023இல் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 0.6 சதவீதம் கொண்ட (ரூ.173 பில்லியன்) மிகையுடன் ஒப்பிடுகையில், 2024இல் மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதம் கொண்ட (ரூ.650 பில்லியன்) குறிப்பிடத்தக்க மிகையைப் பதிவுசெய்தது. இது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் குறித்துரைக்கப்பட்ட 2024ஆம் ஆண்டிற்கான ரூ.300 பில்லியன் கொண்ட முதலாந்தர நிலுவை இலக்கை விஞ்சியுள்ளது. சவாலான சமூக அரசியல் சூழலுக்கு மத்தியில், தொடர்ச்சியாக இரு ஆண்டுகளாக முதலாந்தர மிகைகளைப் பதிவுசெய்தமையானது பாராட்டத்தக்க அடைவாக விளங்குகின்றது. இறை மற்றும் படுகடன் உறுதிப்பாட்டைப் பேணிவளர்ப்பதற்கும் பாடுபட்டு உழைத்த பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கும் சாதகமான முதலாந்தர நிலுவையைப் பேணுவது அவசியமாகும். அதேநேரத்தில், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2023இல் மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதத்துடன் (ரூ.1,651 பில்லியன்) ஒப்பிடுகையில், 2024இல் மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதத்திற்கு (ரூ.1,309 பில்லியன்) குறுக்கமடைந்த அதேவேளை ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை 2023இல் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 8.3 சதவீதத்துடனும் (ரூ.2,282 பில்லியன்) மொ.உ.உற்பத்தியின் 9.1 சதவீதத்தைக் கொண்ட (ரூ. 2,851 பில்லியன்) வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டுடனும்[23] ஒப்பிடுகையில், 2024இல் 6.8 சதவீதத்திற்கு (ரூ. 2,040 பில்லியன்) குறுக்கமடைந்தது.

## 1.5.2 அரசிறை, செலவினம், மற்றும் தேறிய கடன்வழங்கல்

### அரசிறை

**அரசிறை மேம்படுத்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்பு போன்றவற்றின் மூலம்,**

அட்டவணை 1.20 : அரசின் இறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம்

| விடயம் | 2023 | 2024 (அ) | 2023/2024 | |
|---|---|---|---|---|
| | | | மொத்த மாற்றம் | % மாற்றம் |
| ரூ. பில்லியன் | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | 3,074.3 | 4,090.8 | 1,016.5 | 33.1 |
| மொத்த அரசிறை | 3,048.8 | 4,030.8 | 982.0 | 32.2 |
| வரி அரசிறை | 2,720.6 | 3,704.6 | 984.0 | 36.2 |
| வரியல்லா அரசிறை | 328.3 | 326.3 | -2.0 | -0.6 |
| கொடைகள் | 25.5 | 60.0 | 34.5 | 135.2 |
| செலவினமும் தேறிய கடன்வழங்கலும் | 5,356.6 | 6,130.7 | 774.1 | 14.5 |
| மீண்டெழும் | 4,699.7 | 5,339.9 | 640.3 | 13.6 |
| மூலதனமும் தேறிய கடன்வழங்கலும் | 656.9 | 790.8 | 133.9 | 20.4 |
| இதில் அரச முதலீடு | 932.7 | 817.1 | -115.7 | -12.4 |
| நடைமுறைக் கணக்கு மீதி | -1,650.9 | -1,309.1 | | |
| ஆரம்ப மீதி | 173.3 | 649.6 | | |
| திரண்ட இறை மீதி | -2,282.3 | -2,039.9 | | |
| மொத்த நிதியிடல் | 2,282.3 | 2,039.9 | -242.3 | -10.6 |
| வெளிநாட்டு நிதியிடல் | 494.7 | 333.2 | -161.4 | -32.6 |
| உள்நாட்டு நிதியிடல் | 1,787.6 | 1,706.7 | -80.9 | -4.5 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக (ஆ)(இ) | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | 11.2 | 13.7 | | |
| மொத்த அரசிறை | 11.1 | 13.5 | | |
| வரி அரசிறை | 9.9 | 12.4 | | |
| வரியல்லா அரசிறை | 1.2 | 1.1 | | |
| கொடைகள் | 0.1 | 0.2 | | |
| செலவினமும் தேறிய கடன்வழங்கலும் | 19.5 | 20.5 | | |
| மீண்டெழும் | 17.1 | 17.9 | | |
| மூலதனமும் தேறிய கடன்வழங்கலும் | 2.4 | 2.6 | | |
| இதில் அரச முதலீடு | 3.4 | 2.7 | | |
| நடைமுறைக் கணக்கு மீதி | -6.0 | -4.4 | | |
| ஆரம்ப மீதி | 0.6 | 2.2 | | |
| திரண்ட இறை மீதி | -8.3 | -6.8 | | |
| மொத்த நிதியிடல் | 8.3 | 6.8 | | |
| வெளிநாட்டு நிதியிடல் | 1.8 | 1.1 | | |
| உள்நாட்டு நிதியிடல் | 6.5 | 5.7 | | |


*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) 2025 மார்ச் 18ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (அடிப்படை ஆண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.

**2024ஆம் ஆண்டில் அரசிறையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெயரளவு நியதிகள் மற்றும் மொ.உ.உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இதற்கமைய, பெயரளவு நியதிகளில், அரசிறை, 2024ஆம் ஆண்டில் 32.2 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில், 2 சதவீதப் புள்ளிகளுக்கு மேலான ஆண்டு அதிகரிப்புடன், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசிறை, 2024ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 13.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. பிரதானமாக, வருவான வரிகள், பெறுமதி சேர் வரி, கலால் தீர்வைகள், இறக்குமதி தீர்வைகள், விசேட பண்டத் தீர்வை மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு தீர்வை போன்றவற்றின் அதிகரித்த வரி அரசிறைச் சேகரிப்புக்கள் காரணமாக 2024ஆம் ஆண்டில் அரசிறையில் இக்கணிசமான அதிகரிப்பு

23 2024ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை மதிப்பீடுகள் வங்கி மீள் மூலதனமயப்படுத்தலுக்கான ரூ.450 மில்லியன் கொண்ட ஒதுக்கீட்டினை உள்ளடக்குகின்றன.

வரைபடம் 1.23: அரசிறையின் உள்ளமைப்பு - 2024




*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

ஏற்பட்டது. தனியாள் மற்றும் கம்பனி வரிகள் தொடர்பில் 2023ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களின் முழுத் தாக்கத்தினாலும் பொருளாதார நடவடிக்கைளின் படிப்படியான இயல்புநிலையடைதலினாலும் 2024ஆம் ஆண்டில் வருமான வரிகளின் அதிகரிப்பு தூண்டப்பட்டிருந்தது.

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தொடர்ச்சியான அரசிறை நிர்வாக மேம்பாடுகள் 2024ஆம் ஆண்டில் அதிகரித்த வரிச் சேகரிப்பிற்கு பங்களித்துள்ளன.** உயர் செல்வமுள்ள தனியாட்கள் பிரிவு (High Wealth Individual Unit), மற்றும் முற்பண வருமான வரி கண்காணிப்பு பிரிவினைத் தாபித்தல் மற்றும் இணங்குவித்தலை மேம்படுத்துவதற்கான கட்டாய வரியைப் பதிவுசெய்தல் தேவைப்பாடு என்பன முக்கிய முன்னெடுப்புக்களில் உள்ளடங்குகின்றன. மேலும், பதிவாளர் நாயகத் திணைக்களம், கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உள்ளடங்கலாக அனைத்து நிதியியல் நிறுவனங்கள் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை போன்றன வரித் தளத்தை விரிவுபடுத்துவதற்கு ஆதரவளிக்கும்வகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தகவல்களைப் பரிமாற்றுவதற்கு தற்போது தேவைப்படுத்தப்படுகின்றன. 2023ஆம் ஆண்டின் 879,778 இலிருந்து 2024இன் இறுதியிளவில் 1,485,777 இற்கு நிறுவன மற்றும் நிறுவனம்சாரா வகைகள் ஆகிய இரண்டிலும் பதிவுசெய்யப்பட்ட வருமான வரி செலுத்துநர்களின் அதிகரிப்பில் இம்முயற்சிகள் பிரதிபலிக்கப்பட்டன.

இதற்கமைய, 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் 12.6 சதவீதத்தினால் (ரூ.114.8 பில்லியனால்) வருமான வரிச் சேகரிப்பு அதிகரித்தது. அதேவேளை, 2024ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரி அரசிறைச் சேகரிப்பின் அதிகரிப்பிற்கு பெரும்பாலான பெறுமதிசேர் வரி விலக்குகளை நீக்குதல், பெறுமதிசேர் வரிப் பதிவு எல்லையை ஆண்டிற்கு ரூ.80 மில்லியனிலிருந்து ஆண்டிற்கு ரூ.60 மில்லியனிற்கு குறைத்தல் மற்றும் நிலையான பெறுமதிசேர் வரி வீதத்தை 18 சதவீதமாக மேல்நோக்கி திருத்துதலுடன் இணைந்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்பு என்பன கணிசமானளவில் பங்களித்துள்ளன. இதன்விளைவாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் பெறுமதிசேர் வரிச் சேகரிப்பு 88.6 சதவீத வளர்ச்சியைப் (ரூ.615 பில்லியனால்) பதிவுசெய்தது. பெறுமதிசேர் சேகரிப்பை அதிகரிக்கின்றதை இலக்காகக் கொண்டு பெறுமதிசேர் இணங்குவிப்பு மேம்படுத்தல் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முயற்சிகளினால் இச்சீர்த்திருத்தங்கள் மேலும் மேம்படுத்தப்பட்டன. அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 27.4 சதவீதம் கொண்ட (ரூ.128.9 பில்லியன்) அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2023ஆம் ஆண்டு யூனிலிருந்து ஆண்டு பணவீக்கம் சீராக்கப்பட்ட சுட்டெண் முறையின் அறிமுகப்படுத்தலைத் தொடர்ந்து, ஆண்டின் தொடக்கத்தில் குடிவகை மீதான கலால் தீர்வையின் 14 சதவீத மேல்நோக்கிய திருத்தமே இவ் அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்திருந்தது. மேலும், 2024ஆம் ஆண்டில் அனைத்து வகையான பெற்றோலிய உற்பத்தி வகைகளின் தேறிய அதிகரிப்பின் காரணமாக பெற்றோலியம் மீதான கலால் தீர்வை சேகரிப்பின் உயர்வும் இவ்வதிகரிப்பிற்கு பங்களித்திருந்தது. 2024ஆம் ஆண்டில் சுங்க இறக்குமதி வரிகள் மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வை உள்ளடங்கலாக பன்னாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறை முறையே, 5.7 சதவீதத்தினாலும் 124.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது. 2023 மாச்சில் இடம்பெற்ற சுங்க இறக்குமதித் தீர்வைகளின் திருத்தத்தின் தாக்கத்தினாலும் உயர்ந்தளவான இறக்குமதி அளவுகளுடன் இணைந்து சீனி மற்றும் உருளைக் கிழங்குகளுக்கான சிறப்புப் பண்டத் தீர்வை

வீதங்களின் மேல்நோக்கிய திருத்தத்தின் மூலமும் இவ் அதிகரிப்பு தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, இறக்குமதிகள் அதிகரித்ததினாலும் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் வீதங்களின் மேல்நோக்கிய திருத்தம் ஆகியவற்றின் காரணமாக செஸ் அரசிறையும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து 41.9 சதவீத வளர்ச்சியைக் காண்பித்தது. எனினும், 2023ஆம் ஆண்டில் எதிர்வுத் தீர்வைகளை குறைப்பதற்கு 5 ஆண்டுகளுக்குள் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையை கட்டம் கட்டமாக அகற்றுவது என்ற கொள்கை தீர்மானத்தை மேற்கொண்டதன் காரணமாக துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறை 3.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், 2022ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வருவாய் மேம்படுத்தல் பொதியின் பாகமாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வரியான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு தீர்வை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் 16.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதற்கு முக்கியமாக 2024 சனவரி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பதிவுசெய்தல் மட்டத்தைக் குறைப்பதன் மூலம் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு தீர்வையுடன் தொடர்புடைய சீர்திருத்தங்கள் பங்களித்திருந்தது. 2024ஆம் ஆண்டில் வரி அரசிறை சேகரிப்பு குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தபோதிலும், 2024 தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் அரசிறை மதிப்பீட்டை (ரூ.3,820 பில்லியன்) விட ரூ.115 பில்லியன் (3 சதவீதம்) குறைவாகவிருந்தது. எனினும், மத்திய அரச வரி அரசிறை பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் ரூ.3,700 பில்லியனாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமாகவிருந்தது. 2023இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வருமான வரி சீர்த்திருத்தங்களைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டில் நேரடி மற்றும் மறைமுக வரிகளுக்கான விகிதம் நேரடி வரிகளை நோக்கி மாற்றமடைந்து 33:67 விகிதத்தை அடைந்திருந்தாலும் 2024ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய பெறுமதிசேர் வரி சீர்திருத்தங்களுடன் வரிக் கட்டமைப்பு மீண்டும் மறைமுக வரிகளை நோக்கி நகர்ந்து 28:72 என்ற விகிதத்தைப் பதிவுசெய்தது. வரித் தளத்தையும் இணக்கத்தையும் விரிவுபடுத்துவதற்கு தற்போது கருத்திற்கொள்ளப்படும் வழிமுறைகள் எதிர்காலத்தில் இவ்விகிதத்தை படிப்படியாக மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.


**அதேவேளை, வரியல்லா அரசிறை பெயரளவு நியதிகளிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதத்திலும் சிறிதளவில் குறைவடைந்தமைக்கு முக்கியமாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இலாபங்கள் மற்றும் பங்குலாபங்களிலிருந்தான அரசிறைகளின் குறைப்பு காரணமாக அமைந்தது.** 2024ஆம் ஆண்டில், அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம், அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள் என்பனவற்றிலிருந்தான வரியல்லா அரசிறையிலிருந்து பதிவுசெய்யப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியினால் இக்குறைப்பின் தாக்கம் மிதமடைந்திருந்தது.

## செலவினம், மற்றும் தேறிய கடன்வழங்கல்

**2024ஆம் ஆண்டின் பெயரளவு நியதிகளிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதத்திலும் தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும் குறிப்பிடத்தக்க குறைப்பைப் பதிவுசெய்திருந்தன.** 2024ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் வரவுசெலவு மதிப்பீட்டின் 88 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறிய அதேவேளை மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது பெயரளவு நியதிகளில் 14.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. அதேவேளை, 2024ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் நியதிகளில் செலவினம் 20.5 சதவீதத்திற்கு சிறிதளவில் அதிகரித்தது. 2024ஆம் ஆண்டின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் 50.4 சதவீதம் கொண்ட பங்கொன்றுடன், வட்டிச் செலவினம் 2024ஆம் ஆண்டில் தொடர்ந்து உயர்வாக காணப்பட்டது. இது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 52.3 சதவீதம் கொண்ட பங்குடன் ஒப்பிடுகையில் சிறிதளவு முன்னேற்றமாக விளங்குகின்றது. 2024ஆம் ஆண்டில் அரசப் பிணையங்கள் சந்தையில் நிலவிய குறைந்தளவான வட்டி வீதங்களுக்காக சீராக்கப்பட்டு, 2024ஆம் ஆண்டில் உள்நாட்டு வட்டிச் செலவினம் 1.8 சதவீதத்தினால் (ரூ. 43.1 பில்லியனளவில்) சிறிதளவில் வீழ்ச்சியடைந்த அதேவேளை 2024இல் வெளிநாட்டு

1

**வரைபடம் 1.24: அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2024**




*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

வட்டிச் செலவினம் ரூ.277.0 பில்லியனால் அதிகரித்தது. வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பின் கிட்டத்தட்ட இறுதிப்படுத்தலுடன் ஆண்டின் பிற்பகுதியில் வெளிநாட்டு வட்டி கொடுப்பனவின் அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, பொருளாதாரச் சிக்கல்களின்போது பொருளாதாரத்தில் பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஓரங்கட்டப்பட்ட பிரிவுகளின் மீது சிறப்புகவனம் செலுத்தி, ஓய்வூதியக் கொடுப்பனவுகள், சமூகப் பாதுகாப்பு வலைகள் மற்றும் இலவச மருத்துவம் ஆகியவற்றிற்கான உயர்ந்தளவான செலவினங்கள் காரணமாக, 2024ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் உதவுதொகைகள் மற்றும் பரிமாற்றங்கள் 22.8 சதவீதத்தினால் (ரூ. 228.6 பில்லியன்) அதிகரித்தன. 2024ஆம் ஆண்டில், *அஸ்வெசும* நலத்திட்டத்திற்காக ரூ. 186.4 பில்லியன் செலவிடப்பட்டு, மொத்த உதவுதொகைகளும் மற்றும் பரிமாற்றல்களில் 15.1 சதவீதத்தை வகைகூறியது. இதில் 1,717,262 தெரிவுசெய்யப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான பணப் பரிமாற்றங்கள் மற்றும் முதியவர்கள், வலதுகுறைந்தவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு செய்யப்பட்ட வகைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ஆகியவை உள்ளடங்கும்.

**2024ஆம் ஆண்டில் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரித்ததன் காரணமாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் சம்பளங்கள் மற்றும் கூலிகளுக்கான செலவினம் 13.5 சதவீதத்தினால் (ரூ.126.6 பில்லியன்) அதிகரித்திருந்தது.** மூலதனச் செலவு மற்றும் தேறிய கடன்வழங்கல் 2024ஆம் ஆண்டில் 20.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தாலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மூலதனச் செலவு 15.0 சதவீதத்தினால் (ரூ. 137.0 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது. 2024ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் கிடைக்கப்பெறாததன் காரணமாக, மூலதனச் செலவு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டில் 61.6 சதவீதமாக மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டதால், ரூ.1,260 பில்லியன் கொண்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டை விடக் கணிசமாகக் குறைந்தது. இதற்கமைய, மூலதனச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.6 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. இறைக் கட்டுப்பாடுகள் காரணமாக மூலதனத் செயற்றிட்டங்களுக்கான குறைந்த செலவினம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்பு மற்றும் சமூக அபிவிருத்தியில் நீண்டகால பாதக விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.


### 1.5.3 வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடல்

**2024ஆம் ஆண்டில் அரசாங்கம் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக முக்கியமாக உள்நாட்டு மூலங்களைத் தொடர்ந்து தங்கியிருந்தமைக்கு பெரும்பாலும் வெளிநாட்டு நிதியுதவியை அணுகுவதிலுள்ள தடைகள் காரணமாக அமைந்தன.** மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடலானது முக்கியமாக அரசப் பிணையங்கள் மூலம் பெறப்பட்டது. இதற்கமைய, திறைசேரி உண்டியல்களிலிருந்தான தேறிய நிதியிடல் 2024 இல் ரூ. 266.1 பில்லியனாக விளங்கி, 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 2,058.6[24] பில்லியனிலிருந்து குறிப்பிடத்தக்க குறைப்பைப் பதிவுசெய்தது. அதே நேரத்தில், திறைசேரி முறிகளிலிருந்து தேறிய நிதியிடல் 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.692.3 பில்லியனிலிருந்து 2024இல் ரூ.1,544.3[24] பில்லியனிற்கு அதிகரித்தது. அதேவேளை, வெளிநாட்டு நிதியிடல் தொடர்பில், ஆசிய அபிவிருத்தி வங்கி, மீள்கட்டடவாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி, யப்பான் அரசாங்கம் மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு போன்றவற்றிலிருந்தான நிதியளித்தல் உள்ளடங்கலாக, இருதரப்பு மற்றும் பலதரப்பிலான கடன்கொடுநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 465.4 பில்லியனுக்கு மேலதிகமாக (ஏறத்தாழ


24 2023ஆம் ஆண்டிற்கான அரசப் பிணையங்களுடன் தொடர்புடைய எண்கள் உள்நாட்டு படுகடன் மேம்படுத்தல் திட்டத்துடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களின் தாக்கத்தை உள்ளடக்கவில்லை.

1


## சிறப்பு வரைபடம் 1.8:
## அரசிறை, செலவினம் மற்றும் முக்கிய இறை நிலுவைகள்





மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு




மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு




மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு




மூலங்கள்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

* ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024இன் அட்டவணை 1.21இன் அடிக்குறிப்புக்களைப் பார்க்கவும்.

பல தசாப்தங்களாக நீடித்த இறைத் துறை சமமின்மைகள் நாள்பட்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகள் உள்ளடங்கலாக, 2022இல் உயர்வினை அடைந்தது. தொடர்ச்சியான இறைச் சரிவுகள், கொள்கைத் தவறுகள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுத்திலிருந்து பொருளாதார வீழ்ச்சி ஆகியவற்றால் நெருக்கடி உந்தப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் வகையில், அரசிறை அடிப்படையிலான இறைச் சீராக்கம் மீதான கவனம்செலுத்தலுடன், அரசாங்கம் 2022 நடுப்பகுதியிலிருந்து பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் ஒருங்கிணைப்பு முயற்சிகளை நடைமுறைப்படுத்தியது. இம்முயற்சிகள் வலுவான அரசிறை வளர்ச்சி, கட்டுப்படுத்தப்பட்ட செலவினங்கள் மற்றும் முக்கிய இறை நிலுவைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஆகியவற்றால் குறிப்பிடத்தக்க முழுமையான திருப்பத்திற்கு வழிவகுத்துள்ளன.

2024ஆம் ஆண்டளவில், இறைத் துறை தொடர்ச்சியாக இரு ஆண்டுகளுக்குச் சாதகமான முதலாந்தர நிலுவையொன்றினை அடைந்தது.

எதிர்பார்க்கப்படும் இறைத் திரட்சி மற்றும் படுகடன் குறைப்பு முயற்சிகளிலிருந்தான ஏதேனும் எதிர்பாராத விலகல்கள் கடின உழைப்பினால் பெறப்பட்ட பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும் என்பதால், கொள்கை மீள்திரும்பல்களின்றி இவ் உத்வேகத்தைத் தக்கவைத்துக்கொள்வது மிகவும் முக்கியமானது.

ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) வரவுசெலவுத் திட்ட ஆதரவின் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் அரசாங்கம் ரூ.101.5 பில்லியனைப் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 336 மில்லியன்) பெற்றுக்கொண்டது. அரசாங்கத்தின் பொருளாதார உறுதிப்படுத்தல் திட்டத்தை ஆதரிப்பதற்கும், சமூக பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்துவதற்கும், மேம்பாட்டுத் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவதை எளிதாக்குவதற்கும் இந்நிதிகள் வழங்கப்பட்டன.

1

### 1.5.4. மத்திய அரசப் படுகடன்[25]

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசப் படுகடன் 2023இன் 104.7 சதவீதத்திலிருந்து 2024இறுதியளவில் 96.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கியமாக பெயரளவு மொ.உ.உற்பத்தி வலுவான வளர்ச்சியினால் தூண்டப்பட்டமையும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் மீது இலங்கை ரூபா உயர்வடைந்ததன் தாக்கம் என்பனவும் காரணமாக அமைந்தன.** இதற்கமைய, 2024இறுதியளவில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுப் படுகடனும் வெளிநாட்டுப் படுகடனும் 2023இன் இறுதியில் முறையே 62.2 சதவீதத்துடனும் 42.5 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் முறையே 61.2 சதவீதத்திற்கும் 34.9 சதவீதத்திற்கும் குறைவடைந்தன. எனினும், மீளாய்வுக்குரிய காலப்பகுதியில், உள்நாட்டு படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டுப் படுகடனின் வீழ்ச்சியை எதிரீடுசெய்தமையினால், பெயரளவு நியதிகளில், மொத்தப் படுகடன் 2024ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூ.28.7 ரில்லியனாக விளங்கி, பரந்தளவில் மாற்றமின்றி காணப்பட்டன. வெளிநாட்டு நிதியிடலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலுக்கு மத்தியில், அரசாங்கம் தமது வரவுசெலவுதிட்டப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக உள்நாட்டுச் சந்தையில் அதிகமாக தங்கியிருந்தமை மொத்த உள்நாட்டுப் படுகடனில் பெயரளவிலான அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். அரசியல் மற்றும் இறைத் துறைகளில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளின் நீக்கத்துடன், நீண்ட கால அரசப் பிணையங்களுக்கான சந்தை ஆர்வம் மேம்பட்டது. இது 2024ஆம் ஆண்டில் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்ததன் மூலம் நீண்ட முதிர்ச்சி காலங்களைக் கொண்ட சாதனங்களின் மூலம் படுகடனைத் திரட்டுவதற்கான அரசாங்கத்தின் முன்னுரிமைக்கு ஏற்ப அமைந்தது. நீட்டிக்கப்பட்ட முதிர்ச்சி காலங்களால் துணையளிக்கப்பட்டு மொத்த உள்நாட்டுப் படுகடனின் சதவீதமாக நடுத்தர மற்றும் நீண்ட கால உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2023 திசெம்பரின் 74.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டின் இறுதியில் 78.9 சதவீதமாக மேம்பட்டது. அதேவேளை, 2023இன் இறுதியுடன் ஒப்பிடுகையில், 2024இன் இறுதியில்

**அட்டவணை 1.21: அரசின் வெளிநின்ற படுகடன் (அ)(ஆ)**

| விடயம் | 2023 | 2024 (இ) |
|---|---|---|
| ரூ. பில்லியன் | | |
| **உள்நாட்டு படுகடன் (ஈ)** | **17,051.9** | **18,309.7** |
| முதிர்வு காலத்தின்படி | | |
| குறுங்காலம் (உ) | 3,616.2 | 3,220.1 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் (ஊ)(எ) | 13,435.6 | 15,089.6 |
| நிறுவனங்களின்படி | | |
| வங்கி | 9,102.8 | 9,411.2 |
| வங்கியல்லா | 7,506.3 | 8,158.5 |
| மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒதுக்கீடு (ஏ)(ஐ) | 442.7 | 739.9 |
| **வெளிநாட்டு படுகடன் (ஒ)(ஓ)(ஔ)** | **11,644.1** | **10,429.0** |
| பல்புடை | 3,817.0 | 3,773.5 |
| இருபுடை மற்றும் வர்த்தக | 7,827.1 | 6,655.6 |
| நாணயங்களின்படி | | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 1,737.1 | 1,651.1 |
| ஐ.அ.டொலர் | 7,943.9 | 7,133.4 |
| யப்பானிய யென் | 819.4 | 678.6 |
| யூரோ | 396.6 | 334.2 |
| ஏனையவை | 747.1 | 631.7 |
| **மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்** | **28,695.9** | **28,738.7** |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக (க) | | |
| **மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்** | **104.7** | **96.1** |
| **உள்நாட்டு படுகடன்** | **62.2** | **61.2** |
| **வெளிநாட்டு படுகடன்** | **42.5** | **34.9** |

*மூலங்கள்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: நிதி அமைச்சின் கீழ் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் தாபிக்கப்பட்டதுடன் தற்போது இலங்கையின் பொதுப் படுகடனை பதிவுசெய்து வெளியிடுவதற்கான பொறுப்பானது, 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளால் ஆணையிடப்பட்டவாறு, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் கீழ் வருகின்றது. இதற்கமைய, படுகடன் தரவுகளுக்கான உத்தியோகபூர்வ மூலமாக பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினால் வெளியிடப்படும் காலாண்டு புள்ளிவிபர படுகடன் திரட்டு காணப்படுகின்றது. தரவுகளின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக, நிதி அமைச்சிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த அட்டவணை வடிவமைப்பினை மத்திய வங்கி தொகுக்கின்றது.

(அ) 2014 பன்னாட்டு நாணய நிதியத்தால் அரச நிதி புள்ளிவிபரங்களுக்கான கையேட்டில் அரச படுகடன் புள்ளிவிபரங்களை தொகுத்தல் தொடர்பான வழிகாட்டல்களுக்கு அமைய வதிவோர் வசமுள்ள இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உள்நாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், படுகடன் புள்ளிவிபரங்கள் தேறிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன (வைப்புக்கள் நீங்கலாக).

(ஆ) இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் பணிக் கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் பணிக்கொடுப்பனவுகள் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டு பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளன.

(இ) தற்காலிகமானது

(ஈ) 2023 தொடக்கம், உள்நாட்டு படுகடன் தொகுப்பு முறை மாற்றப்பட்டதுடன் இது நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் உறுதிப்படுத்தப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

(உ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக

(ஊ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமுள்ள திறைசேரி முறிகள் நீங்கலாக

(எ) 2023இற்கு பின்னரான தரவுகள் மத்திய அரச படுகடனினுள் உள்ளீர்க்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடனின் வெளிநின்ற நிலுவையினை உள்ளடக்குகின்றதுடன் 2024இற்கான தரவுகள் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2024இன் நான்காம் காலண்டிற்கான காலாண்டு புள்ளிவிபர படுகடன் திரட்டின்படி அபிவிருத்தித் திட்ட கடனாக வகைப்படுத்தப்பட்ட ரூபா 16,267 மில்லியன் வெளிநின்ற நிலுவையை உள்ளடக்குகின்றது.

(ஏ) உண்மையான சொத்துரிமை நிறுவப்பட முடியாதவைகளுக்கான மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழான பிணைய இருப்புக்கள் உள்ளடங்கலாக

(ஐ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழான வைப்புக்கள் உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தனியான முதனிலை முகவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஒ) 2023 மற்றும் 2024 இற்கான வெளிநாட்டு படுகடன் புள்ளிவிபரங்கள் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் வகைப்படுத்தல் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பேணப்பட்டு வந்த பொதுநலவாய செயலக படுகடன் பதிவிடல் மற்றும் முகாமைத்துவ முறைமையிலிருந்து 2024 பெப்ரவரி 26 மற்றும் 2025 பெப்ரவரி 27 அன்று பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டன.

(ஓ) இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் மற்றும் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் கீழ் முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு வெளிநின்ற செயற்றிட்டக் கடன்கள் 2022 திசெம்பரிலிருந்து மத்திய அரச படுகடனின் கீழ் உள்ளீர்க்கப்பட்டன.

(ஔ) வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பின் தாக்கத்தினை 2024இன் தரவுகள் பிரதிபலிக்கின்றது.

(க) 2025 மார்ச் 18ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் (அடிப்படையாண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன. 2023இற்கான மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகள் 2025 மாச்சு 18ஆம் நாளன்று வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தியினை அடிப்படையாகக்கொண்டு திருத்தப்பட்டது.

பெயரளவு நியதிகளில் வெளிநாட்டுப் படுகடன் குறைவடைந்தமையானது முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபா உயர்வடைந்ததன் மூலம் முக்கியமாக தூண்டப்பட்டது. இதன்விளைவாக, மொத்த மத்திய அரசப் படுகடனின்

25 அரசாங்கத்தின் படுகடன் புள்ளிவிபரங்கள் அரசாங்கத்தின் தேறிய வங்கி வைப்புக்களில் எடுத்துக்காட்டப்படுகின்றதுடன் இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் தீர்ப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் தீர்ப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் தீர்ப்பனவுகள் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்ட பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கின்றன.

வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் பங்கு 2023இன் இறுதியில் 40.6 சதவீதத்திலிருந்து 2024இன் இறுதியில் 36.3 சதவீதமாகக் குறைவடைந்து, மிகவும் சமநிலையான படுகடன் உள்ளமைப்பை நோக்கிய மாற்றத்தையும் வெளிப்புற பாதிப்பைக் குறைத்ததையும் பிரதிபலித்தது.

**2024ஆம் ஆண்டில், இலங்கை அதன் படுகடன் மறுசீரமைப்புச் செயல்முறையை பெரும்பாலும் நிறைவுசெய்யும் கட்டத்திற்கு கொண்டுவந்தமையினால் இது குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்ததுடன், அதன் படுகடன் ஸ்தம்பித்த நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தது.** இலங்கை இரு ஆண்டு பேச்சுவார்த்தைகளை முடிவுக்குக் கொண்டுவந்து அலுவல்சார் கடன்கொடுநர் குழுக்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு, சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கியுடன் படுகடன் கையாளல் உடன்படிக்கையை இறுதிப்படுத்தியமை, 2024 யூனில் இச்செயன்முறையின் முக்கிய மைல்கல்லாக குறிக்கப்படுகின்றது. அன்றிலிருந்து, நாடுவாரியான படுகடன் கொடுப்பனவுகளை ஆரம்பிப்பதற்கு இருதரப்பு அடிப்படையில் கலந்துரையாடல்கள் தொடர்கின்றன. முதிர்ச்சி நீடிப்புகள், 2028 வரை காணப்படும் மூலதனத்திற்கான சலுகைக் காலப்பகுதி, குறைக்கப்பட்ட வட்டி வீதங்கள் மற்றும் 2043 இல் செலுத்தவேண்டிய இறுதி மீள்கொடுப்பனவுடன் கூடிய வளர்விகித தீர்ப்பனவு கட்டமைப்பு போன்ற படுகடன் நிவாரண வழிமுறைகளை அலுவல்சார் கடன்கொடுநர்களுடனான உடன்படிக்கை உள்ளடக்கியுள்ளது. மேலும், சீன அபிவிருத்தி வங்கி பொறுப்புகள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 2024திசெம்பரில் நாட்டிற்கான பன்னாட்டு முறியின் பரிமாற்றத்தின் வெற்றிகரமான நிறைவின் மூலம் வெளிநாட்டுப்படுகடன் மறுசீரமைப்பில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டது. நாட்டிற்கான பன்னாட்டு முறி மறுசீரமைப்பு ஐ.அ.டொலர் 3.0 பில்லியன் கொண்ட முன்கூட்டிய படுகடன் இருப்பு குறைப்பு உள்ளடங்கலாக இலங்கைக்கு குறிப்பிடத்தக்க நிதியியல் நிவாரணத்தை[26] வழங்கியது. இது பேரண்ட - இணைக்கப்பட்ட முறி[27] அம்சங்களின் நிபந்தனைகளுக்கமைய, பன்னாட்டு நாணய நிதிய அடிப்படையுடன் ஒப்பிடும்போது பொருளாதார வீழ்ச்சியில், ஐ.அ.டொலர் 4.3 பில்லியனிற்கு சாத்தியமானளவில் அதிகரித்து, பொருளாதாரத்தின் மிகையான செயற்றிறன் சந்தர்ப்பத்தில், ஐ.அ.டொலர் 1.8 பில்லியனிற்கு குறைவடைந்தது. இதற்குமேலதிகமாக, நாட்டிற்கான பன்னாட்டு முறி மறுசீரமைப்பு இலங்கைக்கு நான்கு ஆண்டுகால பன்னாட்டு நாணய நிதியத் திட்டக் காலப்பகுதியில் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளில் ஐ.அ.டொலர் 9.6 பில்லியன் குறைப்பினையும் இலங்கை முறிகளின் கூப்பன் வீதத்தின் 4.3 சதவீதத்திற்கான 33 சதவீத குறைப்பினையும் ஏறத்தாழ ஆறு ஆண்டுகாலங்களில் சராசரி முதிர்ச்சி கட்டமைப்பினை நீடிப்பதனையும் வழங்குகின்றது. நாட்டிற்கான பன்னாட்டு முறி மறுசீரமைப்பை வெற்றிகரமாக செயல்படுத்தியதையும், இறை உறுதிநிலைப்படுத்தல் தொடர்பில் இலங்கையின் முன்னேற்றத்தை அங்கீகரித்ததையும் தொடர்ந்து, முன்னணி பன்னாட்டு தரமிடல் நிறுவனங்கள் 2024 திசெம்பரில் நாட்டின் வெளிநாட்டு நாணய நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்களை தரமுயர்த்தின. இதற்கமைய, பிட்ச் தரமிடல்கள் இலங்கையின் மதிப்பீட்டை RD இலிருந்து CCC+ ஆகவும், மூடிஸ் தரமிடல்கள் அதன் தரமிடல்களை Caa1 இலிருந்து Ca ஆகவும் தரமுயர்த்தின. இந்நேர்மறையான முன்னேற்றங்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஆதரவுடன்கூடிய சீர்திருத்த திட்டத்திற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன், இலங்கை கூறப்பட்ட திட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள படுகடன் உறுதிநிலை இலக்குகளை நோக்கி அதன் முன்னேற்றத்தை மேம்படுத்தி வருகிறது.

26 2025 சனவரி 02 அன்று திகதியிடப்பட்ட திறைசேரிச் செயலாளரால் வெளியிடப்பட்ட “இலங்கையின் பொதுப் படுகடன் மறுசீரமைப்பு: இறை மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான தேவை, ஒட்டுமொத்த பெறுபேறு, மற்றும் எதிர்கால கொள்கை வழிகாட்டுதல்” என்ற வெளியீட்டிற்கமைவாக.

27 பேரண்ட இணைப்பு முறி என்பது ஒரு படுகடன் சாதனமாவதுடன் இதன் கொடுப்பனவுகள் வழங்குபவரின் பொருளாதார செயலாற்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில், 2024 ஒத்தோபர் 4 அன்று திகதியிடப்பட்ட “இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை மறுசீரமைத்தல் - அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்” என்ற நிதி அமைச்சின் ஊடக அறிக்கையிலிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.